# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 100 மாசி 22ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 06 மார்ச் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

விலை: 20
பக்கங்கள்: 28


## தொடருந்து மோதி ஒருவர் உயிரிழப்பு

*பரந்தனில் நேற்றுச் சோகம்*

கிளிநொச்சி, மார்ச் 6
கிளிநொச்சி, பரந்தனில் நேற்று நடந்த தொடருந்து விபத்தில் ஒருவர் » 23


# அம்பாறையைத் தொடர்ந்து கண்டியிலும் இனக் கலவரம்

- ஊரடங்குச் சட்டம் பிறப்பிப்பு
- பள்ளிவாசல்கள் நொறுக்கப்பட்டன
- வீதிகளில் ரயர்கள் எரிப்பு
- பதற்றத்தின் உச்சியில் கண்டி

கொழும்பு, மார்ச் 6

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் மீதான தாக்குதல் நடைபெற்று ஒரு வாரத்துக்குள்ளேயே கண்டி மாவட்டத்தில் முஸ்லிம்கள் மீது கடும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. சிங்கள மற்றும் முஸ்லிம் இனச் சமூகங்கள் இடையேயான மோதல் உச்சநிலைக்குச் சென்றுள்ளது.

முஸ்லிம் இளைஞர்கள் குழுவொன்றின் தாக்குதலுக்கு » 23



மேலும் படங்கள் பக்கம் 02

## நேற்றுமுன்தினமே தாக்குதல் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 6
பெரும்பான்மையின இளைஞன் ஒருவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவே முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் ஆரம்பமாகிவிட்டன என்று கூறப்படுகின்றது.
பொதுபலசேனா » 06

## நடந்தது என்ன?

கொழும்பு, மார்ச் 6
கடந்த மாதம் 22ஆம் திகதி கண்டியில் நடந்த விபத்து ஒன்றே நேற்றைய பெரும் கலவரத்துக்குக் காரணமாகியுள்ளது. பாரவூர்தி பின்நோக்கி (றிவேர்ஸ்) செலுத்தப்பட்டது. பின்புறம் நின்ற முச்சக்கர வண்டியில் அது மோதியதில் பக்கக் கண்ணாடி சேதமானது. பாரவூர்திச் சாரதியான சிங்கள இளைஞன், முச்சக்கர வண்டியில் இருந்த முஸ்லிம் இளைஞர்களிடம் ஒரு தொகைப் பணத்தை இழப்பீடாக வழங் » 23

## கட்டுமீறிய கலவரத்தை கட்டுப்படுத்த ஊரடங்கு

கொழும்பு, மார்ச் 6
கண்டியில் ஏற்பட்ட கலவரம் கட்டுமீறியதை அடுத்து பொலிஸாரால் ஊரடங்குச் சட்டம் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அறிவிக்கப்பட்டது. நேற்று மாலை 3 மணியிலிருந்து இன்று காலை 6 மணி வரையிலான 15 மணித்தியாலங்கள் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. » 23

## ஞானசாரரும் கண்டியில்

கொழும்பு, மார்ச் 6
கண்டி, திகன தெல்தெனிய பிரதேசத்தில் உயிரிழந்த பெரும்பான்மையின நபரின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காகப் பொதுபலசேனா » 23

## கஞ்சா கொடுத்த சிறை அலுவலர் சிக்கினார்

யாழ்ப்பாணம், மார்ச் 6
யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் பணிபுரியும் உத்தியோ » 23

## நீதிமன்ற உத்தரவையும் மீறி கண்டியில் இறுதி ஊர்வலம்!

*பொலிஸ் நிலையம் முற்றுகை*

கொழும்பு, மார்ச் 6
உயிரிழந்த சிங்கள இளைஞனின் பூதவுடலை நகருக்குள் ஊர்வலமாகக் கொண்டு செல்வதற்கு நீதிமன்றம் அனுமதி மறுத்திருந்தது. அதனையும் மீறி இளைஞனின் உடல் ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டதுடன், நேற்று முந்தி » 06

## தாக்குதல்களை கட்டுப்படுத்தாத ஊரடங்குச் சட்டம்

கொழும்பு, மார்ச் 6
பொலிஸ் ஊரடங்கு நேற்று பி.ப. 3 மணிக்கு பிறப்பிக்கப்பட்ட பின்னரும் கண்டியின் நகர்ப் பகுதி தவிர்ந்து கிராமப் பகுதிகளில் உள்ள முஸ்லிம் குடியிருப்புக்கள் மீது தொடர்ந்தும் கல்வீச்சுத் தாக் » 23

## கண்டி மாவட்ட பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

கண்டி, மார்ச் 6
கண்டி நிர்வாக மாவட்டத்துக்கு உட்பட்ட அனைத்துப் பாடசாலைகளுக்கும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலரால் இந்த » 23

## கண்டி விரைந்தார் ஹக்கீம்

கொழும்பு, மார்ச் 6
கண்டி மாவட்டத்திலுள்ள திகன, தெல்தெனிய பிரதேசங்களில் பதற்றச் சூழ்நிலை ஏற்பட்டுள்ள நிலையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அந்த மாவட்டத்தை பிரதிநிதித் » 23

## வவுனியாவை அச்சுறுத்தும் தவறான உயிர்மாய்ப்புக்கள்

*கடந்த ஆண்டில் 418 பேர் உயிரிழப்பு*
*இந்த ஆண்டு மார்ச் வரை 36 பேர் சாவு*

வவுனியா. மார்ச்.6
2017ஆம் ஆண்டு வவுனியாவில் மட்டும் 418 பேர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளனர். 2018ஆம் ஆண்டின் மார்ச் 2 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 36 பேர் உயிரிழந்துள்ளனர்.
இந்தச் சம்பவங்களை அடுத்து மன அழுத்தத்தால் மருத்துவமனைகளுக்கு வருவோரின் வீடுகளுக்குச் சென்று அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடும் நடவடிக் » 06

## அதிகரித்த பனிப் பொழிவு காணப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 6
வடக்கு உட்பட நாடு முழுவதும் காலை வேளைகளில் பனிப்புகார் காணப்படும் என்று எதிர்வுகூறப்படு » 06

## கண்டியைக் காக்குமாறு ராணுவத்துக்கு உத்தரவு

மைத்திரிபால பிறப்பித்தார் » 23

## பொறுப்பை உணர்ந்து நடப்பது மிக அவசியம்

மகிந்த கூறுகின்றார் » 23

## இறுதியில் இனக்கலவரமே

எச்சரிக்கிறார் திஸ்ஸ » 23

## பாதுகாப்புச் சபையை உடனடியாகக் கூட்டுக

ரிசாத் மைத்திரிக்கு அவசரக் கடிதம் » 23

## ஜெலி மீன்கள் தொல்லையால் கடலன்னையிடம் முறைப்பாடு

முல்லைத்தீவு, மார்ச் 6
மீனவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் ஜெலி மீனை அகற்றி கடற்றொழில் மேற்கொள்ள வழியேற்படுத்த வேண்டும் என்று கோரி நேற்று கடலன்னையிடம் » 06



## 8 அன்று முல்லையில் பெரும் போராட்டம்

*ஆதரவு கோருகின்றனர் உறவுகளைத் தேடுவோர்*

முல்லைத்தீவு, மார்ச் 6
காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி அவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவில் நடத்திவரும் தொடர் போராட்டம் எதிர்வரும் 8ஆம் திகதியுடன் » 06




# சிரியப் படுகொலைகளை கண்டித்து ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்.6

**சிரிய படுகொலைகளைக் கண்டித்து வடமராட்சியில் கண்டனப் பேரணி ஒன்று நேற்று நடைபெற்றது.**

வடமராட்சிப் பிரதேசக் கரையோரத்தில் தொண்டமானாறு தொடக்கம் பருத்தித்துறை வரை இந்தக் கண்டனப் பேரணி தொண்டமனாறு பொது அமைப்புக்களால் நடத்தப்பட்டது.

பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறியிடம் பொது அமைப்புக்களால் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

நேற்று ஈழத்தில், மியன்மாரில் இன்று சிரியாவில் மனிதப்படுகொலைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் படு கொலைகள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கப்படுவதுடன் மனிதப்படுகொலைகளை உடனடியாகத் தடுத்து நிறுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இதில் வலியுறுத்தப்பட்டது.

(173)

# மனிதனுக்கு இயற்கையுடன் இணைந்த வாழ்வு அவசியம்

## கலாநிதி ஜெயசங்கர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,மார்ச்.6

மனிதர்கள் மனிதர்களுடனும் இயற்கையுடனும் ஒத்திசைந்து வாழவில்லையெனில் அழிவுகள் அதிகரிக்கும்.

இவ்வாறு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி சிவஞானம் ஜெயசங்கர் தெரிவித்தார்.

சமகாலத்தில் சகவாழ்வுக்கான சூழ்நிலைகள் குழப்பப்பட்டு வரும் சம்பவங்கள் தொடர்பாக அவர் நேற்றுக் கருத்து வெளியிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

மானிடர்கள் பலர் இன மத வேறுபாடுகளுக்கப்பால் சேவையாற்றி வந்ததை சரித்திரம் நமக்குப் புகட்டுகிறது.

இந்த அறிவு முறைகள் உயர்கல்வி மரபுக்குள் உள்வாங்கப்படுவதும் இந்தக் கல்வி முறைக்ள் பற்றிய அறிமுகத்தையும் அறிவையும் முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலைக் கல்வி மரபுக்குள் கொண்டு வருவதும் சூழல்நட்புக் கொண்டதும், பொருளாதாரத்தில் தங்கிநிற்றல் நிலை நீக்கம் பெற்றதும் மக்கள் மயப்பட்டதுமான சமூக உருவாக்கங்களுடன் எமது வாழ்க்கை முறை வடிவமைக்கப்பட வேண்டும். வாய்மொழி அறிவுத் திறன்களை அறிந்து பதிவு செய்து புதிய ஊடகங்களுக்குக் கொண்டு வருதல் கிரகித்தலையும் நினைவில் வைத்தலையும் அடிப்படையாகக் கொண்ட அறிவுமுறைப் பயில்வு என்பன இங்கு அவசியமாகின்றன - என்றார்.

(ற.ரி4, 46)

## கண்டிக் கலவரத்தின் பதிவுகள்...



காங்கேசன்துறை - இந்தியா இடையே

# வடக்கின் பொருளாதாரத்துக்கு கப்பல் சேவைகள் அவசியம்

ஜெயசேகரம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்.6

காங்கேசன்துறை, துறை முகத்துக்கும் இந்தியாவுக்கும் இடையில் கப்பல் சேவைகளை ஆரம்பித்து வர்த்தக நடவடிக்கையை மேற்கொண்டால் வடக்கு மாகாணத்தின் பொருளாதாரத்தில் பெரும் முன்னேற்றத்தை அடைய முடியும். இவ்வாறு யாழ்.வணிகர் கழகத்தின் முன்னாள் தலைவரும் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான ஜெயசேகரம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய இந்திய கொன்சியூலர் நடராஜனுக்கு முஸ்லிம் சமூகம் சார்பில் யாழ்ப்பாணத்திலுள்ள விடுதியொன்றில் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

வடக்கு மாகாணத்தில் காங்கேசன்துறை துறைமுகம் நீண்டகாலமாக சீரமைக்கப்படாது காணப்படுகின்றது. அதனை ம்று சீரமைப்புச் செய்ய இந்தியா முன்வந்துள்ளது. துறைமுகத்தை அபிவிருத்தி செய்து இந்தியாவின் தமிழ் நாட்டுக்குக் கப்பல் சேவையை ஆரம்பிக்க வேண்டும். அவ்வாறு இந்தியா - காங்கேசன்துறை இடையில் பொருட்கள் பரிமாற்றம் செய்யப்படல் அதிக வருமானத்தை மாகாணம் பெருக்கிக் கொள்ளும்.

பொதுவாக இங்குள்ள வர்த்தகர்கள் கொழும்பு துறைமுகத்திலிருந்தே பொருட்களை இறக்குமதி செய்து வியாபாரம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு அதிக செலவினம் ஏற்படுகின்றது. முன்னைய காலத்தில் இந்தியாவின் பொருட்கள் அதிகமாக சந்தையில் கிடைத்தன. இப்போது அவை வெகுவாகக் குறைந்து வேறு நாடுகளின் பொருட்களே இங்கு வருகின்றன. முன்பு இந்தியாவின் வாகனங்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வந்தன. இப்போது வேறு நாட்டு வாகனங்கள் தாக்கம் செலுத்தி வருகின்றன.

காங்கேசன்துறை துறைமுகமூடாக இந்தியாவிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்தால் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டதுடன் பலருக்கு வேலை வாய்ப்புகளும் கிடைக்கும். அதனூடாக வடக்கு மாகாணத்துக்கு அதிக வருமானம் கிடைக்கும். அத்துடன் வடக்கிலிருந்து நாளாந்தம் நூற்றுக்கு அதிகமானவர்கள் இந்தியா செல்ல அனுமதி கேட்டு துணைத் தூதரகத்துக்குச் செல்வதை அவதானிக்க முடிகிறது. இந்தியா செல்பவர்கள் இங்கிருந்து கொழும்பு சென்றே செல்ல வேண்டியுள்ளது. இதனால் நேர அலைச்சல், அதிக செலவினம் ஏற்படுகின்றது.

வடக்கு மாகாண மக்கள் இந்தியாவுக்கு இலகுவாகப் பயணிக்க பலாலி வானூர்தி நிலையத்தை அபிவிருத்தி செய்து இந்தியாவுக்கான வானூர்தி சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ற-ரி2,8)

# மனித உரிமை மீறல்களுக்கு கூட்டரசே பொறுப்பு

திருகோணமலை,மார்ச்.6

வட கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு அடிப்படை மனித உரிமை மீறல்களுக்கு இந்த கூட்டரசு பொறுப்புக் கூற வேண்டும். இவ்வாறு தெரிவித்தார். காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடியலையும் சங்கத்தின் திருகோணமலை தலைவி நாகேந்திரன் ஆஷா.

கையளிக்கப்பட்டும், கடத்தப்பட்டும் காணாமலாக்கப்பட்ட உறவுகளை தேடியலையும் சங்கத்தினரால் முன்னெடுக்கும் தொடர் போராட்டத்தின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்பட்ட ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்ததாவது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களை கூட்டரசு தொடர்ச்சியாக ஏமாற்றிக்கொண்டிருக்கிறது. இது தொடர்பில் உரிய தீர்வுகள் எங்களுக்குக் கிடைக்கும் வரை எமது போராட்டங்களைக் கைவிடப்போவதில்லை.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் தான் வடகிழக்கில் உள்ள தமிழ் உறவுகளின் பிள்ளைகள், கணவன்மார்கள், சகோதர சகோதரிகள் காணாமல் ஆக்கப்பட்டார்கள். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் விடுதலை செய்யப்பட்டு மீண்டும் வருவார்கள் என்று எங்கள் பிள்ளைகளை எத்தனை தடவைகள் ஏமாற்றிக்கொண்டிருப்பது.

கூட்டரசை உருவாக்குவதில் நாங்கள் அக்கறையுடன் செயற்பட்டோம். ஆனால் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் இந்த அரசு கவனம் இல்லாமல் செயற்படுகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டோர்களின் குடும்பத்துக்கு இதுவரையும் உரிய தீர்வுகள் பெற்றுத்தரவில்லை. அரச தலைவர் மைத்திரிபால தலைமையிலான அரசை நம்பியிருந்தோம். பயன் கிடைக்கவில்லை.

தற்போது நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை மீறல்கள் தொடர்பான அமர்வில் இலங்கைக்கு எதிராக சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கைகளில் வடகிழக்குப் பகுதிகளில் உள்ள காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு அங்கு அமர்வில் பங்கு கொள்ள அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

எமது இந்த ஒருவருட தொடர் போராட்டத்தினூடாக எமது தகவல்களை ஊடகங்கள் மூலமாக ஐ.நா வரை கொண்டு செல்ல வேண்டும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன் - என்றார். (ற-ரி2)

# கடமைகளைப் பொறுப்பேற்றார் புதிய பொலிஸ் அத்தியட்சகர்

மட்டக்களப்பு,மார்ச்.6

மட்டக்களப்பு மாவட்டத்தின் 75 ஆவது மூத்த பொலிஸ் அத்தியட்சகர் எம்.எஸ். மென்டிஸ் தனது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பொலிஸ்மா அதிபரினால் நாடளாவிய ரீதியில் வழங்கப்பட்ட இடமாற்றத்துக்கு அமைய கம்பளையில் மூத்த பொலிஸ் அத்தியட்கராகக் கடமையாற்றிய இவர் மட்டக்களப்பு மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.



இங்கு மூத்த பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றிய சமன்யட்டவர கொழும்பு தெற்கு பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தின் முன்பாக அணி வகுப்பு மரியாதை நடைபெற்றதுடன், மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் எம்.எஸ்.மென்டிஸ் மத தலைவர்களின் ஆசியுடன் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடமையாற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-ரி2)

# அரச சேவைக்கு ஆள்சேர்ப்பு நேர்முகப் பரீட்சை ஆரம்பம்

கொழும்பு,மார்ச்.6

அரச முகாமைத்துவ சேவைக்கு ஆள்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை நேற்று ஆரம்பமாகியது. அரச முகாமைத்துவ சேவையில் 6 ஆயிரம் பேர் இணைத்துக் கொள்ளப்பட இருப்பதாக அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு அறிவித்துள்ளது. போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு நேர்முகப்பரீட்சைக்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சில் நேற்று முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை இந்தப் பரீட்சை நடைபெறும் என்று அரச இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் கே.வி.பி.எம்.ஜி.கமகே தெரிவித்தார்.

பரீட்சையின் பின்னர் இவர்கள் சேவையில் துரிதமாக இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் அரச இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். (ற-ரி2)

# தம்புத்தேகம ஆர்ப்பாட்டம் கைதானோருக்குப் பிணை

அனுராதபுரம்,மார்ச்.6

தம்புத்தேகம பொலிஸ் சந்தியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 51 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸார் மீது கற்களை வீசித் தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு நேற்று அவர்கள் அனைவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ராஜாங்கனை குளத்தை சுற்றி 17,000 ஏக்கர் விவசாய நிலம் உள்ளதாகவும், விவசாயத்துக்குப் பயன்படுத்தும் ராஜாங்கனை குளத்தை, குடிநீர் போத்தல்களை தயாரிக்கும் சீனத் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கியதாகக் கூறி கடந்த 28 ஆம் திகதி இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. (ற-ரி2)

# நாடு கடத்தப்பட்ட போராளியிடம் இதுவரை விசாரணை ஏதுமில்லை

மகிந்த அணி குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச்.6

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளி ஒருவரை ஆஸ்திரேலிய அரசு அண்மையில் நாடு கடத்தியிருந்தது. இவரிடம் எந்த ஒரு விசாரணையும் நடத்தப்படவில்லை என மகிந்த அணி குற்றம் சுமத்தியுள்ளது. இவ்வாறு முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது.

முல்லைத்தீவு கேப்பாபிலவில் கடந்த வாரம் இடம்பெற்ற மாபெரும் போராட்டத்தில் பொது மக்கள் இராணுவத்தை வெளியேறுமாறு கோஷமிட்டனர். அரச அதிகாரிகளின் வாகனங்களை மறித்து வீதியில் அமர்ந்து போராட்டம் நடத்தினார்கள். அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

தம்புத்தேகமவில் கடந்த 28 ஆம் திகதி இராஜாங்கனை நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள விவசாய நிலத்துக்கு அருகில் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு காணி வழங்கியதாகவும் அந்த நிறுவனம் இராஜாங்கனை நீர்த்தேக் கத் தில் இருந்து நீரைப் பயன்படுத்தவுள்ளதாகக் குறிப்பிட்டு இதற்கு விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்தினார்கள். போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள்மீது கண்ணீர்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அப்பாவிப் பொது மக்கள் 51 பேர் கைது செய்யப்பட்டார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளி ஒருவரை ஆஸ்திரேலிய அரசு நாடு கடத்தியிருந்தது.

விடுதலைப் புலிகளின் காலத்தில் போருக்குத் தேவையான படகுகளை உருவாக்கியதற்கு ஆதாரமிருப்பதாகக் கூறி அவரை ஆஸ்திரேலியா நாடு கடத்தியிருந்தது.

நாடு கடத்தப்பட்டவரிடம் சுமார் 4 மணி நேர விசாரணைகளை நடத்திவிட்டு இலங்கை அரசு விடுதலை செய்துவிட்டது.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் இலங்கை மக்களின் நம்பிக்கையை பெற்றுக்கொள்வதற்கு எந்த நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுக்கவில்லை.

இலங்கைக்கு பயணம் செய்துள்ள மிரெட் அல் ஹுஸைன் முகமாலை சென்று கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளைப் பார்வையிட உள்ளார். இந்தக் கண்ணிவெடிக்ளை அகற்றும் பணி புதிய விடயம் அல்ல. இந்த நடவடிக்கைகள் மகிந்த ராஜபக்சவின் காலத்திலேயே முன்னெடுக்கப்பட்டது.

அப்போதைய காலகட்டத்தில் நோர்வே அரசு இந்தக் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு 7 வருடங்கள் தேவை என்றது. அவ்வளவு காலம் எம்மால் காத்திருக்க முடியாது என தீர்மானித்த மகிந்த ராஜபக்ச இலங்கைப் படையினரைக் கொண்டே இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்தார்.

இலங்கைப் படையினர் ஒரு வருடத்துக்கு முன்பாகவே அனைத்துக் கண்ணிவெடிகளையும் அகற்றிவிட்டனர் - என்றார். (ற.ரி2)

# நஞ்சருந்தியவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்

தென்மராட்சி மார்ச் 6

தவறான முடிவெடுத்து நஞ்சருந்திய நபர் சிகிச்சை பயனின்றி கடந்த வெள்ளிக்கிழமை சாவடைந்தார். சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:

கடந்த வியாழக்கிழமை சரசாலை வடக்கில் உள்ள தோட்டக் காணியில் தோட்ட வேலையில் ஈடுபட்டவர் அங்கிருந்த கொட்டிலுக்குச்சென்றார். அவர் நீண்ட நேரமாக வெளியே வராததால் சந்தேகம் கொண்ட அயல் தோட்ட உரிமையாளர் அங்கு சென்று பார்த்தார். குறித்த நபர் மயங்கிய நிலையில் காணப்பட்டார். அவரை மீட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்தனர்.

அங்கு அவர் நஞ்சருந்தியமை தெரியவந்தது. மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். அங்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

சாவு தொடர்பாக விசாரணை மேற்கொண்ட சாவகச்சேரிப் பொலிஸார் நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் அறிக்கை சமர்ப்பித்தனர்.

அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் திடீர் சாவு விசாரணை அதிகாரி சீ.இளங்கீரன் மூலம் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

கடந்த சனிக்கிழமை விசாரணை மேற்கொண்ட திடீர் விசாரணை அதிகாரி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரிமூலம் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உடற்கூற்றுப் பரிசோதனையின்பின் சடலத்தை உரியவர்களிடம் ஒப்படைக்குமாறும் பொலிஸாரைப் பணித்தார். இதே இடத்தைச் சேர்ந்த சின்னப்பு கங்காதரம் ( வயது 75 ) என்பவரே உயிரிழந்தவராவார். (எ -9)

*யாழ் மாவட்டப் பொதுக் கிணறுகளின்*

# தண்ணீரை உயிரியல் பகுப்பாய்வு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பம்

**யாழ்ப்பாணம்.மார்ச்.6**

**யாழ்ப்பாண மாவட்ட மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் உள்ள பொதுக் கிணறுகளின் தண்ணீரை உயிரியல் பகுப்பாய்வு செய்யும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.**

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ்ப்பாண மாநகருக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பொதுக் கிணறுகளின் தண்ணீர் மாதிரிகள் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் தற்போது பெறப்பட்டு வருகின்றன. பாடசாலைகள், ஆலயங்கள், விளையாட்டுத் திடல்கள், சனசமூக நிலையங்களில் உள்ள பொதுக் கிணறுகளை பலர் பயன்படுத்துவர். ஆகவே அதற்கான சுத்தம் அவசியமாகும்.

தற்போது கிணறுகளின் தண்ணீர் மாதிரிகள் பெறப்பட்டு அவை பாவனைக்கு ஏற்றனவா இல்லையா என்பதை உறுதிப்படுத்தும் உயிரியல் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வண்ணார்பண்ணை, அரியாலை ஆகிய பிரதேசங்களில் உள்ள பொதுக் கிணறுகளின் தண்ணீர் மாதிரிகள் நேற்றுப் பெறப்பட்டன. அவை பரிசோதனையின் பின்னர் பாவனைக்கு ஏற்றதாக தற்போது உள்ளனவா அல்லது அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்பது தொடர்பில் உரியவர்களுக்கு அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)

# அளவெட்டி தபாலகக் கட்டடம் ஏப்ரலில் திறந்து வைக்கப்படும்

யாழ்ப்பாணம்,மார்ச்.6

புதிதாக அமைக்கப்பட்ட அளவெட்டி தபாலகக் கட்டடத்தை ஏப்ரல் மாதத்தில் மக்கள் பயன்பாட்டுக்குத் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தத் தபாலகத்தின் கட்டுமானப் பணிகள் யாவும் நிறைவு பெற்றுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பத்து மில்லியன் ரூபா செலவில் இந்த தபாலகத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்டது. இந்தத் தபாலகம் தற்போது தனியார் கட்டடம் ஒன்றிலேயே செயற்பட்டு வருகின்றது.

தபாலகத்துக்கு என தனியார் ஒருவர் காணி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியதை அடுத்து புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (17)

# கோப்பாய் மீன் சந்தை கட்டடத் திறப்பு விரைவில்

யாழ்ப்பாணம், மார்ச்.6

கோப்பாயில் அமைக்கப்பட்ட மீன் சந்தைக் கட்டடம் விரைவில் திறந்து வைக்கப்படும் என்று வலி.கிழக்கு பிரதேச சபை தெரிவித்தது.

இந்த மீன் சந்தைக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் யாவும் கடந்த மூன்றுமாத காலத்துக்கு முன்னரே நிறைவு பெற்றுள்ளன.

வலி.கிழக்கு பிரதேச சபைகளை புதிய உறுப்பினர்கள் பதவியேற்ற பின்னர் அவர்களால் கட்டடத்தைத் திறந்து வைக்க சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அதனைவிட இந்த மீன் சந்தை பகுதியில் நுகர்வோர் மற்றும் விவசாயிகளின் தேவை கருதி குடிதண்ணீர் வசதியும் ஏற்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (17)

# பிரதேச மலருக்கான ஆக்கங்கள் கோரல்

வடமராட்சி, மார்ச்.6

பருத்தித்துறை, வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம் இந்த ஆண்டுக்கான பிரதேச மலரை வெளியிட ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளது.

பிரதேசங்கள், மொழி, பண்பாடு, வரலாறு, அபிவிருத்தி முதலான விடயங்களை உள்ளடக்கிய ஆய்வுக்கட்டுரைகளும், பிரதேசக் கலைஞர்கள், எழுத்தாளர்களின் ஆக்கங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.

குறித்த ஆக்கங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 27ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலரும் வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவைத் தலைவருமான ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (ஏ-173)

# வட்டாரக் காரியாலயம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 6

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட வட்டாரக் காரியாலயம் கோண்டாவில் மடத்தடியில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கருணாகரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட 3ஆம், 7ஆம் வட்டாரங்களை இணைத்து கோண்டாவில் மடத்தடி வட்டார காரியாலயமாக திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் பொது அமைப்பின் பிரதிநிதிகள், கட்சி உறுப்பினர்கள், தொழிலதிபர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (எ-50)

# வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தலைமை வளாகம் சீரமைப்பு

வலி.தென்மேற்கு, மார்ச்6

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள வளாகம் 48 இலட்சம் ரூபா செலவில் அழகுபடுத்தப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றது.

சுற்று மதில், உள்ளக வீதிகள், புற்றரை உட்பட பல சீரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வலி.தென் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள வளாகம் மானிப்பாய் எரிபொருள் நிலையத்துக்கு அருகாமையில் அமைந்துள்ளது. மானிப்பாய் பட்டின உப அலுவலகம் பிரதேச சபையின் தலைமை அலுவலகம் முன்பு இருந்த கட்டடத் தொகுதியில் இயங்கி வருகின்றது.

வரியிறுப்பாளர்களைக் கவரும் வகையிலும் பிரதேசசபைக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை வரவேற்கும் நோக்குடனும் கட்டடம் அழகுபடுத்தப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (எ)

# புத்தகங்கள் வழங்கி வைப்பு

வடமராட்சி, மார்ச்,6

பருத்தித்துறை பிரதேசத்துக்குட்பட்ட புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 200 மாணவர்களுக்கு கல்வி வழிகாட்டல் புத்தகங்கள் வழங்கும் நிகழ்வு கொற்றாவத்தை அமெரிக்கன் மிசன் கலவன் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது.



நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றியீட்டி பருத்தித்துறை பிரதேச சபைக்கு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட கு.தினேஸின் ஏற்பாட்டில் நிகழ்வு இடம்பெற்றது. திக்கம் க.யோகானந்தன் இதற்கான நிதி அனுசரணையை வழங்கியிருந்தார்.

குறித்த பாடசாலையின் அதிபர் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

திக்கம் சித்தி விநாயகர் பாடசாலை, சக்கோட்டை புனித சவேரியார் பாடசாலை, அல்வாய் அம்பாள் பாடசாலை, அல்வாய் சிறிலங்கா வித்தியாசாலை, பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, கெருடாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கரணவாய் மணியகாரந் தோட்ட அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கே இந்தப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ச.சுகிர்தன் பருத்தித்துறை பிரதேச சபைக்கு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட கு.தினேஸ் ஆகியோர் கலந்து கொண்டு புத்தகங்களை வழங்கிவைத்தனர். (எ-21-173)

# தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் சாவகச்சேரி சிவன் கோவில் சாலையில் உள்ள தென்மராட்சிக் கலைமன்ற கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறுமென பிரதேச செயலர் தே.பாபு திணைக்களத் தலைவர்கள் மற்றும் பொது அமைப்புகளுக்கு அறிவித்துள்ளார்.

எனவே,இந்தவருடம்அனுமதி பெறவேண்டிய திட்டங்கள்,முன்மொழிவுகள் திணைக்களம் மற்றும் துறைசார் திட்டங்கள் தொடர்பாக எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் கடந்த வருடத்துக்கான தொடர்வேலைகள்போன்ற விடயங்களை அனுப்பி வைக்குமாறு திணைக்களத்தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# விபத்தில் ஒருவர் காயம்

தென்மராட்சி, மார்ச். 6

உழவியந்திரத்துடன் மோதி வீழ்ந்து காயமடைந்த நிலையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற குடும்பஸ்தர் சாலையில் காணப்பட்ட பள்ளத்தில்,மோட்டார் சைக்கிள் இறங்கியதில் வீழ்ந்து மீண்டும் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை எழுதுமட்டுவாழ் கிளாலி சாலையில் இடம்பெற்றது.

மிருசுவில் கெற்பேலியைச் சேர்ந்த ரவிகரன் காந்தரூபன் (வயது 28) என்பவர் கிளாலிக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார்.

அந்த வேளையில் கிளாலியிலிருந்து வந்த உழவியந்திரம் இவரை மோதிவிட்டு நிற்காமல் சென்று விட்டது. உழவியந்திரம் மோதியதில் காயமடைந்த குடும்பஸ்தர் எழுந்து மீண்டும் மோட்டார் சைக்கிளில் சென்றபோது சாலையில் காணப்பட்ட பள்ளத்தில் மோட்டார் சைக்கிள் சில்லு இறங்கியதில் வீழ்ந்து காயமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது .

சாலையில் காயங்களுடன் ஒருவர் காணப்பட்டதையடுத்து பொதுமக்கள் அவசர அம்புலன்ஸ் சேவைக்கு அறிவித்ததையடுத்து சாவகச்சேரி மருத்துவமனை அம்புலன்ஸ் சம்பவ இடத்துக்குச் சென்று காயமடைந்தவரை ஏற்றிவந்து மருத்துவமனையில் சேர்த்தது. (எ-9)

# கஞ்சா கடத்திய குற்றச்சாட்டு: 5 பேருக்கும் விளக்கமறியல்

## முதன்மை நபர் தலைமறைவு

யாழ்ப்பாணம், மார்ச். 6
பருத்தித்துறையில் தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு அருகிலுள்ள வீட்டில் 10 கிலோகிராம் கஞ்சா மீட்கப்பட்ட நிலையில், அதனை வைத்திருந்தனர் என்று குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். எனினும் முதன்மைச் சந்தேக நபர் என்று கூறப்படும் சகோதர இனத்தவர் இன்னும் கைது செய்யப்படவில்லை.

சம்பவம் கடந்த வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் இடம்பெற்றது.

பருத்தித்துறை திக்கம் கடற்கரைப் பகுதியிலிருந்து கடற்கரை வீதிவழியாக அல்வாய் நோக்கி சந்தேகத்துக்கிடமான முச்சக்கர வண்டி பயணித்தது. அதனைச் சிவில் உடையில் பொலிஸார் பின்தொடர்ந்து சென்றனர். தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு அருகிலுள்ள வீடு ஒன்றுக்குள் அந்த முச்சக்கரவண்டி சென்றது. பொலிஸார் அந்த வீட்டுக்குள் அதிரடியாகப் பாய்ந்தபோது அங்கு பொலித்தீன் பைகளில் இருந்து கஞ்சா வேறாக்கப்பட்டு பொதியிடப்படுவதைக் கண்டனர். அவற்றை மீட்டதோடு அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 5 பேரைக் கைது செய்தனர்.

மட்டக்களப்பு செங்கலடியைச் சேர்ந்தவர் என்று கூறப்படும் நபரே அங்கிருந்து தப்பியோடித் தலைமறைவாகியுள்ளார் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

கஞ்சா கடத்தி விற்பனை செய்ததாக அடையாளப்படுத்தும் படி வகையைச் சேர்ந்த வாகனம், மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி என்பன பருத்தித்துறை நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறையைச் சேர்ந்த 24,29 வயதுகளையுடைய இருவரும் நல்லூர் பின் வீதியைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவரும் மட்டக்களப்பைச் சேர்ந்த 39, 50 வயதுகளையுடைய இருவருமாக 5 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். (4)

# கட்டாக்காலி மாடுகளால் சிறுதானியப் பயிர்கள் அழிவு

தென்மராட்சி, மார்ச். 6
தென்மராட்சி தெற்கு மறவன்புலவு நெற்காணிகளில் நெல் அறுவடையின் பின்னர் பயிரிடப்பட்ட சிறுதானியப் பயிர்கள் கட்டாக்காலி மாடுகளால் அழிக்கப்பட்டு வருகின்றன எனவும் இவற்றைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் எவரும் முன்வரவில்லை எனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

'காலபோகச் நெற்செய்கை அறுவடையின் பின்னர் வடக்கு மாகாண விவசாய அமைச்சால் இந்தப் பகுதியைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட நெற்செய்கையாளர்களுக்கு, தலா ஒரு ஏக்கர் வீதம் பயிரிட விதை தானியங்கள் வழங்கப்பட்டன. அதையடுத்து விவசாயிகள் சிறுதானியப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

தென்மராட்சி பிரதேச செயலகத்தால் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிவரை கால்நடைகளைக்கட்டி வளர்க்குமாறு அறிவிக்கப்பட்டது. ஆனால் தினமும் வளர்ப்பு மாடுகள் மேய்ச்சலுக்கு அவிழ்த்து விடப்படுவதால பயிரிடப்பட்ட சிறுதானியப் பயிர்களை அவை அழித்து வருகின்றன. இது தொடர்பாக பிரிவு கமக்கார அமைப்பு மற்றும் விவசாயத் திணைக்களம் ஆகியவற்றில் முறையிட்டும் பயன் கிடைக்கவில்லை.

வடக்கு மாகாண விவசாய அமைச்சால் விதை தானியங்கள் வழங்கப்பட்டபோதிலும் ஏனைய செலவுகள் விவசாயி களாலேயே மேற்கொள்ளப்பட்டன. இந்த நிலையில் கட்டாக்காலி மாடுகளால் பயிர்கள் அழிக்கப்படுவது எமக்குப் பெரும் நட்டத்தை ஏற்படுத்தும். எனவே உரிய அதிகாரிகள் கவனமெடுத்து கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்' என விவசாயிகள் தெரிவித்தனர். (எ-9)

# இல்ல மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம் ,மார்ச் .6
யாழ்ப்பாணம் கோப்பாய் வடக்கு றோ.க.த .கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை மைதானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மதியம் 1.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

பாடசாலை முதல்வர் பி.ஜெயரட்ணராஜா தலைமையில் நடைபெறவுள்ள போட்டியில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் கலந்து கொள்ளவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-17)



யாழ்ப்பாண நகரில் கே.கே.எஸ் வீதியிலுள்ள கடைத்தெரு பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. விநாயகப் பெருமான் தேரில் எழுந்தருளி வீதிவலம் வருவதைக் காணலாம். (17)

# சாவகச்சேரி மருத்துவமனைக்கு புதிய மருத்துவ அத்தியட்சகர்

சாவகச்சேரி, மார்ச். 6
சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு புதிய மருத்துவ அத்தியட்சகராக கொடிகாமம் பிரதேச மருத்துவமனைப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய மருத்துவர் பசுபதி அச்சுதன் வடக்கு மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்டு கடந்த முதலாம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். இந்த மருத்துவமனையில் கடமையாற்றிய மருத்துவர் சி.குமரவேல் கிளிநொச்சி பிராந்திய் சுகாதார சேவைகள் பணிப்பாளராக மாகாண சுகாதார திணைக்களத்தினரால் நியமிக்கப்பட்டு இங்கு பதில் மருத்துவ அத்தியட்சகராகவும் கடமையாற்றியிருந்தார்.

இந்த நிலையில் கொடிகாமம் பிரதேச மருத்துவமனைப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய மருத்துவர் மருத்துவ அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுக் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9,131)

# புதிய அங்கத்தவர்களை இணைத்தல்

வடமராட்சி,மார்ச்,6
பருத்தித்துறை வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவைக்கு புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் வடமராட்சி வடக்கு பருத்தித்துறைப் பிரதேசத்துக்கு உட்பட்ட கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் இந்தப்பேரவையில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து பிரதேச பண்பாட்டு மேம்பாட்டுச் செயற்பாடுகளில் தமது ஆக்கபூர்வமான பங்களிப்பை நல்க முன்வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவின் விண்ணப்பப் படிவத்தை முழுமை செய்து எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு பிரதேச செயலாளரும் கலாசார பேரவைத் தலைவருமான ஆழ்வாப்பிள்ளை சிறி கேட்டுள்ளார். (எ-21-173)

# தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

வடமராட்சி, மார்ச் 6
வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆயிரம் மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றில் இன்று செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களம், வடமராட்சி வலயக்கல்வித் திணைக்களத்துடன் இணைந்து கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளது. கடந்த வருடம் ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களும், இந்த ஆண்டு ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களும் கருத்தரங்கில் பங்கு கொள்ளவுள்ளனர்.

வலயப் பாடசாலை அதிபர்கள் மூலமாகக் கருத்தரங்கில் பங்கு கொள்ளும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

20 மாணவர்களுக்கு ஒரு வளவாளர் வீதம் தனித்தனிக் குழுக்களாக இடம்பெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் தொழில் வாய்ப்புகளை மாணவர்கள் பெற்றுக் கொள்வதற்கான விளக்கங்கள் அளிக்கப்படும். மாணவர்களின் எதிர்காலத்துக்கு இந்தக் கருத்தரங்கு பெரிதும் உதவும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தெரிவித்தார். வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் உதயகுமார் கருத்தரங்கை ஆரம்பித்துவைப்பார். (எ-173-26)

# தூய சக்தி தொழில் நுட்பங்கள் தொடர்பாக யாழ்ப்பாண மாணவர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் ,மார்ச் .6
யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான தூயசக்தித் தொழில்நுட்பங்கள் தொடர்பான முதற்கட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று முதல் 14 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம், வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் யாழ்ப்பாணம், மேற்கு நோர்வேப் பல்கலைக்கழகங்கள் என்பவற்றுடன் இணைந்து நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது. வடக்கு மாகாண 1 ஏபி பாடசாலைகளைச் சேர்ந்த தரம் 8 முதல் 11 மற்றும் ஜி.சி.ஈ(உத) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் துறைசார்ந்த மாணவர்களுக்கே கருத்தரங்கை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 6 பாடசாலைகளில் 14 செயலமர்வாக இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் 70 மாணவர்கள் இதன் மூலம் பயன் பெறவுள்ளனர்.

கருத்தரங்கின் இறுதியில் பங்குபற்றிய மாணவர்களுக்கிடையில் தூயசக்தி தொழில்நுட்பம் சார்ந்த பல் தேர்வுப் போட்டி நடத்தப்பட்டு வெற்றி பெறும் மாணவர்களுக்கு மே மாதத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இது தவிர பயிற்சிக் கருத்தரங்கில் பங்குபெறும் மாணவர்களுக்கு தூயசக்தித் தொழில்நுட்பங்கள் தொடர்பான சுவரொட்டி ஆவணப்படமாக்கல் மற்றும் கண்காட்சிப் பொருளமைத்தல் போன்ற போட்டிகளும் இடம்பெற்று அதற்குரிய பரிசில்கள், சான்றிதழ்களும் வழங்கப்படும். அதேவேளை அன்றைய நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ள துறைசார் வல்லுனர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பமும் வெற்றி பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

அடுத்தகட்ட நடவடிக்கையாக இந்தவிழிப்புணர்வுக் கருத்தரங்கானது வட மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தச் செயற்றிட்டம் இலங்கைக்கான நோர்வேத் தூதரகத்தின் நிதியுதவியின் கீழ் நடத்தப்படுகின்றதென்பது இங்கே குறிப்பிட்டுச்சொல்ல வேண்டிய விடயமாகும் என்று யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தினர் தெரிவித்தனர். (எ-21)

# ஐயப்பாட்டைச் சுட்டிக்காட்டி புனிதராக முடியாது ஈ.பி.டி.பி.

## வடக்கு அமைச்சர் அனந்தி கூறுகிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 6

வடக்கு மாகாண சபைத் தேர்தல் காலத்தில் எனது வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த சிலரும் ஈடுபட்டிருந்தமை ஆதாரபூர்வமான உண்மையாகும்.

இவ்வாறு வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

"வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் காலத்தில் தன்மீது நடத்தப்பட்ட தாக்குதலை தமிழ் அரசுக் கட்சியினரே முன்னெடுத்தனர் என்று வடக்கு மாகாண சபையின் அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. அந்தத் தாக்குதலை ஈ.பி.டி.பியினரும் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினருமே நடத்தினர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அன்று எம்மீது குற்றம் சுமத்தியதுடன், சில தமிழ் ஊடகங்களும் அவ்வாறே செய்தியும் வெளியிட்டிருந்தன. அந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் இன்று உண்மை வெளியாகியுள்ளது. ஈ.பி.டி.பி. மீது அன்று சுமத்தப்பட்ட குற்றச்சாட்டும் உண்மைக்குப் புறம்பானது என்பது உறுதிசெய்யப்பட்டு அந்த அவதூறிலிருந்தும் ஈ.பி.டி.பியை வரலாறு விடுதலை செய்துள்ளது" என்று ஈ.பி.டி.பி கட்சி ஊடக அறிக்கை வெளியிட்டிருந்தது.

அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அனந்தி சசிதரன் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது

2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19 ஆம் திகதி மாலையிலும் வாக்களிப்புக்கு முந்தைய நாளான செப்ரெம்பர் 20 ஆம் திகதி அதிகாலையிலும் எனது வீட்டுக்குள் அத்துமீறிப் பிரவேசித்திருந்த வன்முறைக் கும்பல் கண்மூடித்தனமான தாக்குதலை நடத்தியிருந்தது.

அடையாளம் காணப்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் இராணுவ சீருடை அணிந்திருந்த நபர்களும் இணைந்தே எனது வீட்டின் மீது தாக்குதல் நடத்தியிருந்தார்கள். இது முற்று முழுதான உண்மையாகும். அது குறித்து ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நானே நேரடியாக சாட்சியமளித்துள்ளேன்.

என் வீட்டின் மீது இடம்பெற்ற தாக்குதல் மற்றும் என் மீதான அச்சுறுத்தல் ஆகியவற்றின் பின்னணியில் என்னை அரசியலுக்கு அறிமுகம் செய்துவைத்த தமிழ் அரசுக் கட்சியை சேர்ந்தவர்களுக்கும் தொடர்பிருக்கலாம் என்று நம்புகின்றேன் என்று அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தேன். விடுதலைப் புலிகள் சார்பில் என் மீது அதிகரித்திருந்த அபரிமிதமான மக்கள் ஆதரவைப் பொறுத்துக் கொள்ள முடியாது, என்னை அரசியலுக்கு கொண்டுவந்தவர்களே எனக்கெதிராக உள்ளடி வேலைகள் செய்திருந்தமை காலம் கடந்து அவர்களாலேயே வெளிப்படுத்தப்பட்டிருந்த பின்னணியில்தான் எனது மேற்குறித்த ஐயப்பாடு அமைந்திருந்தது.

நிலமை இவ்வாறு இருக்கையில், எனது இந்த ஐயப்பாட்டின் அடிப்படையில் தமது கட்சியினர் மீதான குற்றச்சாட்டை மறுதலித்து தம்மைப் புனிதர்களாக பிரகடனப்படுத்தும் முயற்சியாக ஈ.பி.டி.பி. சார்பில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கை அமைந்துள்ளது. கடந்த வடக்கு மாகாண சபைத் தேர்தல் காலத்தில் எனது வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த சிலரும் ஈடுபட்டிருந்தமை ஆதாரபூரவமான உண்மையாகும்.

இந்தச் சம்பவத்தில் என்சார் கட்சிக்கும் தொடர்பிருக்கலாம் என்ற எனது ஐயப்பாட்டை முன்னிறுத்தி மறுதலிக்க முனைவது எந்தவிதத்திலும் நியாய மில்லை. மாகாண சபை உறுப்பினராக தெரிவாகிய பின்னர் நடைபெற்ற மாகாண சபை அமர்வுகளுக்கு நான் மோட்டார் சைக்கிளில் சென்று வரும்போது வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஜீவன் மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்து அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டிருந்தார். இது தொடர்பாக ஈ.பி.டி.பி. சார்பில் தெரிவாகியிருந்த மாகாண சபை உறுப்பினர் தவராசா ஊடாக கட்சியின் செயலர் டக்ளஸ் தேவானந்தாவுக்குத் தெரியப்படுத்தியிருந்தேன்.

சம்பந்தப்பட்ட கட்சி உறுப்பினரை அழைத்து இது போன்ற தொந்தரவை மேற்கொள்ள வேண்டாம் என்று செயலரால் எச்சரிக்கை செய்யப்பட்டது என்றும், இனிமேல் அவ்வாறு எதுவும் நடைபெறாது எனவும் மாகாண சபை உறுப்பினர் தவராசா எனக்குத் தெரிவித்திருந்தார். அதற்கமைய அந்த நபரின் அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடு அதன்பிற்பாடு இல்லாதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது ஒருபுறமிருக்க, அரசியல் சிந்தனை எதுவும் இல்லாது இருந்த என்னை எழிலனின் மனைவி என்று அடையாளப்படுத்தி, அரசியலில் இணைத்த தமிழ் அரசுக் கட்சி என் மீது அடாத்தான செயற்பாடுகளை மேற்கொண்டு வருவது ஜனநாயகமற்றது என்பதுடன் மக்கள் விரோத செயற்பாடுமாகும். கட்சி மற்றும் அரசியல் ரீதியாக என்மீது மேற்கொண்டுவரும் நெருக்கடிகள், தனியே என்னை அரசியல் ரீதியில் பாதிப்படையச் செய்யும் நோக்கத்திற்கப்பால், போரின் பாதிப்புக்குள் இருந்து வந்தவள் என்ற அடிப்படையில் என் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்து ஆதரவு தந்த, தந்துகொண்டிருக்கும் மக்களுக்கும் எதிரான நடவடிக்கையாகவே அமைந்துள்ளது என்பதை சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன் - என்றுள்ளது. (ற-5.8)

# கூட்டமைப்பு எம்.பிக்கள் கொழும்புக்கு பயணம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படின், அது தொடர்பில் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஆராய்ந்தே முடிவு செய்யப்படும் என்று கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருந்தார்.

இந்தப்பின்னணியில் இன்றைய கூட்டத்துக்கு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் வரவேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ற-5)

## நீதிமன்ற...

னம் ஞாயிற்றுக் கிழமை முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்திய சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட சிங்கள இளைஞர்களை விடுவிக்கக் கோரி பொலிஸ் நிலையத்தின் முன்பாகவும் போராட்டம் நடத்தப்பட்டது.

சனிக்கிழமை உயிரிழந்த சிங்கள இளைஞனின் இறுதி ஊர்வலத்தை நேற்று நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. வன்முறை வெடிப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்று பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததையடுத்து பொலிஸார் நீதிமன்றத்தை நாடினர். திகன நகரில் பூதவுடலை ஊர்வலமாக எடுத்துச் செல்ல நீதிமன்றம் தடை விதித்தது.

அதனையும் மீறி பூதவுடலை சிங்களவர்கள் ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். அப்போதே கடைகள், பள்ளிவாசல்கள், வீடுகள் மீது அவர்கள் தாக்குதல் நடத்தினார்கள்.

இதேவேளை, நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை முஸ்லிம்களின் வீடுகள், கடைகள் மீது தாக்குதல் நடத்திய சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட சிங்கள இளைஞர்களை விடுவிக்கக் கோரி தெல்தெனிய பொலிஸ் நிலையத்தின் முன்பாக மாபெரும் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் உள்ளிட்டவர்கள் இதில் கலந்து கொண்டனர். (ற-5.71)

## வவுனியாவை...

கையை ஆர்ம்பித்துள்ளோம் என்று வவுனியா மருத்துவமனையின் பணிப்பாளர் கு. அகிலேந்திரன் தெரிவித்தார்.

**விழிப்பு அவசியம்**

சமூகத்தில் 12 வயது மற்றும் 45 வயதுக்கு இடைப்பட்டவர்களே இவ்வாறான தவறான முடிவை எடுக்கின்றனர். இந்த எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. சமூகத்தின் கட்டுக்கோப்புக்கள் எவ்வளவு சீரழிந்துள்ளன என்பதையே இது காட்டுகின்றது. பொதுமக்கள் இது தொடர்பாக விழிப்புடன் செயற்பட வேண்டும்.

**தனித்தீவுகள்**

தொலைக்காட்சிப் பெட்டிகள், ஆடம்பரப் பொருள்கள் வருவதற்கு முன்னர் உயிர்மாய்ப்புச் செய்வது அரிதாகவே இருந்தது. இப்படியான எண்ணிக்கை காணப்படவில்லை. இந்த அதிகரிப்பு சமூகத்தில் இருப்பவர்கள் தனித் தீவுகளாக இருப்பதையே காட்டுகின்றது. இதைச் சரி செய்வதற்கு அனைத்துத் தரப்பினரும் முன்வர வேண்டும். ஒவ்வொருவரும் தமக்கு அருகில் இருப்பவர்களை அவதானியுங்கள். அவர்களின் பிரச்சினைகளைக் கருத்தில் எடுத்து அவர்களுக்கு எப்படி உதவலாம் என்று சிந்தியுங்கள். அவ்வாறு செயற்பாட்டால் தவறான முடிவெடுத்து உயிர் மாய்க்கும் சம்பவங்களை வெகுவாகக் குறைக்கமுடியும்.

**பேசுதல் அவசியம்**

பெற்றோர்கள் பிள்ளைகளுடன் மனம்விட்டுப் பேச வேண்டும். அவர்களிடம் நெருங்கிப் பழகுங்கள். சில பிரச்சினைகளைச் சொல்ல முடியாது பிள்ளைகள் இருப்பார்கள். பெற்றோர்கள் நண்பர்களாகப் பழகினால் மாத்திரமே அவர்களின் பிரச்சினைகளைக் கூற முன்வருவார்கள். பிள்ளைகளின் கருத்துக்கலைக் கேட்காவிட்டால் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு தவறான முடிவு எடுக்கும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

**போதையைத் தவிருங்கள்**

அதிகளவான மதுப் பாவனை, அதிகளவான போதைப் பொருள் பாவனை என்பன எமது சமூகத்தில் உள்ளன. அவையும் தவறான முடிவெடுப்பதற்கான காரணிகளாகக் கண்டறியப்பட்டுள்ளன. மது, போதைப் பொருள்களைப் பயன்படுத்தும் இளவயதினர் அவற்றைத் தவிர்க்க முயல வேண்டும்.

**தடுப்பதற்கு முயற்சி**

தவறான உயிர் மாய்ப்புக்கு எதிராக வவுனியா பொது மருத்துவமனை இரு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. மருத்துவமனையின் உளவள மருத்துவ நிபுணரின் கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டுச் செயற்படுத்தப்படுகின்றது. மற்றையது மன அழுத்தத்தால் சிகிச்சைக்கு வருவோரின் வீடுகளுக்குச் சென்று அவர்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்வு வழங்குவது. இதைவிட மாணவர்களுக்குத் தவறான உயிர் மாய்ப்புத் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்படுகின்றது. மது, போதைப் பொருள் பாவனையில் இருந்து எப்படி விடுபடுவது, சமூகச் சீரழிவில் இருந்து பாடசாலைச் சமூகத்தை எவ்வாறு பாதுகாக்க முடியும் என்பது போன்ற கருத்தரங்குகள் வாராந்தம் நடத்தப்படுகின்றன. சமூக சேவைகள் திணைக்களம், பிரதேச செயகம், மாவட்டச் செயலகம் மற்றும் வலயக்கல்விப் பணிமனை ஊடாகப் பல மட்டங்களில் தவறான உயிர்மாய்ப்புக்களைத் தடுப்பதற்கான நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

**வழிநடத்தல் அவசியம்**

ஆசிரியர் சமூகம் பாடசாலை மாணவர்களின் பிரச்சினைகளைக் கருத்தில் எடுக்க வேண்டும். மாணவர்களை அழுத்தத்துக்கு உட்படுத்தாமல் அவர்களை நல்ல விதமாகக் கையாள வேண்டியது ஆசிரியர்களின் பொறுப்பாகும். பாடசாலை மாணவர்களைச் சொந்தப் பிள்ளைகள் போல் கவனித்து அவர்களை வழிநடத்த வேண்டும். இப்படியான தவறான உயிர்மாய்ப்புக்கள் அதிகரித்துச் செல்லுமானால் எமது சமூகம் வினைத்திறனற்ற சமூகமாக நாளடைவில் மாறிவிடும் என்று தெரிவித்தார் வவுனியா மருத்துவமனையின் பணிப்பாளர் கு.அகிலேந்திரன். (ற-21,ரி)

## ஜெலி...

வேண்டினர் முல்லைத்தீவு மீனவர்கள். அதற்காகச் சிறப்பு வழிபாடுகளையும் மேற்கொண்டனர். அளம்பிலில் உள்ள உப்புமாவெளி காளி கோயிலிலும், வேளாங்கண்ணி ஆலயத்திலும் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டன. அளம்பில் பங்குத் தந்தை கடல் அன்னைக்கு சிறப்பு ஆசீர்வதிப்பையும், கரையோர மக்களின் தொழிலுக்கு வழிவிடக் கோரியும் சிறப்பு வழிபாட்டை மேற்கொண்டார்.

அளம்பில் கடலில் ஜெலி மீன்கள் அதிகரிக்கின்றன. தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கரைவலைத் தொழிலில் ஈடுபடும் போது ஜெலி மீன்களே அதிகம் சிக்குகின்றன. அவை உடலில் பட்டால் கடியை ஏற்படுத்தும். முன்னர் ஒரு காலப்பகுதியில் மாத்திரமே அவை வரும். இப்போது அதிகம் வரத் தொடங்கியுள்ளன. அதனால் மீன்களின் வரத்துக் குறைந்துவிட்டது. ஜெலி மீன்களை அகற்றக் கோரியே கடல் அன்னையிடம் வழிபாடு நடத்தினோம் என்று மீனவர்கள் தெரிவித்தனர். (ற-21,ரி3)

## 8 அன்று...

ஓராண்டை எட்டுகின்றது. அன்றையதினம் பெரும் போராட்டம் ஒன்றை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் அனைவரும் அதற்கு ஆதரவு தர வேண்டும்.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாகக் கொட்டகை அமைத்துப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

அன்றுமுதல் அவர்கள் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களைப் பல்வேறு தரப்பினரும் சந்தித்துப் பேசியிருந்த போதும் அவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் இதுவரை காத்திரமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

எதிர்வரும் 8ஆம் திகதியுடன் அவர்களின் போராட்டம் ஓராண்டை எட்டுகின்றது. அன்று அவர்கள் பெரும் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளனர். அந்தப் போராட்டத்துக்கு அரசியல் தலைவர்கள், மதகுருக்கள், புத்திஜீவிகள், பொதுமக்கள் எனப் பல தரப்பினரும் கலந்துகொண்டு ஆதரவு தர வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் முல்லைத்தீவு உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ற)

## நேற்றுமுன்தினமே...

அமைப்பின் பொதுச் செயலர் ஞானசாரதேரர், உயிரிழந்த இளைஞனின் வீட்டுக்குச் சென்று வந்த பின்னரே இந்தத் தாக்குதல்கள் நடந்துள்ளன என்று அங்குள்ளவர்கள் கூறுகின்றனர். அம்பாறையிலிருந்து கண்டிக்கு வந்த முஸ்லிம்களுக்குச் சொந்தமான பேருந்து வழிமறித்து தாக்கப்பட்டது. முஸ்லிம்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்களும், அடித்து நொறுக்கப்பட்டு எரிக்கப்பட்டுள்ளன. முஸ்லிம்களின் வீடுகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் 11 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ற-5)

## அதிகரித்த...

கின்றது. நேற்று வழமையை விட பனிப் பொழிவு அதிகமாக இருப்பது உணரப்பட்டது. யாழ்ப்பாணத்தில் உள்ள வளிமண்டலவியல் திணைக்களத்திடம் கேட்டபோது மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அதிகரித்த பனிப் புகார் நிலவும் நாள்களில் ஆஸ்துமா நோயாளர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ற-4)

## தைரியமில்லாத அரசு!

### தயா கமகே ரணிலைத் தடுத்தார் என்கிறார் பிரதி அமைச்சர் ஹரீஸ்

கொழும்பு, மார்ச் 6
இனவாதத் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ள அம்பாறை நகருக்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க பயணம் மேற்கொள்ளாமையானது அவரின் தைரியமின்மையையே வெளிக்காட்டியுள்ளது. இந்தப் புறக்கணிப்பின் பின்னணியில் அமைச்சர் தயா கமகே தான் இருக்கிறார் என்றும் பிரதி அமைச்சரான எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

அம்பாறை நகரில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் பேரினவாதிகளால் நடத்தப்பட்ட தாக்குதலால் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான சொத்துகள் சேதப்படுத்தப்பட்டதுடன், அந்தப் பிரதேசப் பள்ளிவாசலும் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டது.

சிறுபான்மை இன மக்களிடத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்தச் சம்பவம் தொடர்பில் பலரும் தற்போது அதிருப்தியை வெளியிட்டுவரும் நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை சிங்கப்பூரிலிருந்து நாடு திரும்பிய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க, அன்றிரவே முஸ்லிம் அமைச்சர்களுடன் அவசர சந்திப்பை நடத்தியதுடன், மறுநாள் சனிக்கிழமை மாலை மீண்டும் இரண்டாம் கட்டமாக முஸ்லிம் அமைச்சர்களுடன் நடத்திய கலந்துரையாடலின்போது பாதிக்கப்பட்ட அம்பாறை நகருக்கு நேரடிப் பயணத்தை மேற்கொள்ளவேண்டும் என்றுதீர்மானித்திருந்தார்.

எனினும், நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அவர் உகனயில் இடம்பெற்ற வானூர்தி நிலையக் கண்காட்சியொன்றைப் பார்வையிடச் சென்ற பின்னர், அமைச்சர் ரவூப் ஹக்கீமின் அழைப்பின்பேரில் ஒலுவிலுக்குச் சென்று சில முக்கியஸ்தர்களுடன் இந்தத் தாக்குதல் தொடர்பில் கலந்துரையாடினார். பாதிக்கப்பட்ட அம்பாறை நகருக்கு ரணில் செல்லவில்லை.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட விளையாட்டுத்துறை பிரதி அமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உப தலைவருமான ஹரீஸ்,

இவ்வளவு பிரச்சினை நடைபெற்ற அம்பாறை நகருக்கு அவர் வரவில்லை என்பது எமக்கு மட்டுமன்றி, ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்துக்கும் அதிருப்தியையே ஏற்படுத்தியுள்ளது. ரணிலை இவ்வாறு செல்லவிடாமல் அமைச்சர் தயா கமகே தான் தடுத்தார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அவரின் தூண்டுதலிலேயே ரணில் அம்பாறை நகருக்கான பயணத்தைப் புறக்கணித்துள்ளார். உண்மையில் இது ரணிலின் தைரியமின்மையையே வெளிக்காட்டியுள்ளது. நிச்சயமாக இதனை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். நாடாளுமன்றில் இது தொடர்பில் எமது அதிருப்தியை நாம் நிச்சயமாகத் தெரியப்படுத்துவோம் - என்றார்.

(5)

# மாணவருக்கு ரப் வழங்கும் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 6**
**ரப் மற்றும் மடிக் கணினி வழங்கும் திட்டங்கள் சில காரணங்களால் தடைப்பட்டுள்ளன. எவ்வாறேனும் அந்தப் பணியை நிறைவு செய்வோம். இவ்வாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார். நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;
கல்வி நிர்வாக சேவையில் காணப்பட்ட 852 பற்றாக்குறை நிலையைச் சீர்செய்வதற்கான நடவடிக்கை எடுத்தேன். புதிதாக 4 ஆயிரம் அதிபர்களை நியமிப்பதற்கும், ஆயிரத்து 900 ஆசிரியர்களை சேவையில் இணைத்துக் கொள்வதற்கும்நடவடிக்கைஎடுத்தோம்.

ஆறாம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு ஒரு லட்சத்து ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மடிக் கணினிகளை வழங்குவதற்கான அனைத்துப் பணிகளும் நிறைவடைந்துள்ளன. உயர்தர மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஒரு லட்சத்து தொண்ணூற்று ஐயாயிரத்துக்கும் அதிகமான ரப் வழங்கும் திட்டங்கள் நிறைவை எய்தியுள்ள நிலையில், சில காரணங்களால் அந்தப் பணிகள் தடைப்பட்டுள்ளன. வெகுவிரைவாக நிறைவு செய்வோம்.

எம்மிடம் அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட்டதன் பின்னர் கல்விச் செயற்பாட்டை வலுப்படுத்தினோம்.

நாட்டின் கல்வி நிலையை மேலும் அபிவிருத்தி செய்வதே எமது தேவையாக உள்ளது. இன்று தரம் ஒன்றில் கல்வி கற்கும் பிள்ளை 13ஆம் தரத்தை நிறைவு செய்து வெளியேறும்போது முழு உலகமும் இப்போதுள்ள நிலையிலிருந்து முற்றாக மாறியிருக்கும். அதற்கேற்றவாறு பாடத்திட்டத்தை மாற்றியமைப்பது அவசியமாகும்.

இப்போது சில மாற்றங்களை மேற்கொள்ளவில்லையெனில் இன்னும் 10, 15 ஆண்டுகளில் கல்வி கற்று வெளியேறும் இளையோரின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி விட்டோம் என்று எம்மீது பழி சுமத்துவர். அதனைக், கருத்திற் கொண்டே தொழில்நுட்பக் கல்வியை கட்டாயமாக்கும் பணிகளை மேற் கொண்டு வருகின்றோம் - என்றார்.

(5.61)



அட! அப்படியா சங்கதி!!

## இரகசியத் திட்டங்கள்

ஐக்கிய தேசியக் கட்சி புரட்சிக்குழுவின் முக்கிய புள்ளியாகக் கருதப்படும் அயலுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க தலைமையிலான நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அரச தலைவர் மகிந்தவை அவரது கொழும்பு இல்லத்தில் இரகசியமாகச் சந்தித்தனராம்.

ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றியடையச் செய்யக் கூட்டு எதிர்க்கட்சி ஒத்துழைக்க வேண்டுமென இதன்போது கேட்டுக்கொண்ட அவர்கள் புதிய தலைமை அமைச்சர் பதவிக்கு அமைச்சர் ரஞ்ஜித் மத்தும பண்டாரவின் பெயரைத் தேர்ந்தெடுத்துள்ளதாகக் கூறினராம்.

எப்படியோ தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பம் தனித்தனியே பெறப்படுவதாகத் தகவல். யார் யார் கையொப்பம் வைத்துள்ளனர் என்ற தகவல் வெளியே செல்லாமல் இருக்க இந்த ஏற்பாடாம்.

## சிமெந்து விலை அதிகரிப்பை அரசு இல்லாமல் செய்யவேண்டும்

### நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கம்

சிமெந்து விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. இதனை விரைந்து இல்லாமல் செய்யுமாறு தேசிய நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
2003ஆம் ஆண்டு நுகர்வோர் தொடர்பான சட்டத்தின் அடிப்படையில் சிமெந்து விலை அதிகரிப்பதற்கான நுகர்வோர் விவகாரங்கள் தொடர்பான ஆணையகத்தில் தனது அனுமதியைக் கோர வேண்டும். ஆனால் கடந்த வாரத்தில் ஒல்சிம் சிமெந்தின் விலை 30 ரூபாவால் அதிகரித்த விலையில் விற்கப்பட்டு வருகின்றது. சிலரின் அரசியல் நோக்கத்துக்காகவே இவ்விலை உயர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒல்சிம் சிமெந்து பக்கட் ஒன்றினை விலை 930 ரூபாவாக காணப்படுகின்றது. 30 ரூபா விலை அதிகரிப்பினால் ஒல்சிம்சிமெந்து 960ரூபா அதிகவிலையில் விற்கப்படுகின்றது. நுகர்வோர் சிமெந்து கொள்வனவு செய்வதில் பெரிய சிக்கலை எதிர்கொண்டு வருகின்றனர் - என்றார். (5.31)

# வெளிநாட்டு முதலீட்டில் கை வைக்கிறார் மைத்திரி

### உள்நாட்டு கைத்தொழில் துறையை பாதுகாக்கவே இந்த நடவடிக்கையாம்

கொழும்பு, மார்ச் 6
உள்நாட்டு கைத்தொழில் துறையில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வெளிநாட்டு முதலீடுகளுக்கு இடமளிக்க முடியாது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். தேசிய கைத்தொழில் துறையில் எதிர்கால நடவடிக்கைகளில் தாக்கம் செலுத்தும் பிரச்சினைகள் தொடர்பாக அரச தலைவர் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அரச தலைவர் மைத்திரிபால மேற்கண்டவாறு கூறினார்.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
'உள்நாட்டு வர்த்தகம் மற்றும் தேசிய கைத்தொழில் துறை பலமடையும்போதே நாட்டில் சரியானதொரு பொருளாதாரக் கொள்கை கட்டியெழுப்பப்படும். தேசிய கைத்தொழிலை பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய தீர்மானங்கள் எடுக்கப்படும். பொதுமக்களுக்கு சலுகைகள் வழங்கும்போது தேசிய கைத்தொழில்களை பலப்படுத்துதல் அவசியமாகும்' என்று அரச தலைவர் மைத்திரிபால குறிப்பிட்டார்.

தேசிய கைத்தொழில்களை பாதுகாத்து அவற்றின் முன்னேற்றத்துக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய தீர்மானங்கள் குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் உள்நாட்டு பால்மா உற்பத்தி, தேசிய பிஸ்கட் உற்பத்தி மற்றும் வாகன உற்பத்தியை மேம்படுத்துவதற்கு பின்பற்றப்பட வேண்டிய முறைமைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது. தேசிய ஆயுள்வேத மருத்துவத்துறையில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் மற்றும் அதன் முன்னேற்றத்துக்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

வெளிநாட்டு சில்லறை வர்த்தக நிலைய வலையமைப்புக்கு இலங்கையில் வர்த்தக நடவடிக்கைளில் ஈடுபட அனுமதியளிப்பதனால் உள்நாட்டு வியாபாரிகளுக்கு ஏற்பட்டுள்ள சவால்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. தேசிய கைத்தொழில்களுக்கு சவால்களை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு வெளிநாட்டு கைத்தொழில்களுக்கு இடமளிக்ககூடாது என்று அரச தலைவர் மைத்திரிபால தேசிய முதலீட்டு சபைக்கு பணிப்புரை விடுத்தார். இதேவேளை, கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கொழும்பு நகரில் சீன வியாபாரங்களின் அதிகரிப்புத் தொடர்பில் அரச தலைவர் கேள்வி எழுப்பியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(5)

# மகிந்தவை பிரதமராக்குவதில் எமக்கும் விருப்பம்தான்

### மகிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 6
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை, தலைமை அமைச்சராக்கும் விருப்பம் மக்களுக்கு மட்டுமல்ல எமக்கும் உள்ளது. மகிந்த தரப்பை எம்முடன் இணைத்துக் கொண்டு பயணிக்க முடியுமாயின் அதனைச் செய்யவேண்டும். இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

வீரக்கெட்டிய பிரதேசத்தில் மக்கள் சந்திப்பில் நேற்றுக் கலந்து கொண்ட போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
மக்களின் ஆதரவு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் பக்கம் மட்டுமே சென்றுள்ளது. கடந்த தேர்தலில் வெற்றிக் காற்று அவர்கள் பக்கம்வீசியதை அனைவரும் அறிவோம். அரசாக நாம் பொறுப்புக்கூற வேண்டும். அரசின் பக்கமும் பல்வேறு தவறுகள் இடம்பெற்றன. இந்தத் தோல்வி ஒரே நேரத்தில் இடம்பெற்ற ஒன்றல்ல. கடந்த காலங்களில் அரசின் அசமந்த செயற்பாடுகளே இதற்குக் காரணமாகும். கடந்த காலத்தில் சில பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடிந்தும் அவற்றைக் கருத்திற் கொள்ளாது தீர்வுகளைப் பற்றி சிந்திக்காது செயற்பட்டமை எமது தோல்விக்கு பிரதான காரணமாகும். முன்னாள் அரச தலைவர் மகிந்தவை அவமதிக்கும் வகையில் சில மோசமான கருத்துக்களை முன்வைத்தமை, அவரது குடியுரிமை பறிக்கப்படும், அவர் தண்டிக்கப்படுவார் என்ற விமர்சனங்கள் என்று அனைத்துமே எமக்குப் பாதகமாக அமைந்துவிட்டன. இந்தத் தாக்கங்கள் அனைத்துமே சுதந்திரக் கட்சியையே பாதித்தன. கடந்த தேர்தலில் மக்கள் மகிந்த ராஜபக்சவின் அணிக்கு ஏன் வாக்களித்தனர் என்று கேட்கும் போது தேர்தல் முடிந்து அடுத்த நாளே அவர் தலைமை அமைச்சராவார்; என்ற நம்பிக்கையிலேயே நாம் வாக்களித்தோம் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சர் பொறுப்புக்குக் கொண்டுவர நாமும் விரும்புகின்றோம். மக்களின் விருப்பம் மட்டுமல்ல எமது தரப்பும் அதனையே விரும்புகின்றது. அவரை எம்முடன் இணைத்துக்கொண்டு செயற்படுவதில் எம்மத்தியில் எதிர்ப்பும் இல்லை.

அவரை தலைமை அமைச்சராக்க முடியவில்லை என்று நினைத்தவுடன் வாக்களித்த மக்களும் அதிருப்தியில் உள்ளனர். எம்மால் எதனையும் மக்களுக்குக் கூற முடியாது. அமைதியாகவே நாம் இருக்கவேண்டியுள்ளது - என்றார். (5.61)

# நடராஜன் எமது மக்களிடையே ஊடுருவி வேலை செய்திருக்கிறார்

## பிரிவுபசார நிகழ்வில் தவராசா தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 6
எமது மக்கள் கொன்சியூலர் ஜெனரலைப் பல இடங்களில் மதிப்புறுத்துகிறார்கள். அவ்வாறு மதிப்புறுத்துகிறார்கள் என்றால், இங்குள்ள மக்களிடம் எவ்வாறு ஊடுருவி வேலைகளைச் செய்துள்ளார் என்று தெரிகின்றது. இவ்வாறு வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் கொன்சியூலர் ஜெனரலாகப் பணியாற்றிய நடராஜனுக்கு, வடக்கு மாகாண சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரிவுபசார நிகழ்வு பேரவைச் செயலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை, இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அனைத்துத் தேவைகளுக்கும் இந்தியாவைத்தான் நம்பி உள்ளோம். எமது தாய் நாடாக இந்தியாவே இருக்கின்றது. எமக்கு என்ன பிரச்சினை என்றாலும் நாம் முதலில் ஓடுவது இந்தியாவிடம் தான். நாம் ஓடுகின்ற சந்தர்ப்பங்களில் எமது தாயான இந்தியா பிள்ளைகளாக நாம் அழுவதை கவனிக்காமல் இருந்துவிடுகின்றது. எனினும் உங்கள் பிள்ளைகள் அழுகின்றது என்று அவர்களுக்கு எடுத்துக் கூறும்போது பல வேலைகளுக்கும் மத்தியில் எம்மீது கரிசனையைக் காட்டுகின்றது.

மாகாண சபை முறைமையை உருவாக்குவதில் இந்தியாவின் பங்களிப்பு அளப்பரியது. அவ்வாறு உருவாக்கப்பட்ட வடக்கு மாகாண சபையிலும் இந்தியாவின் பங்களிப்பு உள்ளது. இந்தியா உருவாக்கிய வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே தள்ளாடிக் கொண்டு இருக்கின்றது. இந்திய அரசு அதிலும் அக்கறை காட்ட வேண்டும். அதனை இங்கிருந்து டில்லிக்குச் செல்லும் நடராஜன் இந்திய அரசுக்கு எடுத்துக் கூறுவார் என்று நினைக்கின்றேன் - என்றார். (5,8)

# சமூக ஊடகங்களை பயன்படுத்த கட்டுப்பாடு

## இராணுவத் தளபதி உத்தரவு



கொழும்பு, மார்ச் 6
இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகளும், படையினரும், சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்குப் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க புதிய உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளார்.

முகநூல், கீச்சகம் உள்ளிட்ட சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் இராணுவத்தினர், தமது பதவி நிலை மற்றும் இராணுவ அடையாளங்களையோ, சீருடையுடனான படத்தையோ, இராணுவக் கருவிகள் மற்றும் நிறுவனங்களின் படத்தையோ பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு, அரசியல், மதம், இன நல்லிணக்கத்துடன் தொடர்புடைய விடயங்களைப் பதிவேற்றுவதற்கும், பகிர்ந்து கொள்வதற்கும், இன்னொருவருக்கு மாற்றிக் கொள்வதற்கும், கருத்து வெளியிடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டுப்பாடுகளை மீறும் இராணுவத்தினரைக் கண்காணிப்பதற்காக, சமிக்ஞைப் படைப்பிரிவைச் சேர்ந்த குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்கள் தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மீறும் படையினர் மீது கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது. (5)

# சர்சைக்குரிய பிரிகேடியரின் குடும்பத்துக்கு ராணுவம் உதவி

கொழும்பு, மார்ச் 6
பிரிட்டனில் தங்கியுள்ள, பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவின் குடும்பத்தினருக்குத் தேவைகளுக்காக நிதி உதவியை வழங்க இராணுவத் தளபதி உத்தரவிட்டுள்ளார். பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ இலங்கைக்கு அழைக்கப்பட்ட போதிலும், அவரது குடும்பத்தினர் இன்னமும் பிரிட்டனிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

பிரியங்க நாட்டுக்கு அழைக்கப்பட்டமையினால் தூதரகப் பணிக்காக அவருக்குக் கிடைக்க வேண்டிய சம்பளம் கிடைக்கவில்லை. தற்போது அவருக்குப் பிரிகேடியர் பதவிக்கான சம்பளம் மாத்திரமே கிடைக்கின்றது.

அதற்கமைய முதற்கட்டமாக இராணுவத் தளபதியின் உத்தரவுக்கு அமைய பிரியங்க பெர்னாண்டோவின் குடும்பத்தினருக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் அவருக்கு நிதி உதவி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இராணுவ அதிகாரியின் குடும்பத்துக்காக, இராணுவம் நிதி உதவி வழங்கும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரிகேடியரின் குடும்பத்தையும் பிரிட்டனிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று பிரிட்டன் தமிழர் பேரவை கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)



# கோத்தாவை களமிறக்குவதில் ராஜபக்ச குடும்பம் மும்முரம்

கொழும்பு, மார்ச் 6
இலங்கை அரசியலில் தமது குடும்பத்தின் ஆதிக்கத்தைநிலைநிறுத்துவது தொடர்பாக, ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள், முக்கிய கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருப்பதாக, கொழும்பு ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் முக்கியமாக, 2020ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில், முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவைப் போட்டியில் நிறுத்துவது தொடர்பாக விரிவாக ஆலோசனை நடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவை நியமிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கலந்துரையாடலில் ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள பங்கேற்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (5)

# 170 சபைகளில் தொங்கு ஆட்சியே

## மேலதிக தேர்தல்கள் ஆணையர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 6
நாட்டிலுள்ள 340 உள்ளூராட்சி மன்றங்களில் 170 இற்கும் அதிகமான உள்ளூராட்சி மன்றங்களில் தொங்கு ஆட்சியே அமையும் நிலை ஏற்பட்டுள்ளதாக, மேலதிக தேர்தல்கள் ஆணையர் எம்.எம். மொஹமட் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் முதலாவது அமர்வின்போது உறுப்பினர்களின் விருப்பத்துக்கு ஏற்ப, தவிசாளர் உள்ளிட்ட பதவிகளுக்குப் பிரதிநிதிகள் நியமிக்கப்படவுள்ளனர். நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கட்சிகள் அறுதிப் பெரும்பான்மையைப் பெறாமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக மொஹமட் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, விகிதாசாரப் பட்டியலில் ஒவ்வொரு கட்சியும் எத்தனை பெண் பிரதிநிதிகளின் பெயர்களைக் குறிப்பிட வேண்டும் என்ற அறிவுறுத்தல் அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பெண் பிரதிநிதிகளின் பெயர் குறிப்பிடப்படாத பட்சத்தில் அரசிதழ் அறிவித்தலில் குறித்த கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் பெண் வேட்பாளர்களுக்கான பதவி வெற்றிடமாகவே அறிவிக்கப்படும் - என்றார். (5)

# எய்ட்ஸ் நோயாளியின் மனு உயர்நீதிமன்றால் தள்ளுபடி

கொழும்பு, மார்ச் 6
சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவத்தின் பணியாள் தொகுதியில் தன்னை மீள இணைத்துக்கொள்ள உத்தரவிடுமாறு கோரி, எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான அந்த நிறுவனத்தின் முன்னாள் ஊழியர் ஒருவரினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனுவை உயர்நீதிமன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்தது.

சிசிர டி அப்று, பிரியந்த ஜயவர்த்தன, நளின் பெரேரா ஆகியோரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் மனு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, மேற்குறிப்பிட்ட கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

மனுதாரரால் வழங்கப்பட்ட பிழையான தகவலுக்கு அமைய அவரின் ஒப்பந்தத்தை சிறிலங்கன் எயார்லைன்ஸ் மீளப் பெற்றுக்கொண்டமை தவறில்லை என்றும் நீதியரசர்கள் குழாம் தீர்ப்பளித்தது.

2013ஆம் ஆண்டு எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியுள்ள நபர், 2016ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தில் பணிக்குச் சேரும்போது அதை மறைத்துப் பொய்யான தகவல் வழங்கியுள்ளார் என்றும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் மருத்துவ அதிகாரி அனோமா ஜயசிங்க, போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்தி சேவைகள் அமைச்சின் செயலர் நிஹால் சோமவீர, தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர் சிசிர லியனகே மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

2010ஆம் ஆண்டு மிஹின்லங்கா நிறுவனத்தில் பணிக்குச் சேர்ந்த தான், எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியிருந்தமை 2013ஆம் ஆண்டில் தெரியவந்தது எனவும் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

2016ஆம் ஆண்டு டிசெம்பர் 30ஆம் திகதி மிஹின்லங்கா நிறுவனம் மூடப்படவுள்ளமையால், சிறிலங்கன் எயார்லைன்ஸ் உள்ளிட்ட நிறுவனங்களில் மாற்றீட்டு வேலைகளைத் தேடிக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டதாகவும் குறிப்பிட்ட அவர், அவ்வருடம் செப்ரெம்பரில் சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்ட தன்னைத் தெரிவுசெய்து, நியமனக் கடிதம், சீருடைகள், அடையாள அட்டை என்பன வழங்கப்பட்டதாகவும் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

பின்னர் நடத்தப்பட்ட பரிசோதனைகளில் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறிப்பட்டு, நிறுவனத்தின் மருத்துவ அதிகாரி, நியமனக் கடிதம் உள்பட நிறுவனத்தால் வழங்கப்பட்ட உடைமைகளை மீளக் கையளிக்குமாறு கோரியதாகவும் குறிப்பிட்டே மனுவைத் தாக்கல் செய்திருந்தார். (5)

# ஞானசார தேரர் ஜப்பான் செல்ல நீதிமன்றம் அனுமதி

கொழும்பு, மார்ச் 6
பொது பல சேனாவின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு ஜப்பான் செல்ல கொழும்பு மேலதிக நீதிவான் புத்திக சிறி ராலகே நேற்று அனுமதி வழங்கினார்.

ஜப்பான் சுமோபா சம்புத்த விகாரையில் இடம்பெறும் மத வழிபாடுகளுக்காகச் செல்ல ஞானசார தேரர் அனுமதி கோரியிருந்த நிலையிலேயே நீதிவான் நேற்று அதற்கான அனுமதியை வழங்கினார்.

குருநாகல், தோரயாய பகுதியில், ஞானசார தேரரைக் கைது செய்ய சென்ற பொலிஸ் பரிசோதகர் ஜனக உள்ளிட்ட பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தியமை தொடர்பில், ஞானசார தேரருக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறும் நிலையிலேயே, அந்த வழக்குத் தொடர்பில் அவரது வெளிநாட்டுப் பயணம் தடை செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே நேற்று அந்தத் தடை தற்காலிகமாக நீக்கப்பட்டது. (5.71)





## சட்டம் ஒழுங்கு அமைச்சராக பொன்சேகாவையே நியமியுங்கள்

ஐக்கிய தேசியக் கட்சி விடாப்பிடி

கொழும்பு, மார்ச் 6
பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவை, சட்டம், ஒழுங்கு அமைச்சராக நியமிக்குமாறு மீண்டும் பரிந்துரைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளது.
சரத் பொன்சேகாவுக்குச் சட்டம், ஒழுங்கு அமைச்சர் பதவியை வழங்குமாறு, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம், ஐக்கிய தேசியக் கட்சி பரிந்துரைத்திருந்தது.
எனினும், அரச தலைவர் மைத்திரி அந்தப் பரிந்துரையை நிராகரித்திருந்தார்.
அதன் பின்னர், ஐக்கிய தேசியக் கட்சி தமது தரப்பில் இருந்து வேறொருவரை இந்தப் பதவிக்கு நியமிக்க முயன்றது. எனினும், ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த எவரும், அதற்கு முன்வரவில்லை.
இந்த நிலையில் மீண்டும் சரத் பொன்சேகாவின் பெயரை, சட்டம், ஒழுங்கு அமைச்சர் பதவிக்கு நியமிக்குமாறு அரச தலைவரிடம் பரிந்துரைக்க ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளது.
சரத் பொன்சேகாவைச் சட்டம், ஒழுங்கு அமைச்சர் பதவிக்கு நியமிப்பதற்குச் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## மூன்றாக உடைகிறது சுதந்திரக் கட்சி ?

கொழும்பு, மார்ச் 6
உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் கடும் விரிசல்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் மூன்று விதமான நிலைப்பாடுகள் தோன்றியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் கணிசமானவர்கள், மீண்டும் மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்.
அதேவேளை, அதே எண்ணிக்கையான உறுப்பினர்கள் சிலர் உள்ளக விட்டுக்கொடுப்புகளுடன், கூட்டு அரசில் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி வருகின்றனர்.
எனினும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமது எதிர்கால அரசியல் கருதி, ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ள முயற்சிக்கின்றனர்.
தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 43 நாடாளுமன்ற உறுப்பினர்கள், கூட்டு அரசின் பங்காளிகளாக இருந்து வருகின்றனர்.
இதிலிருந்து விலக விரும்புவோர், தமது நிலைப்பாட்டை ஏற்கனவே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் தெரிவித்துள்ளனர்.
இவர்களை ஒரு மாத காலம் பொறுத்திருக்குமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கோரியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## முகமாலைக்கு இன்று வருகின்றார் மனித உரிமை ஆணையரின் சகோதரர்




கொழும்பு, மார்ச் 6
கண்ணிவெடிகளைத் தடைசெய்யும் பிரகடனத்தின் சிறப்புத் தூதுவரான ஜோர்தான் இளவரசர் மிரைட் அல் ஹூசைன் முகமாலைக்கு இன்று வருகை தரவுள்ளார்.
நான்கு நாள்கள் அதிகாரபூர்வப் பயணமாகக் கொழும்பு வந்த அவர், தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளைப் பார்வையிடுவதற்காக, இன்று முகமாலைக்கு வரவுள்ளார்.
அத்துடன், வடக்கில் கண்ணிவெடிகளை அகற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும், கண்ணிவெடிகளால் பாதிக்கப்பட்டவர்களையும் இளவரசர் மிரைட் அல் ஹூசைன் சந்திக்கவுள்ளார்.
கண்ணிவெடிகளைத் தடைசெய்யும் பிரகடனத்தில் இலங்கை அரசு, 163 ஆவது நாடாக இணைந்து கொண்டுள்ளதை அடுத்து, இளவரசரின் இந்தப் பயணம் இடம்பெறுகிறது.
இளவரசர் மிரைட் அல் ஹூசைன், தற்போது ஐ.நா. மனித உரிமை ஆணையாளராகப் பணியாற்றும் சயிட் அல் ஹூசைனின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## ஓ.எம்.பி. உறுப்பினர்கள் நியமனம்

# கூட்டு அரசின் பிரதான பங்காளியே போர்க்கொடி



கொழும்பு, மார்ச் 5
காணாமற் போனோர் பணியகத்தின் (ஓ.எம்.பி.) உறுப்பினர்களின் தெரிவு விடயத்தில், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இணக்கப்பாடு இல்லை என்று அந்தக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.
'காணாமற் போனோர் பணியகச் சட்டத்தை அமைச்சரவையே நிறைவேற்றியது. எனினும், அதில் பணியாற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நாம் ஒருபோதும், ஆசி வழங்கவில்லை. அதுபற்றிய பெரிய தொரு விவாதம் உள்ளது.
ஒரு கட்சியாக நாம் இன்னமும் அதுபற்றிக் கலந்துரையாடவில்லை. நாம் கலந்துரையாடலுக்குப் பின்னர் எமது முடிவை அறிவிப்போம்' என்றும் அவர் தெரிவித்துள்ளார். (5)

# நிமால்கா பெர்னாண்டோவின் நியமனத்துக்கு எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 6
காணாமற் போனோர் பணியகத்தின் ஆணையாளர்பதவியிலிருந்துநிமால்கா பெர்னாண்டோவை நீக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குளோபல் சிறிலங்கா போரம் என்ற அமைப்பு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.
காணாமற் போனோர் பணியகத்துக்கான ஆணையாளர் மற்றும் உறுப்பினர்கள் அரச தலைவர் மைத்திரிபாலவினால் கடந்த வாரம் நியமிக்கப்பட்டனர். இவர்களில் நிமால்கா பெர்னாண்டோவும் ஒருவர்.
இந்த நிலையில், இவரது நியமனத்துக்கே தற்போது எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.
உலகம் முழுவதிலும் வாழ்ந்து வரும் தேசப்பற்றுடைய இலங்கையர்களின் சார்பில் நிமால்காவின் நியமனத்தைக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.
நிமால்கா போன்றவர்கள் குறித்து உரிய விசாரணை நடத்தி, அவர்களைப் பணி நீக்குவதற்கு அரச தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனகோரியுள்ளனர். நிமால்காவின் நியமனம் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையிலானது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (5)

## பொருத்தமானவர்கள் இனங்காணப்படவில்லை

ஹர்ச தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 6
சட்டம் ஒழுங்கு அமைச்சைப் பொறுப்பேற்பதற்குப் பொருத்தமானவர்கள் இனங்காணப்படாமையினாலேயே அதனைத் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க பொறுப்பேற்றுள்ளார்.
அதனை அடுத்து யாருக்கு வழங்க வேண்டும் என்று இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
அமைச்சரவையில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றம் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் பல்வேறு வகையான கருத்துக்களை முன்வைத்துக் கொண்டிருக்கின்றனர். சட்டம் ஒழுங்கு அமைச்சுப் பதவி தொடர்பாகப் பரவலான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு வழங்கலாம் என்ற வகையிலான கருத்துக்கள்நிலவுகின்றன. இது தொடர்பில் இதுவரையில் எந்தத் தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. அதேவேளை சரத் பொன்சேகாவுக்கு வழங்குதல் தொடர்பான எந்தவிதப் பேச்சுக்களும் இடம்பெறவில்லை.
சட்டம் ஒழுங்கு அமைச்சைப் பொறுப்பேற்கக்கூடிய அதற்குப் பொருத்தமானவர்கள் இனங்காணப்படும் பட்சத்தில் அவர்களுக்கு எதிர்காலத்தில் அந்தப் பதவி வழங்கப்படலாம். அது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரே தீர்மானிக்க வேண்டும். அதனை ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது சுதந்திரக் கட்சியோ தனித்துத் தீர்மானிக்க முடியாது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் சட்டம் ஒழுங்கு அமைச்சைத் தம் வசப்படுத்திக் கொள்ளும் வகையிலான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.
இவ்வாறான நிலையில் கட்சியினதோ அல்லது கட்சி உறுப்பினர்களதோ தீர்மானங்களை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார். (5.31)

## நிதியுதவி நிறுத்தப்படாது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

கொழும்பு, மார்ச் 6
மஹாபொல அல்லது ஏனைய புலமைப்பரிசில் நிதியுதவிக்குத் தகுதியுடைய எந்தவொரு பல்கலைக்கழக மாணவருக்கும் அந்தச் சலுகை மறுக்கப்பட மாட்டாது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு உறுதியளித்துள்ளது.
ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வா தெரிவித்ததாவது:
கடந்த இரண்டு மாதங்களில் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்த பீடங்களில் உள்ள மாணவர்களுக்கான புலமைப்பரிசில் கொடுப்பனவு இந்த மாதத்தில் வழங்கப்படும். கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாத காலப்பகுதிக்குள் ஏனைய பீடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும். புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை வழங்குவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் ஒவ்வொரு பல்கலைக்கழகத்துக்கும் வழங்கப்பட்டுள்ளன - என்றார். (5)

# ஆஸியிலுள்ள இலங்கை ஏதிலிகள் அமெரிக்காவுக்கு அனுப்பி வைப்பு

கொழும்பு, மார்ச் 6
நௌருவில் ஆஸ்திரேலியாவின் குடிவரவுத் தடுப்பு முகாமில் இருந்த இலங்கையர்கள் உள்ளிட்ட மற்றொரு தொகுதி ஏதிலிகள் அமெரிக்காவில் குடியேற்றப்படுவதற்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.
29 பேர் கொண்ட இந்தக் குழுவில், இரண்டு இலங்கைக் குடும்பங்கள், ஒரு றொகிங்யா குடும்பம், ஒரு ஆப்கானிஸ்தான் குடும்பம், மற்றும் இலங்கை, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் நாடுகளைச் சேர்ந்த தனிநபர்கள் இடம்பெற்றுள்ளனர்.
நௌருவில் இருந்து இவர்கள் நேற்று முன்தினம் வானூர்தி மூலம் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டனர்.
இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ள எட்டுப் பேர் குழந்தைகளாவர்.
ஆஸ்திரேலியத் தடுப்பு முகாம்களில் உள்ள ஆயிரத்து 250 ஏதிலிகளைத் தமது நாட்டில் குடியேற்ற அமெரிக்கா இணங்கியிருந்தது. இதற்கமைய, ஐந்தாவது தொகுதி ஏதிலிகள் தற்போது அமெரிக்காவுக்கு அழைத்துச்செல்லப்பட்டுள்ளனர். (5)

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு 05 . 03 . 1962

இறப்பு 03 . 03 . 2018

### திருமதி சிவமணி அருணகிரிநாதர்

நகுலேஸ்வரா வீதி, கீரிமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவமணி அருணகிரிநாதர் 03.03.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி - சிற்றூண்டி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தன் (மயிலப்பாசி) - இலச்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், அருணகிரிநாதரின் அன்பு மனைவியும், வினோத் (சுவிஸ்), பிரஷாத் (மனோராஜ் ரில்லர் பணியாளர்), ஜெயீபா (ஆசிரியை - நகுலேஸ்வரா மகா வித்தியாலயம்), சுஜீவன் ஆகியோரின் அன்புத் தாயும், சிந்துஜா (சுவிஸ்), றம்யா ஆகியோரின் அன்பு மாமியும், வினுசாவின் அன்புப் பேர்த்தியும், சின்னத்துரை, அப்பாத்துரை, பொன்னுத்துரை, காலஞ்சென்ற தெய்வி மற்றும் பூரணம், காலஞ்சென்ற சின்னமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகமுத்து, முருகேசு, குஞ்சுப்பிள்ளை, செல்லமுத்து, சண்முகம், ராசமணி, மனோன்மணி (சுவிஸ்), திருநாவுக்கரசு (சுவிஸ்), புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.03.2018) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நகுலேஸ்வரா வீதி,**
**கீரிமலை.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**0771727836**

---

## நன்றி நவிலலும் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் செல்லப்பா வேலுப்பிள்ளை



உதிப்பு 28.04.1928 — உதிர்வு 05.02.2018

கடந்த 05.02.2018 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் செல்லப்பா வேலுப்பிள்ளை அவர்களின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும், தொலைபேசியினூடாக துயரம் பகிர்ந்து கொண்டோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் பதாகைகள் மூலமும் தமது அனுதாபத்தை வெளிப்படுத்தி ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி-களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (07.03.2018) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன.
அத்தருணம் தாங்களும் வருகைதந்து கிரியைகளிலும் மதியபோசனத்திலும்கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்**

(ACH/3359(11,17)

**குடும்பத்தினர்.**
சரசாலை வடக்கு, சாவகச்சேரி.

---

## முதலாம் ஆண்டு நினைவு நாள்



தோற்றம் 16 . 04 . 1929

மறைவு 16 . 02 . 2017

### அமரர் செல்லம்மா சின்னையா

ஆண்டு ஒன்று கடந்தபோதும்
அவனியில் உங்களை மறப்பதுண்டோ?
அனைவராலும் அம்மம்மா என்றழைத்த தெய்வமே
ஆறாது என்றும் உங்கள் நினைவலைகள்

திதி:- அபரபக்க பஞ்சமி (06.03.2018)

**சீனட்டிப்பாய்,**
**கணேஸ்வரம், அளவெட்டி.**


(CS/144492(11,17)

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
**குடும்பத்தினர்.**

---

## சின்னப்பு கெங்காதரன்

### (மில், லொறி உரிமையாளர்)



தோற்றம் 01.12.1947 — மறைவு 05.03.2018

யாழ். சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு கெங்காதரன் 03.03.2018 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்புமருமகனும் சறோஜினி தேவியின் ஆருயிர்க் கணவரும், சாந்தகுமார் (ஜேர்மனி), வசந்தகுமார் (ஜேர்மனி), பாலகுமார் (லண்டன்), காலஞ்சென்றகங்காதேவிமற்றும்செல்வகுமார் (இலங்கை), கோகுலகுமார் (லண்டன்), சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விநாயகமூர்த்தி, காலஞ்சென்ற பரமசாமி, சிவக்கொழுந்து, புவனேஸ்வரி, புஸ்பவதி, இராசையா, சிவபாக்கியம் (சுவிஸ்) ஆகியோரின்அன்புச்சகோதரரும், கௌரி (ஜேர்மனி), ஜீவரூபி (ஜேர்மனி), சுபாஜினி, தயாளினி, அஜந்தா(லண்டன்), ராஜி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தவமணிதேவி, சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான அம்பலப்பிள்ளை, செல்லத்துரை, மற்றும் செல்லத்துரை, காலஞ்சென்ற இன்பமலர், பாலசுப்பிரமணியம் (சுவிஸ்)ஆகியோரின்அன்புமைத்துனரும், சந்தோஷ்(ஜேர்மனி), சுவேதா(ஜேர்மனி), சுமித்தா (ஜேர்மனி), அஜய் (ஜேர்மனி), பிரசாந்திகா, தர்மிகா, காணுஜன், பிரவீன், மதுஜா(லண்டன்), மதுசாந் (லண்டன்), பபிஷாலினி(லண்டன்), துவாரகன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2018) செவ்வாய்க்கிழமை மு.ப 11:30 மணியளவில் இடம்பெற்று சரசாலை கொம்பிகுலம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சரசாலை வடக்கு,**
**சாவகச்சேரி.**

தகவல்
**குடும்பத்தினர்.**


**0769878315**

---

## மரண அறிவித்தல்

### வஸ்தியாம்பிள்ளை ஞானானந்தன்

**(மனோகரன் - முன்னாள் லைடன் தொழிற்சாலை ஊழியர்)**



யாழ்.. ஊர்காவற்றுறை, கரம்பொன்னை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கொட்டடி, ஓட்டுமடம், கிளிநொச்சி கனகபுரம் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட வஸ்தியாம்பிள்ளை ஞானானந்தன் 04.03.2018 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வஸ்தியாம்பிள்ளை - எஸ்தரம்மா தம்பதி களின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - நாகபுஸ்பம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பத்மாதேவியின் பாசமிகு கணவரும், ஷர்மிளா (விரிவுரையாளர் - கோப்பாய் ஆசிரியர் கலாசாலை), கயூரன் (ஆசிரியர் - யா/ வேலணை மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும், நிசாந்தி (ஆசிரியர் - கிளி/கட்டைக்காடு அ.த.க. பாடசாலை), பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், தபிசன், நிதேஸ், தனஞ்ஜெய் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் நாளை (07.03.2018) புதன்கிழமை கனகபுரம் யூதாததேயு ஆலயத்தில்முற்பகல்10மணியளவில் திருப்பலிஒப்புக்கொடுக்கப்பட்டுபின்னர் உருத்திரபுரம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**112, கனகபுரம், கிளிநொச்சி.**

(AKN/392)(11,17)

தகவல்
**குடும்பத்தினர்.**

**0776509665**

### தொடர்கிறது பல்கலைப் போராட்டம்

# கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் காலவரையறையின்றி முடங்கின

## நாளைய பரீட்சை இரத்து என்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6

**பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் தொடர் போராட்டம் காரணமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடும் இக்கட்டு நிலை ஏற்பட்டுள்ளது.**

சில பரீட்சைகள் காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. விரிவுரை வகுப்புகள் கவனிப்பின்றி, தூசிகள் நிறைந்த நிலையில் உள்ளன. கற்றல் கற்பித்தல்கள் இடம்பெறுவதில்லை. 6ஆவது நாளான நேற்றும் இந்த நிலை நீடிக்கிறது. கல்வி சாரா ஊழியர்கள் மேற்கொண்டு வரும் தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்துக்கு அரசு இன்னும் தீர்வை முன்வைக்காமையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உட்பட அநேகமான பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் கல்வி சாரா ஊழியர்கள் கடந்த புதன்கிழமை தொடக்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். அதன்றால் நாளை ஆரம்பமாகவிருந்த கலைப்பீட இறுதியாண்டு மாணவர்களுக்கான கலைமாணிப் பரீட்சைகள் மறு அறிவித்தல்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களிலுள்ள சில பரீட்சைகள் இங்கு இடம்பெறவிருந்த போதும் அவையும் இடமாற்றப்பட்டுள்ளன. மாதாந்த இழப்பீட்டுப் படி அதிகரித்தல், அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டதனை மீறி ஒரு சாராருக்கு மாத்திரம் (கல்வி சார் உத்தியோகத்தர்களுக்கு) 15 வீத அதிகரிப்பு வழங்கப்பட்டது. ஆனால் கல்வி சாரா உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படவில்லை. சம்பள மீளாய்வு உரிய வருடத்தில் ஆரம்பிக்கப்படவில்லை, 2013ஆம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டிருக்கும் மொழித் தேர்ச்சிக் கொடுப்பனவு மீள வழங்கப்படவில்லை. அவற்றை வழங்க வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளையும் முன்வைத்துப் போராட்டம் தொடர்கிறது என்று கல்வி சாரா ஊழியர்கள் சங்கம் தெரிவித்தது.

"நீண்ட நாள் காலம் தேவைப்படும் பரீட்சைகளுக்குச் சங்கம் ஆதரவு வழங்கவில்லை. ஒரு சிலவற்றுக்கே உதவுகிறோம். எமது கொடுப்பனவு 15 வீத அதிகரிப்புடன் கிடைப்பதைத் தடுக்கும் நோக்கில் அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரிய சங்கங்களின் சம்மேளனம் தடை ஏற்படுத்தியுள்ளது என்றும் கல்வி சாரா ஊழியர்களின் சங்கம் குற்றஞ்சாட்டுகிறது. கடந்த வாரம் அமைச்சர் ஜோன் செனவிரட்ண நிகழ்வு ஒன்றுக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு வந்திருந்தார். அவருடன் சுமார் 2 நிமிடங்கள் கலந்துரையாடி எமது கோரிக்கைகளைக்கூறி உயர் கல்வி அமைச்சு மற்றும் அரசுக்குத் தெரிவிக்குமாறு கூறியிருந்தோம். அதனைக் கூறுவதாக அவர் உறுதியளித்திருந்தார்.

எது எப்படியிருப்பினும் தமது கோரிக்கைகள் தீர்க்கப்படும்வரை போராட்டம் தொடரும்" என்று கல்வி சாரா ஊழியர்கள் சங்கம் கூறுகிறது. (எ-4)



## வவுனியாவை வந்தடைந்தது இலவச போக்குவரத்துக்கான பயணம்

வவுனியா மார்ச் 6

பாடசாலை மாணவர்களின் இலவச போக்குவரத்தை வலியுறுத்தி பீதுருதாலகால மலைவரை மோட்டார் சைக்கிள் பயணம் மேற்கொண்ட வவுனியா இளைஞர்கள் நேற்றுக்காலை 10.30 மணியளவில் வவுனியாவை அடைந்தனர்.

'சிறுவர் வாழ்வை ஒளிமயமாக்குவோம்' என்ற தொனிப்பொருளின் கீழ் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி முன்பாக இருந்து கடந்த சனிக்கிழமை பயணத்தை ஆரம்பித்திருந்தனர்.

வவுனியா வேப்பங்குளம் இளைஞர் தர்மலிங்கம் பிரதாபன், மங்களராஜன் இமயவன் ஆகியோர் நேற்றுக் காலை வவுனியாவை வந்தடைந்தனர்.

இவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு வவுனியா ஸ்சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (எ-ரி)

## வடக்கிலுள்ள முன்பள்ளிகள் யாருடைய கட்டுப்பாட்டுக்குள்?

### கல்விச் சமூகத்தினர் மத்தியில் குழப்பம்

மாங்குளம், மார்ச். 6

வடக்கு மாகாணத்தில் உள்ள முன்பள்ளிகள் தொடர்பாக சரியான நிலைப்பாட்டுக்குள் வரமுடியவில்லை என்று கல்வி அதிகாரிகள் குழப்பம் அடைகின்றனர்.

மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக்கல்வி அலுவலகங்கள் ஊடாக சிறார்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு வலய ரீதியாக முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர்களை வைத்து முன்பள்ளிகளை வழி நடத்திவருகின்றது. இருப்பினும் முன்பள்ளிகளில் மதம் சார்ந்த பெரியார்கள் சில முன்பள்ளிகளை தங்களுடைய திட்டங்களுக்கு ஏற்ப வழிநடத்துகின்றனர். முன்பள்ளி களில் இராணுவத்தினர் தனி அதிகாரம் செலுத்துகின்றனர்.

குறிப்பாக மாகாணக் கல்வித் திணைக்களம் ஊடாக சம்பளம் பெறுகின்ற முன்பள்ளி ஆசிரியர்கள் மாதாந்தம் தலா 4ஆயிரம் ரூபா வீதம் பெற்றுக் கடமையாற்றுகின்றார்கள். இராணுவத்தின் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஊடாக 30ஆயிரத்துக்கு மேல் சம்பளம் பெறுகின்ற முன்பள்ளி ஆசிரியர்களும் அதே கடமையை ஆற்றுகின்றனர். இதனைவிட பல முன்பள்ளிகளுக்கு பிரதேச செயலகத்தினர், மாதர் அபிவிருத்திச் சங்கத்தினர் பல உதவிகளை தங்கள் போக்கில் வழங்கி வருகின்றனர். இதன் காரணமாக முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் கல்வித்திணைக்கள அதிகாரிகள் மத்தியில் குறிப்பாக வலயக்கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்களிடையே குழப்பம் ஏற்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-72)

### தனியார் சித்த மருத்துவமனைகளில்

# மேலைத்தேய மருந்துப் பாவனை தொடர்பில் சிறப்புப் பரிசோதனை

யாழ்ப்பாணம்.மார்ச்.6

வடக்கு மாகாணத்திலுள்ள தனியார் சித்த மருத்துவ சிகிச்சை நிலையங்களில் மேலைத்தேய மருந்துகள் பயன்படுத்துவது தொடர்பில் பரிசோதனைகள் நடைபெற்று வருவதாக மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணத்தில் சுதேச மருத்துவத் திணைக்களத்தின் அனுமதியுடன் சித்த மருத்துவ சிகிச்சை நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்த சிகிச்சை நிலையங்க்ளுக்கான அனுமதியை வழங்கும்போது உட்கட்டுமான வசதிகள், ஆளணிகள், மருந்துகளின் தன்மைபோன்ற விடயங்கள் ஆராயப்படுகின்றன. குறித்த சிகிச்சை நிலையங்களில் சித்த மருத்துவம் சார்ந்த சிகிச்சை முறைகள் மாத்திரமே மேற்கொள்ள முடியும் என்று அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட பின்னரே அனுமதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

எனினும் சில மருத்துவ நிலையங்கள் மேலைத்தேய மருந்துகள் பயன்படுத்துகின்றன என திணைக்களத்துக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. சித்த மருத்துவம், ஆயுள் வேதம், யுனானி போன்ற சிகிச்சை முறைகள் மாத்திரமே அவர்களால் மேற்கொள்ள முடியும். மேலைத்தேய மருத்துவ முறைகள் பயன்படுத்துவது குற்றமாகும். கடந்த வருடம் இவ்வாறான 6 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைவாக பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரியின் கண்காணிப்பில் முதற் கட்டமாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அதையும் மீறிச் செயற்பட்டால் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும். ஆகவே இது தொடர்பான பரிசோதனைகள் கண்காணிப்புக்கள் நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது வழங்கல்

யாழ்ப்பாணம்.மார்ச்.6

வடக்கு மாகாணத்தில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்குக்கான நல்லாசிரியர் விருது வழங்கப்படவுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

வடக்கு மாகாணத்தில் கல்விச் சேவையை ஆசியர்கள் சிறப்பாக வழங்கி வருகின்றனர். அவர்களுக்கான பாராட்டு நிகழ்வுகள் அமைச்சால் நடத்தப்பட்டு வருகின்றன. அதேபோல முன்பள்ளி ஆசிரியர்களும் தமது சேவைகளை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றனர். அதிக காலம் பல முன்பள்ளி ஆசியர்கள் சேவை ஆற்றி வருகின்றனர்.

முன்பள்ளிகள் தற்போது வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகின்றன. அவர்களுக்கான ஆலோசனைகள், வழிகாட்டல்கள் அமைச்சால் வழங்கப்பட்டு வருகின்றன. ஆகவே அவர்களுக்கான மதிப்பளிப்பு அவசியம். ஆகவே இவர்களுக்கான நல்லாசிரியர் விருதுகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளன. முன்பள்ளிகளுக்கு நேரில் சென்று முன்பள்ளி கட்டடத் தொகுதி, கற்பிக்கும் முறை, அணுகு முறை, சுகாதாரம், தொடர்பாடல் போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டு தெரிவுகள் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)

## தமிழ்மொழியில் நடைபெற்ற முதலுதவிப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், மார்ச்.6

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக தமிழ் மொழி மூலம் முதலுதவிப் பயிற்சிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்திலுள்ள சென்ஜோன்ஸ் அம்புலன்ஸின் தலைமைக் காரியாலயத்தில் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. சென்ஜோன்ஸ் அம்புலன்ஸின் தேசிய தலைமையக ஆணையாளர் நிகழ்வை ஆரம்பித்து வைத்து முதலுதவி மற்றும் அவை தொடர்பான விளங்கங்களை வழங்கினார்.

நிகழ்வில் மன்னார், மட்டக்களப்பு, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளின் உடற்கல்வி மற்றும் முதலுதவித் துறை ஆசிரியர்கள், பொலிஸ் பரிசோதகர்கள், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் வேறு நிறுவனங்களைச் சார்ந்த உத்தியோகத்தர்கள், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். தேசிய சென்ஜோன்ஸ் அம்புலன்ஸின் தமிழ் ஒருங்கிணைப்பாளர் சுரேஷ் கலந்து கொண்டவர்களுக்கான செய்முறைப் பயிற்சிகளை வழங்கினார்.



# தமிழர் தம் மொழியில் கையெழுத்திடுங்கள்

## கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் அறிவுறுத்துகிறது

**யாழ்ப்பாணம், மார்ச் 6**

**உலக மக்கள் பலரும் தத்தமது தாய்மொழியிலேயே கையெழுத்திடுகின்றனர். ஆனால் தமிழர்களே ஆங்கிலத்தில் கையெழுத்திடுகின்றனர். இந்த விந்தையான செயற்பாடு வேறு எங்கும் காணமுடியாது. தமிழர்கள் இனிமேல் தமிழ் மொழியில் கையெழுத்திடுங்கள்.**

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

தமிழ் மொழியைக் காப்போம் என்னும் தொனிப்பொருளில் சங்கம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உலக வரலாற்றில், தாய்மொழிக்கு முதன்மை அளிக்க வேண்டுமென எண்ணிச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் நாடுகள் ஏராளம். அவை நாட்டின் மொழி வளர்ச்சியைச் சமுதாயத்தின் வளர்ச்சி என்று கருதி தனிக் கவனம் செலுத்துகின்றன. அதுமட்டுமன்றி அந்த வளர்ச்சிக்காக அர்ப்பணிப்பான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றன. பிரான்ஸ், ரஷ்யா, இங்கிலாந்து, யப்பான், அரேபியா, ஜேர்மன், சீனா போன்ற நாடுகளில் இதனைக் காணலாம்.

ஆனால் இலங்கையில், ஆங்கில மொழிப் பற்றால் நம் தாய்மொழியைக் கீழ் நிலைக்குக் கொண்டு வந்து விட்டோம். நம் மொழியைக் கேலிக்குள்ளாக்குவதன் மூலமாக நம்மை நாமே கேலிக்குள்ளாக்குகின்றோம் .

எமது மொழியில் பேசவும் கற்கவும் கையெழுத்திடவும் பயன்படுத்தவும் தயங்குவது கண்டு உலகம் நம்மைப் பார்த்து சிரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

பாலில் நீரைக் கலப்பது சட்டப்படி குற்றம் என்கின்றோம். அரிசியில் கல்லைக் கலத்தல், எண்ணெய்யில் கலப்படம் செய்தல் போன்றவற்றையெல்லாம் கண்டிக்கின்றோம். தண்டிக்கின்றோம். ஆனால் மொழிக்கலப்பு, கிரந்த எழுத்துக் கலப்பு கூடாது என்றால் அதனை வேறொரு பார்வை பார்க்கின்றோம். முடிந்தவர்கள் தூய்மையாகப் பேசினாலும், எழுதினாலும் முறைத்துப் பார்க்கின்றோம்.

5 ஆயிரம் ஆண்டு பழமையுடைய மூத்த மொழி தமிழ்மொழி. அது தலைமையும், தாய்மையும் தொன்மையும் தூய்மையும் வண்மையும் நன்மையும் உடைய வளர்மொழி. நீண்ட நெடிய மரபுகளையுடையது. காலப் போக்கில் பிறமொழிக் கலப்பால் நிலைகுலைந்து தனித் தமிழ்ப் பற்றாளர்களின் சான்றோர்களின் தொண்டால் தமிழ் வளர்ந்து வருகின்றது.

இந்த உலகிலே எதையும் இழக்கலாம் மறக்கலாம். ஆனால் தாய்மொழியை இழந்து மறந்து பிறமொழிப் பற்றுக் கொண்டு வாழ்தல் பொய்க்காலில் நடப்பதற்குச் சமமாகும்.

எனவே, எமது கையெழுத்தைத் தமிழில் இடுவோம். குடிதண்ணீரைத் தூயநீராகக் காத்தல் போலத் தமிழை முடிந்தளவு தூய தமிழாய்ப் பேசுவோம். வாழ்த்துக்கள் வரவேற்புக்கள் அழைப்புக்கள் அறிவித்தல்கள் பெயர் வைத்தல்கள் தமிழில் எழுதுவோம். பணிமனைகளில் ஆங்கிலத்தில் மட்டும் வெளியிடப்படும் அறிக்கைகள் தகவல் திரட்டுக்கள் புள்ளி விவரங்கள், கோப்புக்கள், பதிவேடுகள் என்பவற்றில் தமிழ் மொழியும் இடம்பெறச் செய்வோம்.

எந்த இனமும் தத்தம் மொழியை பேச - பேண முன்வருவது போலத் தமிழையும் தமிழர்களையும் தமிழர்களாகிய நாமும் பேண முன்வருவோம்.

தமிழ் மணம் வீசிய தெருவில் தமிழைக் காணோம். மத்திய காலத்தின் தொடக்கம் முதல் தமிழில் புகுத்தப்பட்ட கிரந்த எழுத்துக்கள் தமிழின் தோற்றத்தைக் கெடுத்தன, கெடுக்கின்றன. இவற்றை உணர்ந்து கிரந்த எழுத்துக்களை பிறமொழி எழுத்துக்களை நீக்கி எழுதுவோம். எல்லாத்துறையிலும் எல்லாக் கட்டங்களிலும் எங்கும் எதிலும் தமிழ் வாழ, தமிழ்வளர தமிழ் வாழ விழைவோம் -என்றுள்ளது. (எ-4)

---

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால்

## முல்லைத்தீவில் மாபெரும் கவனவீர்ப்பு போராட்டம்

முல்லைத்தீவு, மார்ச் 6

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்டுள்ள போராட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி ஒரு ஆண்டு நிறைவை எட்டவுள்ளது. அதனை முன்னிட்டு மகளிர் தினமான அன்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நாளை மறுதினம் முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும்.

அரச பிரதிநிதிகளிடமும், அரசிடமும் எடுத்துக்காட்டி எமது போராட்டங்களை முன்னெடுத்து ஒருவருடம் முழுமையாகவுள்ள இந்த நிலையில் எந்தவொரு தீர்வும் எமக்குக் கிடைக்க வில்லை. இதனால் எங்களின் பிரச்சினைகளை பன்னாட்டுக்கு எடுத்துக்காட்டவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. பன்னாடுகள் எங்களைத் திரும்பிப் பார்க்கவேண்டும். அரச பிரதிநிதிகள் திரும்பிப் பார்க்கவேண்டும் என்ற நோக்கத்தில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தவுள்ளோம்.

எங்களின் பிரச்சினையை உலகுக்கு எடுத்துரைக்க அனைவரையும் அழைக்கின்றோம் என்று போராட்டத்தை முன்னெடுக்கவுள்ள மக்கள் தெரிவித்தனர். (எ-ரி3)

---

மகாதேவா ஆச்சிரமத்தின் நிர்வாக

## கணக்கின் தவறுகளை ஆராய சிறப்புக் குழு

யாழ்ப்பாணம்.மார்ச்.5

கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்தின் நிர்வாகக் கணக்கின் வழுக்களை ஆராய்வதற்கு சிறப்புக் குழு ஒன்று நியமிக்கப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

மகாதேவா ஆச்சிரமத்தின் கணக்கில் தவறுகள் இருப்பதாக மாகாண சபை உறுப்பினர்களால் துறை சார்ந்த சுகாதார அமைச்சின் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. கணக்கு வழக்குகள் யாவும் ஆண்டு இறுதியில் மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது. கடந்த வருடக் கணக்கு அறிக்கையில் தவறுகள் நடைபெற்றுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டது. ஆகவே இது தொடர்பில் ஆராய்வதற்கு சிறப்புக் குழு ஒன்று மாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு ஆச்சிரமத்துக்கு நேரில் சென்று கணக்குகளை ஆராயவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர் தி.விஸ்பரூபனை தொடர்பு கொண்டு கேட்டபொது, 'ஒவ்வொரு வருட இறுதியிலும் ஒவ்வொரு சிறுவர் இல்லங்களும் ஆண்டுக்கான கணக்கு அறிக்கையை திணைக்களத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அந்த வகையில் மகாதேவ சிறுவர் இல்லம் 2016ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கை சமர்ப்பித்தது. அதில் எந்தப் பிழையும் இல்லை. ஆனால் கடந்த வருட கணக்கு அறிக்கையில் தவறு இருப்பதாக சபை உறுப்பினர்களால் சுட்டிக் காட்டப்பட்டது. அதற்கு அமைவாக தற்போது ஒரு குழு நிய மிக்கப்பட்டு அறிக்கைகள் மீள் பரிசீலனை செய்யப்படவுள்ளன - என்றார். (எ-7)

---

மண்டைதீவை மையப்படுத்திய

## சுற்றுலா அபிவிருத்தி தொடர்பான கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச். 6

வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மண்டைதீவு மற்றும் அதனை அண்டிய சிறிய தீவுகளை மையப்படுத்திய சுற்றுலா அபிவிருத்தித் திட்ட முன்னெடுப்பு தொடர்பான கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 2 மணியளவில் இடம்பெறும்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் தீவகத்துக்கான 2000 கோடி ரூபா முதலீட்டுத் திட்டம் தொடர்பாகவும் மண்டைதீவை மையப்படுத்தி எவ்வாறு அதனை முன்னெடுப்பது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது. 2012இல் முன்னெடுக்கப்பட்டு ஆய்வுக் கற்கை முன்னெடுக்கப்பட்டு வேலணை பிரதேச செயலாளரால் காணி அளவீடு செய்யப்பட்டு மத்திய சுற்றாடல் அதிகாரசபை, கரையோரம் பேணல் அமைச்சு அலுவலக அனுமதியுடன் முன்னெடுக்கப்பட்ட இந்தத் திட்டம் இதுவரை ஆரம்பிக்கப்பட வில்லை.

வடக்கு சுற்றுலாத்துறைக்கு முன்னோடியான திட்டமாக இந்தத் திட்டம் ஆராயப்பட்டு ஐந்து ஆண்டு அபிவிருத்தித் திட்டத்தில் பேசுபொருளாக முன்னெடுக்கப்பட்டது. இந்தத்திட்டம் காலதாமதம் செய்யப்படுவதற்கான காரணம் என்ன என்பது தொடர்பில் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற (இறுதியாக) ஐந்தாண்டு அபிவிருத்தி திட்டக் கூட்டத்தில் திணைக்களத் தலைவர்களால் ஆராயப்பட்டது. இதன் அடிப்படையிலேயே மீண்டும் வடக்கின் முக்கிய சுற்றுலா அபிவிருத்தி திட்டமாகிய யாழ்ப்பாணக் கலப்பு அபிவிருத்தித் திட்டம் என்ற முக்கிய சுற்றுலா அபிவிருத்திக்கான கலந்துரையாடலே மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எ-50)

---

## பிரதி அஞ்சல்மா அதிபர் பதவி வெற்றிடம் நிரப்பப்படாதுள்ளது

யாழ்ப்பாணம் .மார்ச் .6

வடக்கு மாகாணத்தில் பிரதி அஞ்சல்மா அதிபர் பதவிக்கான வெற்றிடம் கடந்த மூன்று மாத காலமாக நிரப்பப்படாமல் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே வடக்கு மாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் பணியாற்றிய கெ.கனகசுந்தரம் கடந்த ஜனவரி மாதம் 26ஆம் திகதி ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். இதனையடுத்து கடந்த மூன்று மாத காலமாக அந்த வெற்றிடம் நிரப்பப்படவில்லை என்று வடக்கு மாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் அலுவலகம் தெரிவித்தது.

வடக்கு மாகாணத்துக்கு புதிய பிரதி அஞ்சல்மா அதிபர் ஒருவரை விரைவாக நியமிக்கவும் மத்திய தபால் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பாலும் இந்த மாத நடுப்பகுதிக்குள் ஒருவர் நியமிக்கப்படுவார் என்று அஞ்சல் திணைக்களம் தெரிவித்தது. (எ-17)

---

## பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் மனுக்கள் கையளிக்கலாம்

### மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.மார்ச்.6

வடக்கு மாகாண பன்னாட்டு மகளிர் தின நிகழ்வில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பெண்கள் அமைப்புகள் மகளிர் விவகார அமைச்சுக்கு மனுக் கையளிக்க முடியும் என்று அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் பன்னாட்டு மகளிர் தின நிகழ்வுகள் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வின் ஆரம்பமாக கிளிநொச்சி பழைய கச்சேரியில் இருந்து விழிப்புணர்வுப் பேரணி மண்டபம் வரை செல்லவுள்ளது.

மகளிர் தினத்தையொட்டி பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் மதிப்பளிக்கப்படுவதுடன் சிறந்த பெண் முயற்சியாளர்களும் மதிப்பளிக்கப்படவுள்ளனர். இவர்கள் மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.


இதில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பெண்கள் அமைப்புக்களால் அமைச்சுக்கு மனு சமர்ப்பிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. கிடைக்கப்பெறும் மனுக்களை அமைச்சு ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும்-என்றார். (எ-7)

# ரணிலைப் பதவி நீக்க ஆதரவு பெருகுகிறது

## உதயகம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 6
பிரதான அரசில் கட்சிகள் மூன்று ஒன்றிணைந்த எதிர்க்கட்சியால் தலைமைஅமைச்சர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்துள்ளது.
இவ்வாறு பிவித்துரு ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது,
"14 குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த நம்பிக்கையில்லாபிரேரணைக்கு ஒன்றிணைந்த எதிர்க்கட்சியுடன், சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஆதரவு வழங்க உள்ளன.
நாட்டினதும் மக்களினதும் நலனைக் கருத்தில் கொண்டு ஜே.வி.பியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதற்கு ஆதரவளிக்க வேண்டும்.
தலைமைஅமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று சபாநாயகர் கருஜயசூரியவிடம் கையளிக்கப்படவுள்ளது - என்றார். (ஞ-ரி5)

# வடமேல் மாகாணத்துக்கு மகாவலி நீர் விரைவில் திட்டப்பணிகள் ஆரம்பம்



கொழும்பு, மார்ச். 6
மொரகஹகந்த மற்றும் மகாவலி நீரை வடமேல் மாகாணத்துக்கு கொண்டு செல்லும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
இதன் சீரமைப்புப் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.
இந்தத்திட்டத்துக்கு 600 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனத் திட்டப் பணிப்பாளர் பொறியியலாளர் ஜி.எம்.ஆர்.ஏ.பெரேரா தெரிவித்துள்ளார்.
அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கு அமைவாக இந்தத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. (ஞ-ரி5)

# மக்களுக்குச் சிறந்த முறையில் சேவைகளை வழங்குங்கள்

## மட்டு. மக்கள் வேண்டுகோள்



மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விவசாயிகளது உற்பத்திகள் தொடர்பிலும், உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்பிலும் கிழக்குப் பல்கலைக் கழகம் ஆய்வுகளை நடத்தி மக்களுக்குச் சிறப்பான சேவையை வழங்க வேண்டும்.
இவ்வாறு மட்டக்களப்பு பிரதேச விவசாயிகள் வேண்டுகோள் விடுத்தனர்.
மண்முனை மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட உன்னிச்சை, சிறியநீர்ப்பாசனத்திட்டங்களுக்கான விவசாய ஆரம்பக் கூட்டம் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.
அவர்கள் தெரிவித்ததாவது:
"விவசாயிகள் தமது உற்பத்தி நடவடிக்கைகள் சார்ந்து பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகின்றனர். இவ்வாறான பிரச்சினைகளில் இரசாயனங்கள் பாவிக்காது உற்பத்திகளை மேற்கொள்கின்ற போதும் அவற்றை நஞ்சற்றவையா அல்லது எவ்வளவு விகிதம் நஞ்சுள்ளது என்பது பற்றியோ இவற்றை நஞ்சற்றவை என்று கூறி விற்பனை செய்யவோ முடியாத நிலை காணப்படுகிறது.
எமது பிரசேதத்திலுள்ள மிகப்பெரிய சொத்தான கிழக்குப் பல்கலைக்கழகம் விவசாயம் தொடர்பில் பெரும் சேவையைச் செய்ய முடியும். எமது பிரதேசத்தின் உற்பத்திகளை மேம்படுத்துவதுடன் மக்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்த முடியும் என்றனர்.
இந்த நிகழ்வில் மாவட்டச் செயலர் மா.உதயகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், அதிகாரிகள் உள்ளிட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். (ஞ-ரி5)

# வியாபாரி மீதான தாக்குதலை கண்டித்து ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி,மார்ச்.6
கிளிநொச்சியில் இடம்பெற்ற கத்தி வெட்டுச் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து சந்தை வியாபாரிகள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



கிளிநொச்சிப் பொதுச் சந்தையில் கடந்த மூன்றாம் திகதி மரக்கறி வியாபாரி ஒருவரைக் கத்தியால் வெட்டிப் படுகாயத்தை ஏற்படுத்திய சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொதுச் சந்தை வியாபாரிகள் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.
கத்திவெட்டு எம் கலாசாரத்தைச் சீரழிக்கும், சந்தையின் பாதுகாப்பு யார் கையில், தனிநபர் வாள்வெட்டு தமிழின சாபக்கேடு, வயிற்றுப் பசியைத் தீர்க்க வந்த நாம் வாள்வெட்டுக்கு இரையாவதா போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.
சம்பவ இடத்துக்கு வருகைதந்த கரைச்சிப் பிரதேச சபையின் செயலாளர் க.கம்சநாதன் வியாபாரிகளின் உணர்வுகளை மதிக்காது பூட்டியிருந்த சந்தையின் கதவுகளைத் திறந்து உற்பத்தியாளர்களை உள்ளே விட்ட சம்பவம் வியாபாரிகளை மனதளவில் பாதித்துள்ளது எனக் கூறப்பட்டது.
முன்னறிவித்தல் இன்றி சந்தை வர்த்தகர்கள் சந்தையைப் பூட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையானது தொலைவில் இருந்து தங்களின் உற்பத்தி பொருள்களுடன் சந்தைக்கு வந்த உற்பத்தியாளர்களைப் பெரிதும் பாதித்திருந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஞ-ரி4)

# கொழும்பு மாநகர சபையின் பதில் ஆணையாளர் நியமிப்பு

கொழும்பு, மார்ச் 6
கொழும்பு மாநகர சபையின் பதில் ஆணையாளராக லலித் விக்கிரமரத்ன மேல் மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்டுள்ளார்.
கொழும்பு மாநகர சபை ஆணையாளர் வி.கே.ஏ அனுர அவரது பதவியில் இருந்து கடந்த 2 ஆம் திகதி நீக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்தப்பதவிக்குலலித்விக்கிரமரத்ன நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.
மீத்தொட்டுமுல்ல குப்பைமேடு சரிவு விசாரணையை முன்னெடுப்பதற்காகக் கொழும்பு மாநகர சபை ஆணையாளர் வி.கே.ஏ அனுரவை அவரது பதவியில் இருந்து நீக்கினார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஞ-ரி5)

# மாநகர சபை ஊழியர் சேவைப்புறக்கணிப்பு

கொழும்பு, மார்ச் 6
கொழும்பு மாநகர ஆணையாளர் வீ.கே.ஏ.அனுரவை அந்தப் பதவியில் இருந்து விலக்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அதன் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களும் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
கொழும்பு மாநகர சபையின் தொழிற்சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பு மாநகர சபை வளாகத்தில் இடம்பெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஊழியர்கள் அனைவரும் கலந்துகொண்டுதமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். (ஞ-ரி5)

# அனுமதியின்றி நாட்டில் வசித்த இந்தியர் கைது


கொழும்பு, மார்ச். 6
புஸ்ஸல்லாவ, பொரட்டாசிவத்தவில் சட்டவிரோதமாக வசித்து வந்த இந்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.
பொலிஸார் நடத்திய விசாரணையின் போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.
35 வயதுடைய சந்தேகநபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். இவர் நேற்று கம்பளை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.
மேலதிக விசாரணைகளைப் புஸ்ஸல்லாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஞ-ரி5)

# விளக்கமளிக்கும் செயலமர்வு



நுவரெலியா, மார்ச் 6
நுவரெலியா பரிசுத்த திரித்துவ சௌமிய கலையரங்கில் இந்திய புலமைப் பரிசில் திட்டத்துக்கான விளக்கமளிக்கும் செயலமர்வு நேற்று இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் நூலகங்களுக்குப் புத்தகப் பொதிகள் வழங்கப்பட்டன.
நுவரெலியா லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கண்டி இந்திய உதவித் தூதுவர் பிரேந்திர சிங் மற்றும் நுவரெலியா லயன்ஸ் கழகத் தலைவர் ஆர். குணசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஞ-ரி5)

# ஒஸ்கர் விருதுகள் 2018



90ஆவது ஒஸ்கர் விருது வழங்கும் விழா, அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நேற்றுக் கோலாகலமாக இடம்பெற்றது. விருதுகளின் முழு விவரம் வருமாறு.

சிறந்த படம் – த ஷேப் ஒவ் வோட்டர்
சிறந்த நடிகர் – கேரி ஓல்டுமேன் (டார்க்ஸ்ட் ஹார்)
சிறந்த நடிகை – பிரான்சஸ் மிக்டார்மண்ட் (த்ரீ பில்போர்ட்ஸ் அவுட்சைட் எப்பிங், மிசோரி)
சிறந்த இயக்கம் – கில்லர்மோ டெல் டோரோ (த ஷேப் ஒவ் வோட்டர்)
சிறந்த பாடல் – கோகோ (ரிமம்பர் மி)
சிறந்த இசை – ‘ஷேப் ஒவ் வோட்டர்’ (அலெக்சாண்ட்ரே டெஸ்ப்லெட்)
சிறந்த ஒளிப்பதிவு – பிளேட் ரன்னர் 2049 (ரோஜர் ஏ.டெக்கின்ஸ்)
சிறந்த திரைக்கதை – கெட் அவுட் (ஜோர்டன் பீல்)
சிறந்த தழுவல் திரைக்கதை – கோல் மி பை யுவர் நேம் (ஜேம்ஸ் இவோரி)
சிறந்த லைவ் ஆக்சன் – திரைப்படம் த சைலன்ட் சைல்ட் (கிறிஸ் ஓவர்டன், ராச்சல் சென்டன்)
சிறந்த ஆவணக் குறும்படம் – ஹெவன் இஸ் எ டிராபிக் ஜாம் ஆன் த 405 (ப்ராங்க் ஸ்டிப்பெல்)
சிறந்த படத்தொகுப்பு – டங்கிர்க் (லீ ஸ்மித்)
சிறந்த விஷ்வல் எபெக்ட்ஸ் – பிளேட் ரன்னர் 2049 (ஜான் நெல்சன், கெர்டு நெப்சர், பால் லாம்பர்ட் மற்றும் ரிச்சர்ட் ஆர்ஹவர்)
சிறந்த துணை நடிகர் – சாம் ராக்வெல் (த்ரீ பில்போர்ட்ஸ் அவுட்சைட் எப்பிங், மிசோரி)
சிறந்த துணை நடிகை – ஆலிசன் ஜேனி (ஐ, டோன்யா)
சிறந்த வெளிநாட்டுப் படம் – எ பென்டாஸ்டிக் வுமன் (சிலி)
சிறந்த அனிமேஷன் படம் – கோகோ (லீ அன்கிர்ச், டார்லா கே.ஆன்டர்சன்)
சிறந்த அனிமேஷன் குறும்படம் – டியர் பாஸ்கட்பால் (க்ளென் கீன், கோப் ப்ரயண்ட்)
தயாரிப்பு வடிவமைப்பு – தி ஷேப் ஒவ் வோட்டர்
ஒலித்தொகுப்பு – டங்கிர்க் (ரிச்சர்டு கிங், அலெக்ஸ் கிப்சன்)
ஒலி இணைப்பு – டங்கிர்க் (கடரெக், க்ரே, மார்க்)
சிறந்த ஆவணப்படம் – ஐகரஸ் (பிரயன் போகல், டேன் கோகன்)
ஆடை வடிவமைப்பு – பாண்டம் த்ரெட் (மார்க் ப்ரிட்ஜஸ்)
ஒப்பனை மற்றும் சிகை அலங்காரம் – டார்க்கஸ்ட் ஹார் (கசுரியோ சுஜி, டேவிட் மலினோஸ்கி, லக்கி சிபிக்) (ம)




## ‘த ஷேப் ஒவ் வோட்டர்’ படத்துக்கு 4 விருதுகள்

அமெரிக்காவில் உள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நேற்று நடைபெற்ற ஒஸ்கர் விருது வழங்கும் விழாவில், த ஷேப் ஒவ் வோட்டர் படத்துக்கு நான்கு விருதுகள் கிடைத்தன.

மொத்தமாக 13 விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட ‘த ஷேப் ஒவ் வோட்டர்’ படத்திற்கு 4 விருதுகள் கிடைத்துள்ளன.

சிறந்த படம், சிறந்த இயக்கம், சிறந்த இசை, தயாரிப்பும் வடிவமைப்பும் ஆகிய பிரிவுகளின் கீழ் விருதுகளை அள்ளியது ‘த ஷேப் ஒவ் வோட்டர்’. (ம)



## ஒஸ்கர் விருது நிழ்வில் ஸ்ரீதேவிக்கு அஞ்சலிகள்



லொஸ் ஏஞ்சல்ஸ், மார்ச் 6

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில், நேற்று நடந்த 90ஆவது ஒஸ்கர் விருது வழங்கும் நிகழ்வில் மறைந்த தமிழக நடிகை ஸ்ரீதேவிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் வண்ணமயமான 90ஆவது ஆஸ்கார் விருது வழங்கும் விழா நேற்று நடந்தது.

நிகழ்வின் ஆரம்பத்தில் மறைந்த நடிகர், நடிகைகள் மற்றும் கலைஞர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடந்தது. அதில் நடிகை ஸ்ரீதேவிக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது. (ம)





### சிரிய அரச தரப்பிடம்

# மீண்டது கவுடா?

டமஸ்கஸ், மார்ச் 5

ரஷ்யா தலைமையிலான கூட்டுப்படையின் உதவியுடன் கவுடா நகரம் அரச தரப்பால் மீட்கப்பட்டது என்று சிரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. சிரிய அதிபர் அசாத் ஷியா பிரிவைச் சேர்ந்தவர். அங்கு சன்னி பிரிவைச் சேர்ந்த இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக உள்ளனர்.

சிரிய அதிபரைப் பதவி நீக்குவதையும் ஏனைய சில திட்டங்களையும் வலியுறுத்தி அங்கு ஆயுதக்குழு போராடி வருகிறது.

கடந்த 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் இந்த உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. சிரிய அரசுக்கு ரஷ்யாவின் தலைமையில் கூட்டுப் படை உதவி செய்கிறது.

கிளர்ச்சிக் குழுவின் பின்னணியில் அமெரிக்கா இருந்தது. எனினும் கிளர்ச்சிக் குழுவுக்கு தான் வழங்கிவந்த ஆதரவை ட்ரம்ப், அதிபராகப் பொறுப்பேற்றதும் கைவிட்டது அமெரிக்கா.

கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் அலெப்போ, தலைநகர் டமஸ்கஸுடன் தொடர்புபட்டிருக்கும் கவுடா உள்ளிட்ட நகரங்கள் இருந்தன. அலெப்போ கடந்த வருடம் மீட்கப்பட்டது. கவுடாவில் கடந்த சில தினங்களாக தாக்குதல்கள் இடம்பெற்று வந்தன. கவுடாவில் கடந்த இரண்டு வாரங்களாக கடும் வான் தாக்குதல்களை நடத்தி வந்தது ரஷ்யா. தரை வழியாக சிரிய அரச படை முன்னேறி வந்தது.

இந்த நிலையில் கவுடா நகரம் அரச தரப்பால் மீட்கப்பட்டுள்ளது என்று சிரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. சிரிய இராணுவத்தினர் வீதிகளில் வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபடுவது போன்ற ஒளிப்படங்களையும் அவை வெளியிட்டுள்ளன.

எனினும் சில பன்னாட்டு ஊடகங்கள் இந்தச் செய்தியை மறுத்துள்ளதுடன், கவுடாவில் தொடர்ந்தும் போர் இடம்பெற்று வருகிறது என்று குறிப்பிட்டன. (ம)

அதிபர் பதவிக்காலத்துக்கு திருத்

## சீனாவின் முடிவ ட்ரம்ப் வரவேற்

அமெரிக்காவிலும் வேண்டுமா

பீஜிங், மார்ச் 6

சீனாவில் இருமுறை மட்டுமே ஒருவ
ராக இருக்க முடியும் என்ற விதி திருத்
தற்கு வரவேற்பு தெரிவித்துள்ள அ
அதிபர் ட்ரம்ப், அமெரிக்காவிலும் அ
ஒருநாள் வரும் என்று தெரிவித்துள்ள
சீனாவின் அரசமைப்புச் சட்டத்தில்
‘பத்தாண்டுகள் வரை ஆட்சி செய்து இ
வது பதவிக் காலத்தை நிறைவு செய்த
அடுத்து மூன்றாவது முறையாக அதி
றும் துணை அதிபர் தேர்தல்களில் போட
கூடாது’ என்னும் நிபந்தனையை
செய்யப் போவதாக கட்சி மேலிடம் அ
துள்ளது. சீன அரசின் இந்த முடிவுக்
ரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் வரவே
வாழ்த்தும் தெரிவித்துள்ளார். ‘நூற்றா
சக்திவாய்ந்த அதிபராக ஜி ஜின்பிங் இ
என அவர் வாழ்த்தியுள்ளார்.
“நாங்களும் இது போன்ற அதிரடியை
வது எடுக்கக்கூடும்'' எனவும்
குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க அதிபர்
காலத்தை இரண்டு முறைக்கு மேல்
வேண்டும் என்று வலியுறுத்தி வரும்
தற்போது சீன அதிபருக்கு வாழ்த்துக்
தன் மூலம் தனது ஆதங்கத்தையு
செய்துள்ளார். (ம)

## இராணுவத்துக்கு 175 பில்லியனை நடப்பு வருடத்தில் சீனா ஒதுக்கிய

பீஜிங், மார்ச் 6

இராணுவ பலத்தைத் தொடர்ந்து அதிகரித்து வரும் சீனா, இந்த ஆண்டு தனது இராணுவ வரவு-செலவுத் திட்டத்தை 175 பில்லியன் டொலராக உயர்த்தியுள்ளது.

இராணுவத்துக்கு அதிக நிதி செலவு செய்து இராணுவத்தை நவீனப்படுத்தும் நாடுகளில் அமெரிக்காவுக்கு அடுத்த இடத்தில் சீனா உள்ளது. புதிய நீர்மூழ்கிக் கப்பல்கள், போர்க்கப்பல்கள் என்று தனது வலிமையை தொடர்ந்து அதிகரித்து வரும் சீனா, இதற்கான செலவினத்தை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இராணுவத்து
150.5 பில்லியன் டொலரை ஒதுக்
ருந்தது. இதையடுத்து நடப்பு வருடத்
இந்தத் தொகையை மேலும் அதிக
தது சீனா. இதன்படி 175 பில்லி
டொலர்களை இந்த வருடத்தில் சீ
செலவிடுகிறது.







# வடகொரியாவுடன் இணக்கமாக தென்கொரியா அனுப்பியது தூதுக்குழு



சியோல், மார்ச் 6

வடகொரியாவுடன் இணக்கமாவதற்காக தென்கொரிய அரசு, தூதுக் குழுவொன்றை நேற்று அனுப்பியது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

பன்னாட்டுச்சட்டதிட்டங்களைமீறிதொடர்ந்து ஆயுதமற்றும்அணுவாயுதச் சோதனைகளை நடத்தி வந்தது வடகொரியா. இதனால் வடகொரியாவுக்குஎதிராகஏகப்பட்டபொருளாதாரத்தடைகளைவிதித்திருந்தது ஐக்கியநாடுகள்சபை. தென்கொரியா, அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளும் பற்பல தடைகளை தனித்தனியே விதித்திருந்தன. தென்கொரியாவுக்கு எதிராக நேரடித் தாக்குதல் நடத்தப்படும் என்று பகிரங்கமாகஅறிவித்திருந்ததுவடகொரியா. இரண்டுநாடுகளுக்கும்இடையில் தீராப் பகை நிலவியது.

தென்கொரியாவின்பியங்சங்நகரில்குளிர்காலஒலிம்பிக்தொடர்அண்மையில் நடைபெற்றது. எவரும் எதிர்பாரா விதமாக வடகொரியா பங்கேற்றது.

இதையடுத்து வடகொரியா - தென்கொரியா நாடுகளுக்கு இடையே இணக்கம் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தூதுக்குழுவொன்றையும்வடகொரியாவுக்கு அனுப்பியுள்ளது தென்கொரியா. (ம)




# பப்புவாவில் நிலநடுக்கம்

சிட்னி, மார்ச் 6

பப்புவா நியூகினியா தீவில் நேற்று மாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 6 அலகுகளாகப் பதிவானது. போர்கெரா நகரிலிருந்து சுமார் 112 கிலோமீற்றர் தொலைவிலும், கடலுக்கு அடியில் 10 கிலோ மீற்றர் ஆழத்திலும் இந்த நில நடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தைத் தொடர்ந்து பல இடங்களில் நிலச் சரிவுகளும் ஏற்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)

...துக்கு திருத்தம்

## ...முடிவை ...வேற்பு

...வண்டுமாம்

...டுமே ஒருவர் அதிப...ற விதி திருத்தப்பட்ட...த்துள்ள அமெரிக்க...ாவிலும் அதுபோல...ரிவித்துள்ளார்.

...ச் சட்டத்தில் உள்ள...ட்சிசெய்து இரண்டா...றைவுசெய்தவர்கள்...றையாக அதிபர் மற...ல்களில்போட்டியிடக்...தனையை நீக்கம்...மேலிடம் அறிவித்...ந்த முடிவுக்கு அமெ...ட்ரம்ப் வரவேற்பும்,...ளார். 'நூற்றாண்டில்...ஜின்பிங்இருப்பார்'...ார்.

...அதிரடியைஎன்றா...' எனவும் அவர்...ரிக்க அதிபர் பதவிக்...றைக்கு மேல் நீடிக்க...றுத்தி வரும் ட்ரம்ப்...த வாழ்த்துக் கூறிய...ங்கத்தையும் பதிவு



## ...துக்கியது

...ராணுவத்துக்கு...லரை ஒதுக்கியி...டப்புவருடத்தில்...மேலும் அதிகரித்...175 பில்லியன்...வருடத்தில் சீனா (ம)

வாழ்க்கையை மாற்றும் சில தீர்மானங்கள்.
வாழ்க்கையை மாற்றும் சில மனிதர்கள்.
வாழ்க்கையை மாற்றும் சில வார்த்தைகள்.
வாழ்க்கையை மாற்றும் சில பண்புகள்.
வாழ்க்கையை மாற்றும் சில சவால்கள்.
வாழ்க்கையை மாற்றும் சில தோல்விகள்.
வாழ்க்கையை மாற்றும் சில தருணங்கள்.
வாழ்க்கையை மாற்றும் சில அனுபவங்கள்.
வாழ்க்கையை மாற்றும் சில கதாபாத்திரங்கள்.

**அத்தோடு வாழ்க்கையை மாற்றும் சில பந்தங்கள்.**



வாழ்க்கையை மாற்றும் பிணைப்புடன்
யூனியன் அஷ்யூரன்ஸ்
உங்கள் நாளைய நம்பிக்கை, இன்றே.
www.unionassurance.com
Union Assurance PLC (Company No. PQ 12)

அதிர்ஷ்டம் இப்போது உங்கள் மொபைலில்
நீங்கள் விரும்பிய NLB லொத்தர் சீட்டினை SMS மூலம் பெற்றுக்கொள்ள



Dialog மொபைலில்
#889# டயல் செய்யுங்கள்

- லொட்டரி டிக்கட்
- வெற்றி இலக்கங்கள்
- பரிசு தொகை

நேரடியாக உங்கள் Dialog மொபைலில்
கட்டணங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது
NLB 889
Dialog
எதிர்காலம் இன்றே.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# இனவாதத் தடைகள்

காணாமற்போனோர் பணியகத்துக்கு சுயாதீனமாகச் செயற்படக்கூடியவர்கள் நியமிக்கப்படவில்லை. நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுக்குச் சாதகமாகவே விசாரணைகளை மேற்கொள்வார்கள் என்று கருத்துத் தெரிவித்துள்ளது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்.

அந்த அமைப்பின் தலைவரும், பேராசிரியருமான குணதாச அமரசேகரவிடம் இருந்தே இத்தகைய கருத்துக்கள் வெளிப்பட்டுள்ளன. நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் விசாரணைகள் முழுமையடைய வேண்டும் என்று நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளதால், பொய்யான விசாரணைகளை இந்த ஆணைக்குழு மேற்கொள்ளலாம். போலிச்சாட்சியங்களையும் உருவாக்கிக் கொள்ளலாம் என்றும் கொதித்தெழுந்துள்ளார் அவர்.

ஆக, காணாமற்போனோர் பணியகம் செயற்பட ஆரம்பிக்கும் முன்னரேயே, அதன் நடவடிக்கைகளுக்கு இனவாத முட்டுக்கட்டையொன்று போடப்பட்டுள்ளது. நிர்ணயிக்கப்பட்டுள்ள கால அவகாசத்துக்குள் விசாரணைகள் முடிக்கப்பட வேண்டும் என்பதற்கு பேராசிரியர் வெளிப்படுத்தியுள்ள எதிர்ப்பானது, விசாரணைகளை உடன் மேற்கொள்ளாது வழக்கம்போல நீண்ட இழுத்தடிப்புச் செய்யவேண்டும் என்பதற்கு அவர் கொடுக்கின்ற ஆதரவையே வெளிப்படுத்தி நிற்கிறது.

காணாமற்போனோர் அலுவலகத்தின் மட்டில் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டு அரசு துரித கதியிலான செயற்பாடுகளை வெளிப்படுத்தி நிற்கவில்லை. கடந்த 2016ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆரம்பித்த இந்தப் பணிகள் தற்போதுதான் ஓரளவேனும் இயங்கு நிலைக்கு வந்துள்ளன. இவ்வாறிருக்க, மேற்கொள்ளப்படும் காலம்கடந்த நகர்வுகளையும் சிங்களப் பேரினவாதத் தரப்புக்கள் விமர்சிப்பதென்பது அபத்தம்; ஏற்கத்தகாதது.

நடைபெற்றுமுடிந்த உள்ளூராட்சித் தேர்தலில், மகிந்ததலைமையிலான சிறிலங்காபொதுமக்கள்முன்னணி மிகப்பெரும் வெற்றியைப் பெற்றது. கூட்டு அரசு முன்னெடுத்திருந்த புதிய அரசமைப்புக்கு எதிரான முயற்சிகளை கடுமையாக விமர்சித்ததன் மூலமே இமாலய வெற்றியை மகிந்த பெற்றிருந்தார். புதிய அரசமைப்பு உருவானால், தமிழர் தாயகம் மலரும். இதற்காகவா எமது சிப்பாய்கள் தத்தமது இன்னுயிரைத் தியாகம் செய்தனர்? என்று வெளிப்படையாகவே பேசியிருந்தார் அவர்.

மாகாண சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய ஏற்கனவே அறிவித்திருந்தார். இந்தத் தேர்தலில் தத்தமது வாக்குவங்கிகளைத் தக்கவைக்க, கட்டிக்காக்க, பரவலாக்க காணாமற்போனார் அலுவலக விடயத்தைப் பயன்படுத்த சிங்கள பௌத்த பேரினவாதத்தை இறுகப்பற்றிப் பிடித்திருக்கும் கட்சிகள் எத்தனிக்கலாம். அதற்கு வாய்ப்புக்கள் மிக அதிகளவில் இருக்கவே செய்கின்றன. அதன் ஆரம்பப்புள்ளியாகவும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் கருத்தையும் எடுத்துக் கொள்ளலாம்.

கூட்டுஅரசு, தமிழ் மக்கள் மீதான கருணையாலோ அல்லது அவர்களுக்குச் செலுத்த வேண்டிய நன்றிக்கடனாகவோ (2015ஆம் ஆண்டு நடைபெற்ற அரசதலைவருக்கான தேர்தல் வெற்றிக்காக அரச தலைவர் ஏற்கனவே தெரிவித்த நன்றிக்கடன்) காணாமற்போனோர் அலுவலகத்தை அமைக்கவில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 37ஆவது கூட்டத்தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. போர்க்குற்றம் தொடர்பில் இலங்கைக்கு வழங்கப்பட்ட இரண்டு வருடகால அவகாசத்தில், முடிவடைந்துள்ள ஒரு வருடத்தில் சாதித்ததென்ன என்று இலங்கையிடம் நிச்சயம் கேள்வி கேட்கப்படும். 32பக்கமாநாடு இலங்கை தொடர்பில் நடைபெறவுள்ளமை இதற்குத் தகுந்த சான்று. இவ்வாறான பன்னாட்டு அழுத்தத்தில் இருந்து தப்பித்துக்கொள்ள அல்லது அழுத்தத்தைக் குறைத்துக்கொள்ளவே காணாமற்போனோர் அலுவலகத்துக்கான நியமனங்கள் வழங்கப்பட்டு அவை இயங்கு நிலைக்கு வந்திருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. இவ்வாறானதொரு பின்னணியில் காணாமற்போனோர் அலுவலக விடயத்திலும் அரசியல், அதுவும் இனவாத அரசியல் கலக்கப்படுவதானது பணியகத்தின் இருப்பை கேள்விக்கு உட்படுத்தும். அல்லது அதன் சுயாதீனத் தன்மையைப் பறித்துவிடும்.

# தமிழர்களை மேலும் பிளவுபடுத்துவது ஏற்கத் தக்கதல்ல

சேரலாதன்

தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து பொதுவானதொரு கொள்கையின் அடிப்படையில் செயற்பட வேண்டுமெனக் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்ற இந்த வேளையில், அதனைக் குழப்பும் வகையில் சில அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கருத்து வெளியிட்டு வருகின்றமை வேதனைக்குரியது.

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் வடக்குக்கிழக்கைப் பொறுத்த வரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகமான வாக்குகளைப் பெற்றதோடு அநேகமான உள்ளூராட்சிச் சபைகளில் அதிக ஆசனங்களையும் பெற்றுள்ளது. ஆனால் புதிய உள்ளூராட்சித் தேர்தல் நடைமுறைகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் ஆட்சி அமைப்பதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது. இதனால் அதிக ஆசனங்களை உள்ளூராட்சிச் சபைகளில் பெற்ற கட்சிகள், அந்தச் சபைகளில் ஆட்சியமைக்கும் பொருட்டு ஏனைய கட்சிகள் அவற்றுக்கு ஆதரவு வழங்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்தது. ஆனால், இது தொடர்பாக எந்த இணக்கப்பாடும் எட்டப்படவில்லை. இதேவேளை உள்ளூராட்சிச்சபைகளின் உறுப்பினர்களிடையே பகிரங்க வாக்கெடுப்புகளை நடத்தி, அவர்களின் ஆதரவைப்பெற்று ஆட்சியமைக்க வேண்டுமெனக் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் கூறியிருந்தார். இதன்மூலமாகக் கட்சித்தாவல்களைத் தடுத்து நிறுத்த முடியுமென அவர் கருதியிருக்கலாம்.

## இரகசிய வாக்கெடுப்பின் மூலம் ஆட்சி அமைக்கும் உரிமை தீர்மானிக்கப்பட வேண்டும் என்கிறார் கஜேந்திரகுமார்

சம்பந்தனின் மேற்குறிப்பிட்ட கோரிக்கைகள் சகல கட்சிகளுக்கும் உதவக் கூடியவை ஆனால் தமிழ்க் காங்கிரஸின் தலைவரான கஜேந்திரகுமார், சம்பந்தனின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. இரகசிய வாக்கெடுப்பின் மூலமாகவே ஆட்சியமைக்கின்ற உரிமையைநிலைநாட்டவேண்டுமென அவர் கூறுகிறார். ஆனால் இதற்காக அவர் கூறுகின்றகாரணம், குழப்பத்துக்குரியதொன்றாகவே காணப்படுகின்றது. யாழ்ப்பாணம் மாநகரசபையில் அவர்சார்ந்துள்ள தமிழ்த் தேசியப் பேரவை ஆட்சியமைப்பதற்கு கூட்டமைப்பு சார்பாகத் தெரிவான பத்து உறுப்பினர்கள் ஆதரவுவழங்கத் தயாராக இருப்பதாகவும் இதற்கு அஞ்சியே சம்பந்தன் பகிரங்க வாக்கெடுப்புக்கான கோரிக்கையை விடுத்துள்ளதாகவும் அவர் கூறுகிறார். யாழ். மாநகர சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட கூட்டமைப்பின் உறுப்பினர்களிடையே பிளவு ஏற்படுத்துகின்றதொரு முயற்சியொன்றாகவே கஜேந்திரகுமாரின் இந்தக் கருத்தைக் கருத வேண்டியுள்ளது.

கூட்டமைப்பு ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு வழங்குவதோ அல்லது விடுப்பதோ கஜேந்திரகுமாரதுதனிப்பட்ட உரிமையாகும். இதில் தலையிடுகின்ற அதிகாரம் எவருக்குமே இல்லை. ஆனால் கட்சிகளைப் பிளவுபடுத்துகின்ற முயற்சிகளில் அவர் ஈடுபடுவதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள



முடியாது.

## கூட்டமைப்பின் சார்பாக யாழ். மாநகர சபைக்குத் தெரிவான உறுப்பினர்கள் மேயர் பதவிக்குத் தேர்வு செய்தது ஆர்னல்ட்டையே

யாழ்மாநகரசபையின் மேயர் வேட்பாளராக ஏற்கனவே கட்சியால் அறிவிக்கப்பட்ட ஆர்னல்ட், தேர்தல் முடிவுகள் வெளியானதன் பின்னர் கூட்டமைப்பின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் மேயர் பதவிக்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கஜேந்திரகுமார் கூறுவது போன்று, ஆர்னல்ட்டின் தெரிவு குறித்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்புசார்பில் யாழ். மாநகர சபைக்குத் தெரிவான பத்துஉறுப்பினர்கள் அதிருப்தி கொண்டிருப்பார்களானால், ஆர்னல்ட்டை மேயராகத் தேர்ந்தெடுப்பதற்கு அவர்கள் தமது ஆதரவை வழங்கியிருக்கமாட்டார்கள். கஜேந்திரகுமார் கூறிய அந்தப் பத்து உறுப்பினர்களையும் கண்டுபிடிப்பது கூட்டமைப்பின் தலைமைக்கு ஒரு சிரமமான காரியமல்ல. ஆனால் ஒருபுதிய கதையைக் கூறுவதன் மூலமாக காங்கிரஸ் கட்சியின் தலைவர் புதுக்குழப்பம் ஒன்றுக்கு வித்திடுவதாகவே இதனைக் கருத முடிகின்றது.


இதேவேளை வடக்குக் கிழக்கில் கூட்டமைப்பு அதிக ஆசனங்களைப்பெற்ற 40 உள்ளூராட்சிச் சபைகளில் ஏனைய தமிழ்க் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியமைக்கவுள்ளதாகக் கூட்டமைப்பின் தலைவர் அறிவித்துள்ளார். இதற்கேற்ப தமக்கு ஆதரவுவழங்குவதற்கு முன்வருகின்ற கட்சிகளின் நிபந்தனைகள் கேட்டறியப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணமாநகரசபையில் தமதுகட்சி ஆட்சியமைப்பதைக் கஜேந்திரகுமார் விரும்புவாராக இருந்தால் ஏனைய கட்சிகளுடன் பேசி அவர்களின் ஆதரவைப் பெற்று அதை நிறைவேற்றிவைப்பதே நேர்மையான செயலாகும். இதற்கு எவரும் எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டார்கள். ஆனால் இதை விடுத்து கட்சியொன்றை உடைத்துப் பிளவுபடுத்துவதற்கு அவர் முயற்சிசெய்வதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. இவரது கருத்து ஏனைய உள்ளூராட்சிச் சபைகளிலும் குழப்பங்களையும், பிளவுகளையும் ஏற்படுத்துவதற்கு வழிகோலிவிடும்.

## உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் போன்று இனிமேலான தேர்தல் முடிவுகளும் அமையப் போவதில்லை

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளைப் போன்று இனிமேல் இடம்பெறப்போகும் தேர்தல்களின் முடிவுகளும் அமைந்துவிடுமென நாம் எதிர்பார்க்க முடியாது. ஆகவே தற்போது கிடைத்த வெற்றியை மனதில் கொண்டு கஜேந்திரகுமார் தரப்பினர் கர்வப்படுவதால் பயனொன்றும் கிடைக்கமாட்டாது. இந்த நாட்டின் தமிழ் மக்கள் மோசமானதொரு கட்டத்தில் தற்போது உள்ளனர். தென்னிலங்கையில் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் அரசியல் குழப்பங்கள் தமிழர்களையும் பாதிக்கவே செய்யும். ஏனென்றால் அந்தக் குழப்பங்களின் விளைவுகள் தமிழர்களின் தலைகளிலேயே பேரிடியாக விழுவதற்கான சாத்தியங்கள் உள்ளதை நாம் மறுக்க முடியாது.

இந்த நிலையில் தமிழர்களிடையே மேலும் பிளவுகளை ஏற்படுத்துவதற்குச் சில அரசியல்வாதிகள் முற்படுவது தமிழர் தரப்புக்கு நல்லதல்ல என்பதை நாம் உணர்ந்தும், புரிந்தும் கொள்ள வேண்டும்.



# இரு ஆண்டுகள் பொறுத்திருப்பதே மகிந்த தரப்புக்கு நல்லது

இந்துமதி

கூட்டமைப்பின்தலைவரான சம்பந்தன் வகித்து வருகின்ற எதிர்க்கட்சித்தலைவர்பதவிமீது மகிந்த தலைமையிலான எதிரணியினர் சமீப காலமாக அக்கறைசெலுத்திவருவதைஅவதானிக்க முடிகின்றது. உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் இந்த அக்கறை என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்து விட்டது.

தற்போதைய நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் மைத்திரிபால சிறிசேன தலைமையிலும், மகிந்த ராஜபக்ச தலைமையிலும் இரண்டு பிரிவுகளாக பிளவுபட்டுக் காணப்படுகின்றனர். இவர்கள் ஒன்றாக இணைந்துசெயற்படுவதற்கான சாத்தியக்கூறு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இந்த நிலையில்மகிந்தராஜபக்சதனிக் கட்சியொன்றை ஆரம்பித்துள்ளார். நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது அவரது கட்சி தாமரை மொட்டு சின்னத்தில்தனித்துப்போட்டியிட்டது. இதனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீது இனிமேல் உரிமை கோர முடியாத நிலை அவருக்கு ஏற்பட்டுள்ளது.

**மகிந்தவின் புதிய பொதுமக்கள் முன்னணிக்கட்சி சார்பாக நாடாளுமன்றில் எவரும் அங்கத்துவம் வகிக்கவில்லை**

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒரு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மகிந்தவுடன் இணைந்து செயற்படுவதைத் தவிர அவரது புதிய கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் தெரிவு செய்யப்படவில்லை. மேலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அந்தக் கட்சியின் தலைவர் என்ற வகையில்அரசதலைவரானமைத்திரிபாலசிறிசேனவுக்குக்கட்டுப்பட்டவர்கள் ஆவார்கள். இதனால் அவரது ஆணையை அவர்கள் மதித்துநடக்கவேண்டும். சம்பந்தனே எதிர்க்கட்சித் தலைவராக நீடிப்பதை அரச தலைவரும் விரும்புவதாகத் தெரிகின்றது.

உள்ளூராட்சித் தேர்தலில் தமது கட்சிதோற்குமானால், தமிழருக்கெனத் தனிநாடு உருவாகிவிடுமென இனவாதப்பரப்புரைகளில் ஈடுபட்டவர்தான் இந்த மகிந்த ராஜபக்ச. இனவாதத்தை மூலதனமாகக் கொண்டே அவரது அரசியல்நகர்ந்துசெல்கின்றது. அரச தலைவருக்கான தேர்தலில் அவர் தோற்றதன் பின்னர் இனவாதத்தைத் தூண்டும் வகையில்பேசுவதையேவழக்கமாகக் கொண்டுள்ளார். பெரும்பான்மையினமக்களின்ஆதரவுதமக்குக் கிடைத்தாலே போதுமென அவர்நினைக்கின்றார். சிறுபான்மையின மக்களை இவர் ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. இடம் பெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழர்களின் வாக்குகளைஅவரதுகட்சியால்பெறமுடியவில்லை.

**மூன்றாம் தர அரசியல்வாதி போன்று மகிந்தவின் கருத்துக்கள்**

சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து கொண்டு ஈழம் கோரியதைத் தவிர வேறு எதையுமே சாதிக்கவில்லையெனஅவர்இப்போதுகூறி வருகின்றார்.

நாட்டின்அரசதலைவராக சுமார்10ஆண்டுகள்பணியாற்றிய மகிந்த, ஒரு மூன்றாம் தர அரசியல்வாதி போன்று இனவாதக் கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றமை ஏற்புடையதல்ல.

இதேவேளை, சம்பந்தன் எதிர்க்கட்சித்தலைவர் பதவியை வகிப்பதால், தமிழருக்கு நன்மை எதுவும் கிடைத்ததாகத் தெரியவில்லை. அந்தப் பதவியைக் கொண்டு எதையும் சாதித்துவிட முடியாது.

எமதுஇனத்தைச்சேர்ந்தஒருவர் இந்தநாட்டின்எதிர்க்கட்சித்தலைவராக உள்ளாரென எந்தவொரு தமிழனும் இதுவரை பெருமை பேசியதில்லை. இந்த நிலையில் மகிந்ததரப்பினர்மட்டுமேஇந்தப் பதவி தொடர்பாக அடிக்கடி பேசி வருகின்றனர்.

தலைமை அமைச்சர் பதவி தமக்கே வழங்கப்பட வேண்டுமென கோரிக்கைவிடுத்து வருகின்ற இவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் தமக்கு வேண்டுமெனக் கூறி வருகின்றமை வேடிக்கையானது.



**அரசியல் நெளிவு சுழிவுகள் குறித்து நன்கறிந்துள்ள பழுத்த அரசியல்வாதி சம்பந்தன்**

சம்பந்தன் ஒரு பழுத்த அரசியல்வாதி என்ற வகையில் அரசியல் நெளிவு சுளிவுகளை நன்கறிந்த ஒருவராகக் காணப்படுகின்றார். அவர், அரசு மீது இன்னமும் நம்பிக்கை கொண்டுள்ளதால்தான் எதிர்க்கட்சித்தலைவர்பதவியில் தொடருகின்றார். தற்போதைய அரசு தமிழர்களுக்கு நன்மை செய்யாதுவிட்டாலும், தீமைசெய்யவில்லையென அவர்நம்புகின்றார். எதிரணியினர் ஆட்சிக்கு வந்தால் என்ன நடக்கும் என்பதும் அவருக்கு நன்கு புரியும். இதன் காரணமாகவே எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் தொடர்ந்து கொண்டு அரசுக்கு ஆதரவாகவும்நடந்துகொள்கின்றார். இதன் காரணமாக கூட்டமைப்புக்கு எதிரான தமிழ் அரசியல்வாதிகளின் எதிர்ப்பையும் சம்பாதித்து வருகின்றார்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்துக்குப் பிறகு அடுத்த தமிழ் எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் சம்பந்தன் இந்தப் பதவியை வகித்து வருகின்றார்.

இன்னமும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நாட்டில் பெரும் அரசியல் மாற்றமொன்று ஏற்படுவதற்கான அரசியல் சூழ்நிலை தற்போது காணப்படுகின்றது. தலைமை அமைச்சர் பதவியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சித் தலைவர் பதவியாக இருந்தாலும் அல்லது, அரச தலைவர் பதவியாக இருந்தாலும் சரி, மக்களது ஆணை மூலம் அவற்றை அடைய இன்னமும் இரண்டு ஆண்டுகள் பொறுமை காப்பதே மகிந்த தரப்புக்குநல்லது.

> **சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து கொண்டு ஈழம் கோரியதைத் தவிர வேறு எதையுமே சாதிக்கவில்லையென அவர் இப்போது கூறி வருகின்றார். நாட்டின் அரச தலைவாக சுமார் 10 ஆண்டுகள் பணியாற்றிய மகிந்த ஒரு மூன்றாம் தர அரசியல்வாதி போன்று இனவாதக் கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றமை ஏற்புடையதல்ல.**

## ஆசிரியருக்கான கடிதம்

# வதந்திகளால் எம்மை பரபரப்புக்கு உள்ளாக்காதீர்!

சில மாதங்களுக்கு முன்னர் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பணிப்புறக்கணிப்பு மற்றும் பெற்றோல் ''தட்டுப்பாடு '' குறித்து ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு எழுதியிருந்தேன். அதே நிலமை என்று சொல்லா முடியாவிட்டாலும் கூட, கிட்டத்தட்ட " அதே நிலமை " சில நாட்களுக்கு முன்பும் ஏற்பட்டது.

ஒருபுறம் உண்மையில் பாதிக்கப்படும் ஊழியர்களின் நியாயபூர்வ கோரிக்கைகள் ஏற்கப்படவேண்டியவையாகஇருப்பினும், வீண்வதந்திகள்மக்களுக்குப்பதற்றத்தையும் மனஉளைச்சலையும் தருவது தவிர்க்கப்பட வேண்டும்.

அதுவும் யாழ்ப்பாணம் உட்பட வடமாகாண மக்கள், போர்க்கால மனநிலையிலிருந்து இன்னமும்விடுபடாதநிலையில், எங்கேமுன்புபோல் வார, மாதக்கணக்கில்பெற்றோல் அல்லதுஎரிபொருள்தட்டுப்பாடுவந்து விடுமோஎன்றநினைப்பில்தேவைக்கு அதிகமாக சோடாப் போத்தல் மற்றும் பிளாஸ்ரின் 'கான்'களில் பெற்றோலை வாங்கிச் சேமிக்கும் எண்ணத்தைக் கைவிட வேண்டும். (தமிழீழமே கிடைத்தால்கூட நாம் பழைய நினைவுகளிலிருந்து விடுபட மாட்டோம்.) அதேபோல் பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களும்சலுகை, பதவி பணம்படைத்தோர், தமக்குவேண்டியோர்எனப்பாகுபாடு பார்த்து பெற்றோல்/டீசல் வழங்குவதை நிறுத்த வேண்டும்.

நியாயமற்ற விதத்தில் எரிபொருளுக்காக காத்து நிற்பது மற்றும் பெற்றோல் முடிந்து விட்டதென்றபொய்யுரைப்புக்கள்இனியும்வேண்டாம்! கடந்தகாலங்கள்புரிந்துகொள்ளக் கூடியவை. ஆனால் தற்போது மேற்கொள்ளப்படும் " பதுக்கல்கள் தாமதிப்புக்கள் ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

என்னதான்எமக்குமனதைரியம்இருந்தாலும், அட....ஓரிருநாள்ளில்"பணிப்புறக்கணிப்பு "நிறைவடைந்துவிடும்எனத்தெரிந்தாலும், மனம்பதற்றமடைவதுடன், அன்றாடம்100 ரூபா, 200 ரூபாவுக்கு பெற்றோல் கொள்வனவு செய்யும் எமக்கு, அடிவயிறு பெற்றோல் இல்லாமலேயே "பற்றி எரிவதும்" எவருக்குத்தான் புரியும்?

நா. துஷாந், வரணி



# உங்கள் பிறந்த திகதியின்படி உங்களுக்கான அதிர்ஷ்டங்கள்

ஒருவரின் பிறந்த திகதியை வைத்து அவர்களுக்கு அதிர்ஷ்டத்தை கொடுக்கும் எண்கள், நிறம், இரத்தினக்கல், திசை, கிழமை மற்றும் வணங்க வேண்டிய கடவுள் ஆகிய அனைத்தைப் பற்றியும் ஜோதிடம் கூறுகிறது.

**3,12,21,30 திகதிகளில் பிறந்தவர்களுக்கான அதிர்ஷ்டங்கள்**

இந்த எண்களின் அதிபதி - வியாழன்
அதிர்ஷ்ட எண்கள் - மூன்றின் வரிசை, ஒன்பதின் வரிசை
அதிர்ஷ்ட நிறம் - தங்கநிறம், பிங்க்
அதிர்ஷ்ட இரத்தினக்கல் - கனகபுஷ்பராகம், அமிதிஸ்ட், டோபாஸ்
அதிர்ஷ்ட திசை - வட கிழக்கு
அதிர்ஷ்ட கிழமை - வியாழன்
வணங்க வேண்டிய கடவுள் - தட்சிணாமூர்த்தி

**4,13,22,31 திகதிகளில் பிறந்தவர்களுக்கான அதிர்ஷ்டங்கள்**



இந்த எண்களின் அதிபதி - ராகு
அதிர்ஷ்ட எண்கள் - 1,10,19,27,28,31,40
அதிர்ஷ்ட நிறம் - மண்ணிறம், குருத்து நீலம்
அதிர்ஷ்ட இரத்தினக்கல் - கோமேதகம், கார்னட், ஸ்பின்னல்
அதிர்ஷ்ட திசை - கிழக்கு
அதிர்ஷ்ட கிழமை - ஞாயிறு
வணங்க வேண்டிய கடவுள் - துர்க்கை, பத்திரகாளி

**5,14,23. திகதிகளில் பிறந்தவர்களுக்கான அதிர்ஷ்டங்கள்**

இந்த எண்களின் அதிபதி - புதன்
அதிர்ஷ்ட எண்கள் - 5,9
அதிர்ஷ்ட நிறம் - வெளிர் பச்சை, சாம்பல் நிறம்
அதிர்ஷ்ட இரத்தினக்கல் - மரகதம், அனக்ஸ், பச்சை
அதிர்ஷ்ட திசை - வடக்கு
அதிர்ஷ்ட கிழமை - புதன்
வணங்க வேண்டிய கடவுள் - மகாவிஷ்ணு

**6,15,24 திகதிகளில் பிறந்தவர்களுக்கான அதிர்ஷ்டங்கள்**

இந்த எண்களின் அதிபதி - சுக்கிரன்
அதிர்ஷ்ட எண்கள் - ஆறின் வரிசை, நான்கின் வரிசை, ஒன்பதின் வரிசை
அதிர்ஷ்ட நிறம் - பிங்க், மஞ்சள்
அதிர்ஷ்ட இரத்தினக்கல் - வைரம், ஜிர்கான், பெரிடாட்
அதிர்ஷ்ட திசை - தென் கிழக்கு
அதிர்ஷ்ட கிழமை - வெள்ளி
வணங்க வேண்டிய கடவுள் - மகாலக்ஷ்மி

(தொடரும்)



# இழந்து பெறுவதே நிலையின்பம்

கொடுப்பது என்பதை இழப்பது என்றே நாம் நினைக்கின்றோம் ஆனால் பிறருக்காகத் தன்னிடம் உள்ளவற்றை, ஏன் தன்னையே கொடுப்பது என்பது பெறுவதாகும். எம்மை நாம் இழக்கும் போது இம்மையில் மகிழ்வையும், மறுமையில் நிலை வாழ்வையும் பெறுகின்றோம்.

இதனையே "கோதுமை மணிமண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால் தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும்" என்கிறார் இயேசு.

பூ தன்னை இழக்கும் போது காயாகிறது. காய் தன்னை இழக்கும்போது கனியாகிறது. கனி தன்னை இழந்தே விதையாகிறது. விதை தன்னை இழந்தாலே பெருவிருட்சமாக பரிணமிக்கும். ஒன்றை இழக்காமல் மற்றொன்றைப் பெறமுடியாது. இது இயற்கைத் தத்துவம் மட்டுமல்ல. இணைத்தத்துவமும் கூட. கொடுக்கின்ற மனிதர் பிறருக்கு கடவுளாகவே காட்சி தருகிறார். ஒரு பன்றி பசுவிடம் "மக்கள் அனைவரும் உன்னை மட்டும் புகழ்ந்து பேசுகிறார்கள். ஆனால் நானும் தான் என் தசையை மனிதர்களுக்கு உணவாகத் தருகிறேன். என்னை யாரும்புகழ்வதில்லையே. ஏன்?" என்று கேட்டது. அதற்கும் பசு "நான் உயிரோடு இருக்கும் போதே கொடுக்கின்றேன். நீ இறந்த பின்னால்தானே கொடுக்கிறாய்" என்ற ஒன்றை இழப்பதில் பிறப்பதே நிறையின்பம்.




# எங்கள் இயேசு நாதர்

இறைவனின் திருநாமம் போற்றுவோம்
இயேசுநாதர் புகழ் கேட்போம்

உலகம் உயர உத்தமனார் தோன்றினார்
உன்னதங்களில் இவர் பெரியவராம்
உண்மை நெறி காட்டிய ஆசானாம்


மண்ணுலகு சிறக்க மகிமை தந்தார்
விண்ணுலகு எங்கும் காட்சி தந்தார்
அன்பு மழை பொழிந்து அரவணைத்தவர் – இவர்
அண்டமெல்லாம் அற்புதங்கள் படைத்தவர்

எம் குற்றங்களை மன்னித்தருளும் – இறைவா
எமக்கு வழிகாட்டும்
பாவங்கள் தீர்த்து – எமக்கு
பாவமன்னிப்பு வழங்குபவர்

வரங்கள் தாரும் இறைவா
வையகமெல்லாம் அன்புதாரும் – எம் தலைவா
தவமெனவே நினைத்து
தங்கள் நாமம் உரைத்திடுவோம்

எம் குமரன் இயேசுநாதர் – புகழ்
தினமும் பாடிடுவோம்

சிவரம்யா



# வரலாற்றில் இன்றைய தினம் 06.03.2018



1816 - ஜேர்மனியின் லுபெக் நகரிலிருந்து யூதர்கள் வெளியேற்றப்பட்டனர்.
1857 - ஆபிரிக்கர்கள், அமெரிக்க பிரஜைகளாக முடியாதென அமெரிக்க உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
1918 - பேர்முடா முக்கோணப் பகுதியில் அமெரிக்கக் கடற்படைக் கப்பல் சைக்கிளோப்ஸ் மாயமாகியது.
1929 - துருக்கி - பல்கேரியா இடையே நட்புறவு ஒப்பந்தம் கைச்சாத்தானது.
1944 - அமெரிக்க வானூர்திப்படையால் பேர்லின் மீது குண்டுவீச்சு மேற்கொள்ளப்பட்டது.
1957 - கானா நாடு, பிரிட்டனில் இருந்து சுதந்திர அறிவிப்பு.
1997 - பிக்காசோவின் ஓவியம் லண்டன் கலரியிலிருந்து திருடுபோனது.
1995 - வெளிநாட்டு மத்தியஸ்தத்தை புலிகள் விரும்பவில்லையெனக் கூறமுடியாதென அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.



1987
பெல்ஜியத்தில் படகு ஒன்று கவிழ்ந்ததில் 192 பேர் சாவடைந்தனர்.

**நாளை**

**07.03.2018**

புதன்கிழமை

**மாசி 23**

திதி: ஷஷ்டி பி.இ. 05.16 வரை
நட்சத்திரம்: விசாகம் பி.இ.01.35 வரை
சுபநேரம்: 04.55–06.25 வரை
ராகுகாலம்: 12.25–01.55 வரை

Galaxy Star
வெற்றி வாரம் 243 / திகதி 04.03.2018
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
02 08 10 41 42
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,956,256/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1447
சீட்டிழுப்பு திகதி 05.03.2018
வெற்றி இலக்கங்கள்
01 38 55 64 K
அடுத்த வியாழக்கிழமை ஜக்பொட்
ரூ. 17, 669, 000/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ES Printers
மக் பிரிண்ட் (MUG) 450/=





021 492 7471,
021 492 7472
esprintersjaffna@gmail.com
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று
(06.03.2018) செவ்வாய்க்கிழமை
BMICH இல் நடைபெறவுள்ள
பட்டமளிப்பு விழாவில்
AAT பட்டத்தினைப் பெறும்

**திரு.பா.ரூபராஜ்**

அவர்களை
உளமாரப்பாராட்டி
வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்: ஊழியர்கள், து பினான்ஸ் கம்பனி
யாழ். பிராந்தியம்

## 81 ஆவது ஆண்டு பிறந்ததினமும் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும்



மலர்வு 06.03.1937
உதிர்வு 07.04.2017

அமரர்
**விநாசித்தம்பி பரமேஸ்வரன்**
(வர்த்தகர், பான்சி பலஸ் திருகோணமலை)

பாசத்துடன் வளர்த்த தந்தையே
எம்மைவிட்டு எந்தத் தேசம் சென்றாயோ ?
தேடுகின்றோம் உங்களை இவ்வுலகில் !

ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

குடும்பத்தினர்.

## தேவை

சிலாபத்தில் அமைந்துள்ள Farm ஒன்றுக்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு ஆட்கள் தேவை. உணவு, இருப்பிட வசதிகள் இலவசம்.

- Store Keeper - (களஞ்சிய பொறுப்பாளர்)
- Account Assistant - (கணக்கு உதவியாளர்)
- Workers / Labours Agriculture (தொழிலாளர் / விவசாய தொழிலாளர்)
- Workers / Labours Live Stock Handling Poultry, Cattle, Goat

077 253 0390 / 077 257 2258

உங்கள் சுயவிபரக்கோவையை கீழுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்:
nancyfarm@dr.com

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**செல்லத்துரை செல்வநாதன்**

மண்ணில் மகனாக 26.03.1956
மனதில் நினைவாக 02.03.2013

திதி:- அபரபக்க பஞ்சமி (06.03.2018)

அன்பின் திருவுருவாய் குடும்பத்தின் தலைமகனாய்
மனம் நிறைந்த கணவனாய் பாசமிகு தந்தையாய்
உறவினரின் பாசமலராய் ஊர்போற்றும் உத்தமனாய்
நீங்கள் வாழ்ந்த காலங்கள் பசுமையாய் நிலைத்திருக்கும்

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.

## மரண அறிவித்தல்



**திருமதி பரமேஸ்வரி வீரசிங்கம்**

கொட்டடி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், 136, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி வீரசிங்கம் 04.03.2018 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வேலுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், வீரசிங்கத்தின் அன்பு மனைவியும், பிரதீபன், சுபதீபன், பிரதீபா, சுபதீபா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தவராசா மற்றும் தவமணிதேவி, அருள்ராசா, மகாராணி, சந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.03.2018) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல்10மணியளவில்வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


136, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
0214931111

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 . 12 . 1942
மறைவு 06 . 03 . 2017



அமரர் **பீற்றர் பேரின்பநாயகம்**

அன்போடு அரவணைத்து பரிவுடனே எமை
வளர்த்து ஏற்றமுடன் வாழ வைத்தீரே
எம்மை விட்டு எங்கு சென்றீர்கள்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எம் இதயத்தில் என்றும் நிலைத்திருக்கும்
உம் நினைவுகள்

இல.29, ஆனந்தன் வடலி வீதி,
கொழும்புத்துறை.

தங்கள் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினர்.

# Vacancy

A leading Private Hospital in Jaffna District is looking for competent, dynamic and experienced person to serve as Human Resources Manager of the Hospital

**Qualifications:-**

- A Degree from a recognized University Preferably in the field of Human Resources Management with ten year experience
  OR
  Master Degree in Business Administration, / Equivalent or Professional Qualifications with ten years' experience
  OR
  Administrative Services together with University Degree and fifteen years' experience in senior Management Services.
- The experience should be in the area of statutory law and regulations such as Labuor regulations. WBO, (EPF & ETF Act etc.)
- Fluent in all three Languages
- Strong communication and interpersonal skills along with impressive public relation and negotiation skills.

**Responsibilities:-**

This full time position and the applicant should aware of the employee's recruitment procedure education and training maintains personal files etc. Along with other works related to company affairs dealing with related external agencies and contract agreement etc.

**Remunerations:-**

The Monthly allowances will be not less than Rs.60, 000/= and the beyond this limit could be negotiated. This employment is bound to all a statutory requirements.

If this description fits your profiles send your application to reach this office on or before 15th March 2018 by post, e-mail or hand over at the receptionist counter.

**Chairman**
**Northern Central Hospitals (Private) Limited**
**No- 342, Palaly Road, Jaffna,**
**Contact No- 077 7732892, 021-2219988, Fax No:-021-2216677**
**E-mail: northernhrm@gmail.com**

(JN 6970)(10)

## யா/கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் வருடாந்த பொதுக் கூட்டத் திகதி மாற்றம்

2018.03.25 ஆம் திகதி நடைபெறவிருந்த வருடாந்த பொதுக் கூட்டமானது தவிர்க்க முடியாத காரணத்தினால் 2018.04.01 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்பதை அறியத் தருகின்றேன்.

- செயலாளர் -

(CS/14501)(11,17)

## மணி விழா நாயகனுக்கு வாழ்த்துக்கள்



வவுனியா வெளிக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் இருந்து இன்று (06.03.2018) செவ்வாய்க்கிழமை ஓய்வுபெற்று மணிவிழாக் காணும் நாயகன்

**நவரத்தினம் முகுந்தன்**
(பலாலி)
(English Special Trained Teacher)

Congratulations

அவர்களின் சேவையைப் பாராட்டுவதோடு அவர் நோய் நொடியின்றி நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

**ஆசிரிய நண்பர்கள், வவுனியா.**

(AVA/281)(11,17)

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471, 021 492 7472

## நாஹா மருத்துவ நிலையம்

தீர்க்க முடியாத கைகால் செயலிழப்பு, பாரிசவாதம், ஆஸ்த்துமா, அல்சர், தீராத புண்கள், மாதவிடாய் கோளாறு என்பன குணப்படல்.

**077 321 2740**
வங்கி முன்லேன், சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி (ஜெகபதி வீடு), மானிப்பாய்.

(CS/14490)(11,17)

## பெயர்மாற்றம்

யாழ்.அனலைதீவைப் பிறப்பிடமாகவும், இல.117 ஆலடி வீதி, தோணிக்கல், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட எனது பெயர் அனைத்து ஆவணங்களிலும் **செல்வரத்தினம் பராசக்தி** என உள்ளது. **இல.4592 உடைய எனது பிறப்புச் சான்றிதழில் மட்டும்** எனது பெயர் **பத்தி** என உள்ளது. இனிவரும் காலங்களில் எனது பெயரை **செல்வரத்தினம் பராசக்தி** என இலங்கை சோசலிச ஜனநாயகக் குடியரசுக்கு அமைவாக உறுதி செய்து கொள்கின்றேன்.

(00282)(11,17) - செல்வரத்தினம் பராசக்தி -

## சேவை நயப்பும் பாராட்டும்

Congratulations

**திருமதி தியாகேஸ்வரி தவபாலசுந்தரம்**
(பகுதித்தலைவர்)



**சேவை விவரம்**

01.09.1992 - 31.01.1999 - யா/காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்.
01.02.1999 - 31.12.2006 - யா/காரைநகர் இந்துக்கல்லூரி.
02.01.2007 - 06.03.2018 - யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.

சுப்பிரமணியம் தம்பதியினரின் தவப்புதல்வியாம் தியாகேஸ்வரி என்னும் குணசீலி
காரைநகர் களபூமி மண்தந்த புலமை வித்தகி
குணசீலனாம் தவபாலசுந்தரம் துணைபெற்று ஆரம்பக்கல்விக்காய் தம்மை அர்ப்பணம் செய்தவர்
கலங்கரை விளக்காய் நின்று மழலைகளை கரைசேர்த்தார்
அகவை அறுபதை அடைந்து மணிவிழாக் காணும் இவ்வேளை
மனதார வாழ்த்திடுவோம் வாழிய நீவிர் வாழியவே!

Congratulations

**ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை**

(SUP/1359)(11,17)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 30.09.1937
விண்ணில் 19.02.2014

அமரர் **பொன்னர் அப்பையா** (J.P)
[ஓய்வு பெற்ற எழுதுவினைஞரும், சமாதான நீதிவானும்]
திதி - பஞ்சமி (06.03.2018)

அன்பாலும் பண்பாலும் அரவணைத்த எங்கள் அன்புத்தெய்வமே
கண்ணியம் மிக்க கணவராய் பாசமிகு தந்தையாய்
கல்வி அறிவை ஊட்டிய தாத்தாவாக இருந்து வாழ்ந்தீர்களே
அரச சேவையின் புகழ் ஓங்கி ஓய்வூதிய காலத்தில் சமாதான நீதிவான்
பதவி பெற்று இவ் உலகை விட்டு இறைவன் பாதம் சேர்ந்தீர்கள்
அப்பாவே என்றும் உங்கள் நினைவுகளுடன்

அம்பிகைவாசா,
புலோலி தென்மேற்கு, புலோலி.
021 226 4280

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.

## மரண அறிவித்தல்

### பாலசிங்கம் உதயகுமார் (உதயன்)



பிறப்பு 29.03.1982 இறப்பு 04.03.2018

யாழ்.அச்சுவேலி, பத்தமேனியைப் பிறப்பிடமாகவும், சிவன்கோயிலடி, ஒட்டு சுட்டான், பெரியார்குளம், பூந்தோட்டம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் உதயகுமார் (உதயன்) நேற்று முன்தினம் (04.03.2018) ஞாயிற்றுக் கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் பாலசிங்கம்-நாகேஸ்வரிதம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், விஸ்ணு காந்தி - நல்லம்மா தம்பதிகளின் மருமகனும், நந்துஜாவின் அன்புக் கணவரும், மாதுலன் (Sri Lanka Air Force Pre School - Vavuniya), நயனிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜேஸ்வரி, சபிதா (வவுனியா வடக்கு பிரதேச செயலகம்), மதிவதனி, பார்த்தீபன் (ஆஸ்திரேலியா), ஹேமலதா, நதீசன் (HNB கிராமின் - வவுனியா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கிருஷ்ண ரூபன், மோகனரூபன், சுதர்சன் ஆகியோரின் மைத்துனரும், தேனுபன், தேனுஹா, லோமிசன், திவானி, கிருத்திக் ஆகியோரின் அன்பு பெரியமாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2018) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் பூந்தோட்டம் வவுனியாவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பூந்தோட்டம், வவுனியா** (00283)(11,17) **தகவல் குடும்பத்தினர்.**

**077 123 0410, 077 213 4497, 077 216 4888**

## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்பராணி சக்திவேல்



வட்டுக்கோட்டை, பிளவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி சக்திவேல் நேற்று (05.03.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் செ.சக்திவேலின் (கட்டடக் கலைஞரும், சிற்பாச்சாரியும்) அன்பு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.03.2018) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:- செ.திலகேஸ்வரன் (மருமகன் - கட்டட ஒப்பந்தகாரர்)**

(CS/14503)(11,17)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்களின் நற்குணங்களால் பாராட்டு பெறுவீர்கள். தொழிலில், திட்டமிட்ட பணிகளை அக்கறையுடன் நிறைவேற்றுவீர்கள். வரவு செலவு திருப்திகரமாகும்.

**இடபம்:** அனைவரிடமும் இனிமையாகப் பழகுவீர்கள். சமூகத்தில் உங்கள் மீதான நன்மதிப்பு அதிகரிக்கும். உரி வருமானம் கிடைக்கும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** நண்பரின் அலட்சியமான பேச்சு வருத்தம் தரலாம். பொறுமையாக இருப்பது நல்லது. தொழில், வியாபார நடைமுறை தாமத கதியில் இயங்கும்.

**கடகம்:** நிறைவேற்ற வேண்டிய பணி தாமதம் ஆகலாம். மனதில் சஞ்சலம் ஏற்பட்டு மறையும். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும்.

**சிங்கம்:** செயல்களில் கூடுதல் நேர்த்தி உருவாகும். தொழிலில் உற்பத்தி, விற்பனை வியத்தகு அளவில் முன்னேற்றம் பெறும். பணவரவு அதிகரிக்கும்.

**கன்னி:** எதிர்மறை சூழலில் இருந்து விலகுவது நல்லது. தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் பெருகும். சேமிக்க வாய்ப்புண்டு.

**துலாம்:** எதிரிகள் விலகும் நிலை உருவாகும். புதிய முயற்சிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனையின் அளவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** எதிரிகளிடம் சமயோசிதமாக விலகுவது நல்லது. நண்பரின் ஆலோசனையால் நன்மை காண்பீரகள். தொழில் வளர்ச்சி சீராக இருக்கும். மிதமான பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** மனதில் புத்துணர்வும் நம்பிக்கையும் அதிகரிக்கும். வெகுநாள் திட்டமிட்ட பணி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள்.

**மகரம்:** உற்சாகமனதுடன்பணிபுரிவீர்கள். தொழிலில்உற்பத்தி, விற்பனைஅதிகரிக்கும். இலாபம்கூடுதலாககிடைக்கும். வீட்டை அழகுபடுத்த கலையம்சம் நிறைந்த பொருள் வாங்குவீர்கள்.

**கும்பம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்க கூடுதல் உழைப்பு தேவைப்படும். இலாபம் சீராக இருக்கும்.

**மீனம்:** கவனக்குறைவால் வாய்ப்புகள் தவறலாம். தொழில், வியாபாரம் சீராக இயங்க குறைகளை சரிசெய்வது நல்லது. பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.



# கார்த்தியின் 17ஆவது படம்

'கடைக்குட்டி சிங்கம்' படத்தைத் தொடர்ந்து கார்த்திநடிக்கவிருக்கும்அவரது17ஆவதுபடம் மற்றும் அந்தப் படத்தில் இடம்பெற்றுள்ள கதாபாத்திரங்கள், கலைஞர்கள் குறித்த விவரங்கள் வெளியாகியுள்ளன.

'தீரன் அதிகாரம் ஒன்று' படத்துக்குப் பிறகு கார்த்தி , தற்போது 'கடைக்குட்டி சிங்கம்' படத்தில் நடித்து வருகிறார். பாண்டிராஜ் இயக்கும் இந்தப்படத்தில்அவருக்குஜோடியாகசாயிஷா, ப்ரியாபவானிசங்கர்மற்றும்அர்த்தனாநடித்து வருகின்றனர்.

இந்தநிலையில்கார்த்தியின்17ஆவதுபடத்தின் படப்பிடிப்புப் பணிகள் கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ரஜத்ரவிசங்கர்இயக்கும்இந்தபடத்தில்கார்த்திஜோடியாகரகுல்ப்ரீத் சிங்நடிக்கிறார். முக்கியவேடத்தில்நவரசநாயகன் கார்த்திக் நடிக்கிறார் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## விசித்திரங்கள்...!!

ஏழைகள் சிரிக்க
மறப்பதில்லை
செல்வந்தர்கள் அழாமல்
இருப்பதில்லை...


துன்பங்கள் ஒருவருக்கு
மட்டும் இல்லை
நோய்கள் எவரையும்
விட்டுவைப்பதில்லை...

பணம் மட்டுமே
வாழ்க்கை இல்லை
ஆனால்...
பணம் இல்லை என்றால்
வாழ்க்கையே இல்லை...!!

உன்னை
மதிப்பவரிடம் தாழ்ந்து
பேசணும் உன்னை
மிதிப்பவரிடம் வாழ்ந்து
பேசணும்..

சைலன்ஸ் பிளீஸ்
என்பதைக்கூட
உரக்கச் சொன்னால் தான்
ஏற்றுக்கொள்கிறது
உலகம்

பல சமயங்களில்...
நீதியின் உச்சத்தை
எட்டும் வலிமை
உண்மைகளுக்கு
இருப்பதில்லை !



உலக நடப்பு

## twitter

தேவதை @SaranyaTwtzz

வயிற்றுப்பிழைப்புக்காக
வெளிநாடு சென்று
வயிற்றுப்புண்ணோடு தாய்நாடு
திரும்புபவர்கள்தான் அதிகம்...!

சிரியக் குழந்தைகள்



# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 7 | | 6 | | | |
| | 6 | 3 | | 5 | | 2 | 7 | |
| 5 | | | | | | | | 8 |
| | | 1 | 2 | | 5 | 4 | | |
| | | | 4 | | 7 | | | |
| | | 2 | 9 | | 8 | 5 | | |
| 2 | | | | | | | | 3 |
| | 9 | 7 | | 8 | | 1 | 4 | |
| | | | 6 | | 9 | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 5 | 4 | 8 | 7 | 6 | 2 | 3 |
| 7 | 4 | 3 | 2 | 6 | 1 | 8 | 5 | 9 |
| 2 | 6 | 8 | 9 | 5 | 3 | 4 | 7 | 1 |
| 6 | 8 | 4 | 1 | 2 | 5 | 9 | 3 | 7 |
| 5 | 3 | 2 | 7 | 9 | 8 | 1 | 6 | 4 |
| 1 | 7 | 9 | 6 | 3 | 4 | 2 | 8 | 5 |
| 8 | 9 | 7 | 5 | 1 | 6 | 3 | 4 | 2 |
| 3 | 5 | 1 | 8 | 4 | 2 | 7 | 9 | 6 |

நேற்றைய விடை

ஏன்டா ஒரு பேச்சுக்கு 'ஒத்தைல நிக்கேனு...' சொன்னா இப்படி 2.0டீசரையும் கூட துணைக்கு அனுப்பிட்டிங்களேடா....!!



சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கி றார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை.



கிய ரே வேங்கய மகன் ஒத்தையில நிக்கிறான்



முருகேசா யார் அவன் தனியா
நின்னுட்டு கத்திட்டு இருக்கான்



அவன் பேரு காலா ஒரு மாசமா
கத்திக்கிட்டு இருக்கான்

# உண்மை பேசு



சிங்கம் ஒன்று காட்டில் அரசாட்சி புரிந்து வந்தது. அதன் பணியாள்களாக மானும் நரியும் அமர்த்தப்பட்டன. இருவருக்கும் நல்ல வேலையாகக் கொடுக்க வேண்டும் என்று சிங்கம் நினைத்தது. அதனால் மானைத் தன்னருகே அழைத்தது. "மானே! எமது வயற்காட்டையெல்லாம் நீ தான் பொறுப்புடன் கவனித்துக் கொள்ள வேண்டும்" என்றது. "உத்தரவு அரசே" என்று பணிந்து வணங்கிச் சென்றது மான். பின்னர் அது நரியை அழைந்தது. "நரியே! எமது ஆற்றங்கரையைப் பாதுகாக்கும் பணியை உனக்குத் தருகிறேன்" என்றது. "கட்டளைக்கு நன்றி அரசே!" என்றுசொல்லி தலை தாழ்த்தி வணங்கிச் சென்றது நரி.

மான் தனக்களிக்கப்பட்ட பணியை உண்மையுடன் சீராகச் செய்து வந்தது. வயல் வெளியை நன்றாகப் பராமரித்தது. பகல் முழுவதும் வயலில் பாடுபட்டு விட்டு மாலையில் ஆற்றுக்குச் சென்று குளித்து சுத்தமாகி இருப்பிடம் திரும்பும். மான் தன் இருப்பிடம் செல்லும் முன் ஒரு தடவை சிங்கத்தை சென்று பார்த்துவிட்டே செல்லும். சிங்கமும் வயற்காட்டு நிலபரம்பல் பற்றி மானிடம் விசாரித்தறிவதோடு அதற்கு சிறிதளவு உணவையும் கொடுத்தனுப்பி வைக்கும்.

ஆனால் நரியோ மாலையாகி சற்று இருட்டிய பின்பே சிங்கத்திடம் வந்து சேரும். அப்போது நரியின் உடம்பெல்லாம் சேறும் சகதியுமாக இருக்கும். நரியின் இந்தக் கோலத்தை சிங்கம் பார்த்ததும் அதன் மீதும் மிகவும் கருணை கொள்ளும் சாப்பிடுவதற்கு ஏராளமான இறைச்சித்துண்டுகளைத் கொடுத்து நரியை மகிழ்விக்கும். இப்படி பல நாள்கள் கடந்தன.

ஒருநாள் மானும் நரியும் வேலை பார்ப்பதை நேரில் பார்ப்பதற்காகச் சிங்கம் புறப்பட்டுச் சென்றது. முதலில் வயல் வெளிக்குச் சென்ற சிங்கம் அங்கே மிகவும் கடுமையாக உழைத்துக்கொண்டிருந்த மானைப் பார்த்தது. "சே. இத்தனை உண்மையுடன் உழைக்கும் மானை நான் தவறாக எண்ணி அதன் கால் வயிற்றுக்கு மட்டுமே இரைகொடுத்தேனே" என நினைத்து வருந்தியது.

பின்னர் நரி வேலை செய்யும் ஆற்றங்கரைக்கு சென்ற சிங்கம் அங்கே பொறுப்பில்லாமல் ஆற்றங்கரையில் அமர்ந்திருந்து நண்டுகளைப் பிடித்து தின்று கொண்டிருந்த நரியைக் கண்டது. சிங்கம் தொடர்ந்தும் மறைந்திருந்து நரியின் நடவடிக்கைகளைக் கவனித்தது. நரியோ நாள் முழுவதும் ஆற்றங்கரையில் விளையாடி விட்டு மாலையானதும் ஆற்றில் இறங்கி அங்குள்ள சேற்றையும் சகதிகளையும் அள்ளித் தன் உடலெங்கும் பூசியது. பின்னர் அங்கிருந்து சிங்கத்தின் இருப்பிடம் நோக்கி நடையைக் கட்டியது.

இப்போது சிங்கம் விரைந்து சென்று தன் இருப்பிடம் அடைந்தபோது மான் அங்கே தன் வேலை முடிந்து வந்து நின்றது. அப்போது சிங்கம் மானுக்கு என்றுமில்லாத அளவுக்கு ஏராளமான உணவுகளைக் கொடுத்து அனுப்பியது.


மான் சென்றதும், சற்று நேரத்தின் பின் நரி அங்கே வந்து சேர்ந்தது. "ஸ்...அப்பாடா.. அரசே! ஒரே ஆள் நான் தனியாக எத்தனை வேலைகளைச் செய்ய முடியும். நாளெல்லாம் உழைத்தாலும் வேலை தொலையமாட்டேனென்கிறதே!" என்று பலவாறு அலுத்துக்கொண்டது.

நரியின் போலியான இந்தப் புலம்பலைக் கேட்டு சிங்கத்துக்கு மிகுந்த கோபம் ஏற்பட்டது. உடனே அங்கே பக்கத்தில் இருந்த பாறாங்கல்லைத் தூக்கி நரியின் தலையில் 'நங்' .என்று போட்டது. "ஒழிந்து போ"என்றது.

நரி அந்த இடத்திலேயே தலை சிதறி இறந்து போனது.

**உண்மையே உயர்வு தரும்.**

# காலம் தவறாமை



காலம் பொன் போன்றது என்பர் பெரியோர் காலத்தின் அருமையை உணர்த்தும் பொன்மொழி இதுவாகும். இன்று சிறியோர் முதல் பெரியோர்வரை கடைப்பிடிக்க வேண்டிய பழக்கம் காலந்தவறாமையாகும். எதையும் குறித்த நேரத்துக்குச்செய்யவேண்டும் என்பதை இது வலியுறுத்துகிறது.

'பருவத்தே பயிர் செய்' என்பது பழமொழி. எல்லாப் பயிர்களும் எல்லாக் காலத்திலும் விளைந்து விடுவதில்லை. உரிய காலத்தில் செய்யப்படாத பயிர் உரிய பயனைத் தராது. அதுபோல உரிய காலத்தில் உரிய செயல்களை நாம் செய்யாத போது அவை பயன்தரா. "இளமையில் கல்" என்றார் ஔவையார். கற்கும் பருவம் இளமைப்பருவம். அது கடந்தபின் கற்க முற்படுவது சிரமத்தைக் கொடுக்கும். எதிலும் நேரத்தைக் காலத்தை நாம் கவனத்தில்கொள்ள வேண்டும். குறித்த நேரத்தில் குறித்த செயலை மேற்கொள்ள வேண்டும். தவறின் அதன் பயன் சிறப்பானதாக இருக்க மாட்டாது.

வானூர்தியில் பயணம் செய்யும் பயணி ஒருவர் குறித்த நேரத்துக்கு வானூர்தி நிலையத்துக்கு வராவிட்டால், அவரது பயணம் தடைப்படும். பரீட்சை எழுதும் மாணவன் குறித்த நேரத்துக்குப் பரீட்சைக்குத் தோற்றாவிடின், அவனது படிப்பே பாதிப்படையும். இவையெல்லாம் எமக்கு காலந் தவறாமையை உணர்த்துகின்றன.

மாணவர்களாகிய நாம் என்றும் காலந் தவறாமையைக் கைக்கொண்டு நடத்தல் வேண்டும். அதன் மூலமே நாம் வாழ்வில் நலம்பெற முடியும்.

## அடைப்பில் உள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி சொற்கள் எழுதுவோம்

| | | |
|---|---|---|
| ஆ | அ | ந |
| ஈ | மு | டி |
| ண் | ந் | டு |
| ய | ணி | ஒ |
| ல் | தை | ட் |

1. --------- 2. ---------

3. --------- 4. ---------

5. --------- 6. ---------

7 --------- 8. ---------

## தொடர்புபடுத்துவோம்

| | |
|---|---|
| 1. பாடம் | அணி |
| 2. உணவு | கழுவு |
| 3. உடை | நில் |
| 4. முகம் | படி |
| 5. எழுந்து | உண் |



## வர்ணம் தீட்டுவோம்



# அறிந்ததும் அறியாததும்

### ஒருவரை மரியாதையுடன் விளிக்கும் வார்த்தைகள்

- அரச தலைவர் - மேன்மை தங்கிய
- நாடாளுமன்ற உறுப்பினர் - மதிப்புக்குரிய உறுப்பினர்
- தலைமை அமைச்சர் - மதிப்புறு, மாண்புமிகு
- அரச அதிகாரிகள் - ஐயா, அம்மணி

### சமயப் பெரியோர்க்ளை மரியாதையுடன் விளிக்கும் வார்த்தைகள்

- கிறிஸ்தவ மதகுரு - அருட்தந்தை, அருட்சகோதரி
- இந்து மத குரு - பிரம்மஸ்ரீ
- இஸ்லாமிய மதகுரு - மௌலவி
- பௌத்த மதகுரு - சங்கைக்குரிய



# தகரங்களில் உணவு பதப்படுத்தல்

தனது போர் வீரருக்கு உணவு கொடுப்பதில் நெப்போலியன் பொனபாட்டுக்குத் தட்டுப்பாடு உண்டாயிற்று. உணவு கெடாமல் நீண்ட காலம் வைக்கக் கூடிய முறையைக் கண்டு பிடிப்பவர்களுக்கு 12ஆயிரம் பிராங் பரிசு வழங்குவதென அவர் 1795ஆம் ஆண்டு விளம்பரம் செய்தார். இந்தப் பரிசைப் பெற்றவர் பரிஸ் நகரில் வாழ்ந்த நிக்கலஸ் அல்பேட் என்பவர். உணவுப் பொருள்களைக் கண்ணாடிப் புட்டியில் இட்டு கொதிக்க அவித்து உடனே புட்டியின் வாயை அடைத்து விட்டால் உணவு பல மாதங்கள் கெடாமலிருக்குமென்று அவர் கண்டு பிடித்தார். இம்முறையைப் பின்பற்றி உணவுப்பொருள்களைக் கெடாமல் வைக்கக் கூடிய முறைகள் பரிசோதனை செய்யப்பட்டன. இரும்பில் செய்யப்பட்ட டப்பாக்களில் உட்புறத்தில் வெள்ளீயத்தைச் பூசி அவற்றுள் உணவுப்பொருள்களைக் கெடாமல் வைக்கும் முறை பிற்றர் டுரண்டு என்னும் ஆங்கிலேயேரால் கண்டறியப்பட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு உணவுப்பொருள்கள் கெடாமல் பாதுகாக்கப்பட்டது. வைக்கப்பட்டுள்ள டப்பாக்களை வெட்டுவது கடினமாகவிருந்தது. இந்த டப்பாக்களின் மீது சுத்தியலாலும் உளியாலும் மேற்பக்கத்தை வட்டமாக வெட்டு"என்று எழுதப்பட்டிருந்தது. 1825இல் எச்.எம்.எஸ் பியூரி என்னும் கடற்கப்பல் கடற் பயணத்தின்போது உணவு கெடாமல் வைக்கப்பட்ட டப்பாக்களை ஏற்றிச் சென்றது. அந்தக் கப்பல் கடலில் ஆழ்ந்து போயிற்று. 1918இல் அவற்றுள் இரண்டு டப்பாக்கள் கண்டு எடுக்கப்பட்டுத் திறக்கப்பட்டன. அவற்றுள் இருந்து மாட்டிறைச்சியைத் துணிச்சலாக சிலர் உண்டனர். எவருக்கும் தீங்கு விளையவில்லை.

## அம்பாறையைத்...

இலக்கான சிங்கள இளைஞன் உயிரிழந்ததைத் தொடர்ந்தே கண்டி மாவட்டத்தில் இன வன்முறைச் சம்பவங்கள் பரவின. இந்த வன்முறை மேலும் பரவாமல் இருப்பதற்கு பொலிஸ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
கடந்த 22ஆம் திகதி முஸ்லிம் இளைஞர் குழுவினால் சிங்கள இளைஞன் தாக்கப்பட்டுள்ளான். கண்டி போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில் கடந்த சனிக்கிழமை இளைஞன் உயிரிழந்துள்ளான். கண்டி மாவட்டத்தில் பெரும்பான்மை இனத்தவர்கள் இடையே இது கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அம்பாறையில் இடம்பெற்ற கலவரத்தின் பின்னர் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ள சூழலில், சிங்கள இளைஞர்கள் ஆத்திரமடைந்து முஸ்லிம்களின் வீடுகள், கடைகள் மீது தாக்குதலை ஆரம்பித்தனர்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட தாக்குதல்களை அடுத்து பொலிஸார் சிங்கள இளைஞர்களைக் கைது செய்தனர். நேற்றுத் திங்கட் கிழமை உயிரிழந்த சிங்கள இளைஞனின் இறுதி ஊர்வலம் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. ஏற்கனவே முஸ்லிம் பகுதிகளின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் அங்கு பெரும் பதற்றம் நிலவியது.
முஸ்லிம் விவகார அமைச்சர், நிலமையின் விபரீதத்தை உணர்ந்து கண்டியிலுள்ள முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று பொலிஸாரைக் கோரினார். இந்த நிலையில் உயிரிழந்த இளைஞனின் ஊர்வலத்துக்கு நீதிமன்றம் தடைவிதித்தது.
அதனையும் மீறி இறுதி ஊர்வலம் நடைபெற்றது. அதே நேரத்தில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு கைது செய்யப்பட்ட சிங்கள இளைஞர்களை விடுவிக்கக் கோரி தெல்தெனிய பொலிஸ் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது.
இவற்றைக் கலைப்பதற்கு பொலிஸார் முயற்சிகள் மேற்கொண்டனர். முதலில் நீர்த்தாரைப் பிரயோகம் முன்னெடுத்தனர். கலகக்காரர்கள் கலைய வில்லை. பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசினர். அதுவும் பயனளிக்கவில்லை. கலகக்காரர்கள் கட்டுப்பாட்டுக்கு வராத நிலையில், மாலை 3 மணியளவில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பொலிஸ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.
கண்டி மாவட்டத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பொலிஸாருக்கு மேலதிகமாக சிறப்பு அதிரடிப் படையினர், இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர்.
இதனிடையே திகன பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலமை காரணமாக கடந்த இரு நாள்களாக கண்டி மகியங்கனை பிரதான வீதி ஊடான போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது. கிழக்கில் இருந்து மகியங்கனை, கண்டி ஊடாக கொழும்பு நோக்கிய போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. பொது பயணிகள் சேவைகள் பலவும் இந்த பதற்ற நிலைமை காரணமாக நிறுத்தப்பட்டது.
தாக்குதல் காரணமாக 2 பள்ளிவாசல்கள் எரிக்கப்பட்டுள்ளன. 10 வர்த்தக நிலையங்கள் வரையில் அடித்து நொறுக்கப்பட்டு எரிக்கப்பட்டுள்ளன. பல நூற்றுக்கணக்கான வீடுகள் கல்வீச்சுத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன.
இந்தச் செய்தி அச்சுக்;குப் போகும் வரையில், கண்டியில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தாலும் அங்கு பதற்றமான சூழல் நிலவுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ந-5,71)

## கஞ்சா...

கத்தர் ஒருவர் கஞ்சா வைத்திருந்தபோது கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
சிறைச்சாலையிலுள்ள கைதி ஒருவருக்கு அவர் 9 கிராம் கஞ்சா போதைப் பொருளை வழங்கியபோது கையும் மெய்யுமாகச் சிக்கினார் என்றும் அவரை சிறைச்சாலை அத்தியட்சகர் விலங்கிட்டு யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.
மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தரான அவர் ஒரு வருடத்துக்கு முன்னரே சிறைச்சாலை உத்தியோகத்தராக இணைந்து கொண்டார் என்றும், விசாரணைகளின் பின்னர் அவர் இன்று யாழ்ப்பாண நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ந-4)

## நடந்தது...

கினார்.
பாரவூர்திச் சாரதியான சிங்கள இளைஞன் அம்பல பகுதியில் உள்ள தனது வீடு நோக்கிச் சென்றுள்ளார். அவரை முஸ்லிம் இளைஞர்கள் குழுவொன்று பின்தொடர்ந்தது. கண்டி திகனப் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் அருகில் வைத்து அந்தக் குழு பாரவூர்தியை மடக்கியுள்ளது. சாரதியை பாரவூர்தியிலிருந்து இறக்கித் தாக்கியது.
தலைக்கவசங்கள், எரிபொருள் நிரப்பு நிலையம் அருகில் இருந்த கதிரைகள் போன்றவற்றைக் கொண்டு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. சாரதி படுகாயமடைந்தார். அவர் கண்டி போதனா மருத்துவனையின் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டார்.
தெல்தெனிய பொலிஸார், சாரதியைத் தாக்கியதாக கூறப்படும் 4 முஸ்லிம் இளைஞர்களை கைது செய்து தெல்தெனிய நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தி விளக்கமறியலில் வைத்தனர்.
கண்டி போதனா வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த எம்.ஜி.குமாரசிங்க எனும் 41 வயதான பாரவூர்திச் சாரதி கடந்த சனிக்கிழமை அதிகாலை சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். சாரதி உயிரிழந்தமை தொடர்பிலான தகவல் பிரதேசம் எங்கும் பரவியது. இதுவே கண்டியில் பதற்ற நிலமை ஏற்படக் காரணம் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ந-5,71)

## ஞானசாரரும்...

அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு பயணம் மேற்கொண்டுள்ளார்.
அவர் உயிரிழந்தவரின் உறவினர்களுக்கு ஆறுதல் வழங்கியதோடு, நிலவரம் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார் என்றும் தெரிய வந்துள்ளது. (ந-5)

## கட்டுமீறிய...

கலவரத்தைக் கட்டுப்படுத்தப் பொலிஸார் நீர்தாரைப் பிரயோகம், கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சு எனப் பல முயற்சிகளை எடுத்தனர். கலவரம் செய்தோரைக் கட்டுக்குள் கொண்டுவர முடியாத நிலையில், நேற்று மாலை 3 மணிக்கு கண்டி நிர்வாக மாவட்டம் முழுவதும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் ஊரடங்குச் சட்டம் அறிவிக்கப்பட்டது.
இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். திடீரென அறிவிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டத்தால் பொதுமக்கள் பதகளிப்பட்டனர். வெளிமாவட்டங்களிலிருந்து கண்டிக்குச் சென்றவர்களும், இந்த ஊரடங்குச் சட்டத்தால் மாட்டிக் கொண்டனர். (ந-5)

## கண்டி விரைந்த...

துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்று மாலை அங்கு விரைந்தார்.
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது:
நிலமைகளை நேரில் அவதானித்து, பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கிலேயே அமைச்சர் ரவூப் ஹக்கீம் அங்கு சென்றார்.
துரதிர்ஷ்ட சம்பவத்தால் சிங்கள சகோதரர் உயிரிழந்துள்ள பின்னணியில், அதைக் காரணமாக கொண்டு முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள், வர்த்தக நிலையங்கள் மற்றும் சில வீடுகள் பெரும்பான்மை இனத்தவர்களால் தாக்கப்பட்டு, தீ வைக்கப்பட்டுள்ளன. முஸ்லிம்களை மையப்படுத்தி இனக்கலவரமொன்றை உருவாக்கும் நோக்கத்தில் இனவாத சக்திகள் அங்கு ஒன்று சேர்ந்துள்ளன.
சம்பவ இடத்தில் சிறப்பு அதிரடிப்படையினரும், இராணுவத்தினரும் நிலமையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காக உரிய வேளையில் களமிறக்கப்படவில்லை என்று அமைச்சர் ஹக்கீம் கவலை வெளியிட்டார்.
ஊடரங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமது வீடுகளில் பாதுகாப்பாக இருந்து, அமைதியைப் பேணும்படியும் பாதுகாப்புத் தரப்பினருக்கு இயன்றவரை ஒத்துழைக்க வேண்டும் என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத் துள்ளார் என்றுள்ளது. (ந-5,31)

## கண்டி மாவட்ட...

அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.
கண்டி மாவட்டத்தில் சிங்கள முஸ்லிம் கலவரம் காரணமாக, இன்று காலை வரையில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
அதனால் கண்டி நிர்வாக மாவட்டத்துக்கு உட்பட்ட அனைத்துப் பாடசாலைகளும் இன்று மூடப்படவுள்ளன என்று கல்வி அமைச்சின் செயலர் தெரிவித்துள்ளார். (ந-5)

## கண்டியைக்...

கொழும்பு, மார்ச் 6
கண்டியின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இராணுவத்துக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.
கண்டிக் கலவரம் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று மாலை சிறப்பு ஊடக அறிக்கை வெளியிட்டுள்ளார்.
அதில் உள்ளதாவது:
கண்டி, திகன பிரதேசத்தில் இடம்பெற்றது என்று கூறப்படும் சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்றதும், சுயாதீனமானதுமான விசாரணையொன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று பொலிஸாருக்கும் பாதுகாப்பு தரப்பினருக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.
பிரதேசத்தின் சகல மக்களினதும் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான சிறப்பு வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பொலிஸாருக்கும், இராணுவத்தினருக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.
எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நிலமைகளை தவிர்த்துக் கொள்வதற்காக சகல தரப்பினருடனும் இணைந்து பொறுப்புடன் செயலாற்ற வேண்டும் என பாதுகாப்பு தரப்பினர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் சமாதானத்தை உறுதி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றுள்ளது. (ந-5)

## தாக்குதல்களை...

குதல் நடத்தப்படுகின்றது என்று அங்கிருந்து கிடைக்கப் பெறும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5,71)

## பொறுப்பை...

கொழும்பு, மார்ச் 6
நாட்டில் இடம்பெறும் விரும்பத்தகாத சில சம்பவங்கள் தொடர்பில் அனைவரும் தமக்குள்ள பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
கண்டி, திகன பகுதியில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
இவ்வாறான வன்முறைகளை கட்டுப்படுத்துவதில் பொலிஸாரிடமும் சில குறைபாடுகளைக் காணமுடிகிறது. இந்த நிலமை ஆரோக்கியமானதல்ல. யாராக இருப்பினும் தமக்குள்ள பொறுப்பை உணர்ந்து இவ்வாறான சம்பவங்களின்போது நடந்து கொள்ள வேண்டும் -என்றார். (ந-5,61)

## இறுதியில்...

கொழும்பு, மார்ச் 6
நாட்டில் இனப் பிரச்சினை தலைதூக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அரசு சிறுபான்மை மக்களுக்கு எதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்தத் தவறினால் பெரிய விளைவுகள் ஏற்படும்.
இவ்வாறு லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.
சோசலிச மக்கள் முன்னணி கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
அம்பாறையில் கடந்த வாரம் முஸ்லிம்களுக்கு சொந்தமான கடைகள், வாகனங்கள் அடித்துச் சேதமாக்கப்பட்டுள்ளன. முஸ்லிம் பள்ளிவாசல் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அசம்பாவிதம் இடம்பெற்று முடியும் வரை அந்தப் பிரதேசத்துக்கு பொலிஸார் வந்து நிலமையை கட்டுப்படுத்தாமல் இருந்துள்ளனர்.
நாட்டில் எந்தப் பிரதேசத்திலேனும் அசம்பாவிதங்கள் ஏற்படும்போது அந்தப் பிரதேசத்தில் அமைதியை ஏற்படுத்தி சட்டத்தை பாதுகாப்பது பொலிஸாரின் கடமை. அதற்கு மேலிடத்தில் இருந்து உத்தரவு வர வேண்டியதில்லை.
யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக கோயில்களுக்குச் சேதம் ஏற்படுத்தப்படுகின்றது என்றும், அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் தெரிவித்து தமிழ் மக்கள் பேரணி நடத்துகின்றனர். சிறுபான்மை மக்கள் நிம்மதியாக வாழும் சூழல் நாட்டில் இல்லாமல்போகும் அச்சம் ஏற்பட்டுள்ளது. இப்படியான சம்பவங்களை தடுத்து நிறுத்துவதற்கு அரசு முறையான நடவடிக்கை எடுக்காமல் இருக்கின்றது. இந்த நிலை தொடருமானால் மீண்டும் இனக்கலவரம் இடம்பெறும் என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.
அரசின் நடவடிக்கைகளில் விரக்தியடைந்து மக்கள் அரசுக்கு எதிராகச் செயற்படுகின்றனர். மக்களின் இந்த நடவடிக்கையை திசை திருப்பும்வகையில் அரசு இனவாதக் கலவரங்களை ஏற்படுத்தி வருகின்றது என்றே தெரிவிக்கப்படுகின்றது. அரசு தொடர்ந்தும் இந்த நிலையைக் கட்டுப்படுத்தாமல் விட்டால் ஏற்படக்கூடிய அனைத்து விளைவுகளுக்கும் அரசே பொறுப்பு கூறவேண்டும் - என்றார். (ந-5,61)

## பாதுகாப்புச்...


கொழும்பு, மார்ச் 6
நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் அசாதாரண சூழ்நிலையால் 30 ஆண்டுகள் போரின் பின்னர் அமைதி சீர்குலையும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. உடனடியாக பாதுகாப்புச் சபையைக் கூட்ட வேண்டும்.
இவ்வாறு அமைச்சர் ரிசாத் பதியுதீன், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
அரச தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.
அதில் உள்ளதாவது:
அம்பாறையில் தொடங்கிய வன்முறைச் சம்பவம் தற்போது கண்டி மாவட்டத்துக்குப் பரவியுள்ளது. அங்குள்ள பள்ளிவாசல்கள், முஸ்லிம்களின் வியாபார நிலையங்கள் மற்றும் சொத்துக்கள் அடித்து நொறுக்கப்படுகின்றன. முஸ்லிம்கள் வாழும் குடியிருப்புகள் மீது சரமாரியான கல்வீச்சுத் தாக்குதல்களும் இடம்பெற்றுள்ளன. முஸ்லிம்கள் புலர் காயமடைந்துள்ளனர்.
திகன பிரதேச முஸ்லிம்கள் வீடுகளிலிருந்து வெளியேற முடியாது முடங்கியுள்ளனர். எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற அச்சத்தில் அந்த மக்கள் உறைந்து போயுள்ளனர். 30 ஆண்டு காலப் போரின் பின்னர் நாட்டில் அமைதி ஏற்பட்டு இனங்களுக்கிடையில் நல்லுறவு வளரும் இந்தச் சந்தர்ப்பத்தில் இனவாத சக்திகள் சமூகங்களுக்கிடையே குரோதங்களை ஏற்படுத்தி நாட்டில் அமைதியின்மையை தோற்றுவிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.
இவ்வாறான முரண்பாடுகளைத் தோற்றுவித்து நாட்டில் உறுதிப்பாடற்ற அரசியல் நிலவரத்தை ஏற்படுத்தி பொருளாதாரத்தை பலவீனப்படுத்த முயற்சிப்பதாகவே குறித்த செயற்பாடுகளைக் கருத வேண்டியுள்ளது. இந்த நிலை நீடிக்குமேயானால் நாடு அதல பாதாளத்துக்குச் செல்வதைத் தவிர்க்க முடியாது- என்றுள்ளது. (ந-5,61)

## தொடருந்து...

உயிரிழந்தார். முற்பகல் 11 மணியளவில் இந்த விபத்து நடந்துள்ளது.
மூன்று பிள்ளைகளின் தந்தையான மாரிமுத்து நாகராசா (வயது-36) என்பவரே உயிரிழந்தார். இவர் கிளிநொச்சி, கண்ணகியம்மன் கோயிலடி, மலையாள்புரத்தைச் சேர்ந்தவர்.
பரந்தன் தொடருந்து நிலையத்தில் இருந்து சுமார் 300 மீற்றர் தொலைவில் உள்ள உமையாள்புரம் வீதியில் உள்ள பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவையில் இந்த விபத்து நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் கடவையைக் கடக்க முற்பட்டவரே தொடருந்து மோதி உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தொடருந்தே இவரை மேதியுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ந-35)

## தேவை

சுன்னாகத்தில் அமைந்துள்ள யாழ். ஸ்ரார் றெஸ்ரோரன்ட்றகு சிறிலங்கன், தென்இந்தியன், வெஸ்ரன் சைனீஸ் உணவுகள், தயாரிக்கக்கூடிய அனுபவம் உள்ள வேலையாள்கள் தேவைப்படுகின்றனர்.
தொடர்பு - 077 809 2764, 021 221 4115, 077 622 0943



■ இசையரசன்

# பங்கு வர்த்தகம்

## முதலீட்டாளர்களை ஒன்றுதிரட்டும் வலையமைப்பை அறிதல்

பங்குச் சந்தையில் ஈடுபடுவோரை பங்கு வர்த்தகர்கள் மற்றும் பங்கு முதலீட்டாளர்கள் என இருவகைப்படுத்துகின்றோம்.

பங்குகளை வாங்கும் தன்மையுடைய எவராக இருந்தாலும், அவர்கள் அடிப்படையில் பங்கு வர்த்தகர்கள்தான். எனினும் அவர்கள் அப்பங்குகளை வைத்திருக்கும் கால அளவுகள், நோக்கங்கள் என்பவற்றின் அடிப்படையில் அவர்களை பங்கு வணிகர்கள் என்றும், பங்கு முதலீட்டாளர்கள் என்றும் நாம் வேறுபடுத்திக் கூறலாம்.

**குறுகிய கால முதலீடு**


முதலீட்டாளர்களை குறுகிய கால முதலீட்டாளர்கள், நீண்ட கால முதலீட்டாளர்கள் என மீண்டும் இரண்டாகப் பகுக்கலாம். விலை சரியும்பொழுது அல்லது பங்குச்சந்தை கரடிப் போக்கில் இருக்கும்பொழுது, பங்குகளை வாங்கி தாம் எதிர்பார்க்கும் அளவுக்குப் பங்குகளுடைய விலை ஏறியவுடன் விற்று இலாபத்தைப் பதிவு செய்துவிடுவது (Profit Booking) குறுகிய கால முதலீட்டாளர்களின் நோக்கம். இவர்களது முதலீடு பொதுவாக ஒரு குறிப்பிட்ட பங்கில் (Stock/s_are) ஒரு மாதம் முதல் ஆறு மாதம் வரையே இருக்கும். இவர்கள் எத்தகைய பங்கு அதிகமாக வர்த்தகம் ஆகுமோ, எது அதிக ஊசலாட்டத்தை உடையதோ அதைக் கருத்தில் கொண்டு அத்தகைய பங்குகளில் அதிக ஆர்வம் காட்டுவர். ஒரு நிறுவனத்தில் ஏற்படக்கூடிய மாறுதல்கள், காலாண்டு அல்லது ஆண்டு அறிக்கைகளால் பங்குகளின் விலையில் ஏற்படக்கூடிய உயர்வு, நாட்டில் நிதித்துறையில் வரக்கூடிய மாறுதல்கள் என அத்தனை விடயங்களையும் மனதில் கொண்டு குறுகிய காலமுதலீடுகள் செய்யப்படலாம்.

**நீண்டகால முதலீடு**

ஆனால், நீண்ட கால முதலீட்டாளர்கள் பங்கு ஆதாயத்தை விரும்புபவர்கள். இவர்கள் மிகத் தரமான நிறுவனத்தின் பங்குகளிலேயே முதலீடு செய்வார்கள். ஒரு நீண்ட காலத் திட்டத்துக்காகவோ அல்லது வரியைத் தவிர்ப்பதற்காகவோ இவர்கள் முதலீட்டுச் செயற்பாட்டை மேற்கொள்ளலாம். இவர்கள் ஒரு நிறுவனத்தின் நிலையை, அதன் தன்மையை அடிப்படை ஆய்வு செய்து (Fundamental Analysis) அதன் பின்னரே முதலீடு செய்வர். பொதுவாக இவர்கள் சந்தையின் ஊசலாட்டத்தைப் பயன்படுத்தி ஆதாயம் தேடும் நோக்குடன் முதலீடு செய்வதில்லை. வருடாவருடம் கிடைக்கும் பங்கு ஆதாயம் (Dividend), குறிப்பிட்ட காலத்துக்குப் பின் ஏறியிருக்கக் கூடிய பங்குகளின் விலையால் ஏற்படும் இலாபம் போன்றவற்றை மனதில் கொண்டே பொதுவாக நீண்ட கால முதலீடுகள் செய்யப்படுகின்றன.

**வணிகச் செயற்பாடு**

பங்கு வர்த்தகர்கள் பொதுவாக ஒரு நாளின்போது சந்தையில் ஏற்படும் மாறுபாட்டைப் பயன்படுத்திப் பணம் ஈட்டுவதை நோக்கமாகக் கொண்டவர்கள். ஒரே நாளில் பலமுறை, பங்குகளை வாங்கியும் விற்பனை செய்தும் வணிகம் செய்வதை 'நாள் வணிகம்' (Day Trading) என்பர். இவர்கள் பங்குகளின் விலை ஏறுமா, சரியுமா என்பதை நுணுக்க ஆய்வு (Technical Analysis) செய்து அதன் அடிப்படையில் வர்த்தகம் செய்கின்றனர். இன்ன காரணங்களால், இந்தவகைப் பங்குகளில் விலை ஏறும் வாய்ப்புண்டு எனக் கணித்தும் சிலர் பங்குகளை வாங்கி மிகக் குறுகிய காலத்தில் (நான்கு ஐந்து நாள்களில்) விற்று இலாபம் பெறுவர். இத்தகைய வர்த்தகர்களை 'உந்து' அல்லது 'திணிவுப்பங்கு' (Momuntum sares) வர்த்தகர்கள் என அழைப்பதுண்டு. உதாரணமாக, "இந்த நிறுவனம் ஒரு புதிய திட்டப்பணியில் (Project) ஈடுபடவுள்ளது எனவே, ஒரு பெரிய நிறுவனத்திடம் கூட்டு வாணிபம் செய்ய ஒப்பந்தமிட்டுள்ளது. (Tieup), பிற சிறிய நிறுவனங்களை வாங்கி, வணிகத்தை விரிவுபடுத்தப் போகிறது என்றோ (Take Over), குறைந்த பட்சமாக மிகுந்த இலாபமீட்டியுள்ளது, நிதி நிலை அறிக்கை வெளியிடப்படும்பொழுது பங்குகளின் விலையும் உயரும் என்று கணித்தோ" ஒரு நிறுவனத்தின் பங்குகளை வாங்குவர். அந்தச் செய்தி வெளிவந்தவுடன் அவர்கள் எதிர்பார்ப்பின்படி விலை உயரும். தம்மிடம் உள்ள பங்குகளை அதிக விலைக்கு விற்று இலாபத்தை விற்பனை செய்துவிடுவர்.




**விற்பனை குறித்த அடிப்படைகள்**

இவை எல்லாமே "வாங்கு, விற்பனை செய்" என்ற அடிப்படையில் இயங்குபவை. அதாவது குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்பனை செய்தல் என்ற விதியின்படி இயங்குபவை ( Buy Low, Sell High). இது 'நீண்ட கால வர்த்தகம்' (Long Trading) என வழங்கப்படுகிறது.

இதற்கு எதிரான தத்துவம் "முதலில் விற்பனை, பிறகு வாங்குதல்" என்ற நிலையில் அமையும். முதலில் அதிக விலையில் விற்பனை செய்துவிட்டு பின், விலை சரிந்தவுடன் விற்ற அளவுக்கான பங்குகளை வாங்கி சமன்படுத்தல் (Adjust) 'குறுகிய கால வர்த்தகம்' (sort Trading) எனப்படும். அதாவது, அதிக விலைக்கு விற்பனை செய்தல், குறைந்த விலைக்கு வாங்குதல் என்ற விதியின்படி இயங்குபவை (Sell High, Buy Low) என்ற கொள்கை செயல்படுத்தப்படுகிறது. அநேகமாக, பங்குச்சந்தையானது சரியும் என எதிர்பார்க்கப்படும்பொழுது (கரடிச் சந்தைப் போக்கின் பொழுது) பங்குகளை முதலில் அதிக விலைக்கு விற்றுவிட்டு (கையில் இல்லாத பங்குகளை), விலை சரிந்தவுடன் அன்றைய தினத்துக்குள்ளேயே குறைந்த விலை வாங்குவதையே 'sort Trading / sort selling' என்று அழைக்கிறோம்.

**பகுப்பாய்வு**

பங்கு வர்த்தகத்தில் முதலீடு செய்து இலாபம் காண்பது அத்தனை எளிதானது அல்ல. எந்தப்பங்குகளை வாங்க வேண்டும், எப்பொழுது வாங்கவேண்டும், எப்பொழுது விற்கவேண்டும் என்பதைச் சரிவர அறியாமல் கண்ணை மூடிக்கொண்டு முதலீடு செய்வது சூதாட்டத்தில் ஈடுபடுவதைப் போன்றதுதான்.

நிறுவனத்தின் நிலமை, அதன் பொருளாதார உறுதித்தன்மை (Financial Stability), நாட்டின் நிலை, சந்தையின் தன்மை முதலான பலவற்றைப் பற்றியும் அறிந்துதான் பங்கு வணிகத்தில் ஈடுபடவேண்டும். அப்படி இருந்தபோதும் சில சந்தர்ப்பங்களில் நட்டமடைய நேரிடலாம். எனினும் சந்தை குறித்த கூரிய அறிவும், அதன் போக்கை ஊகிக்கும் திறனும், வேகமாக முடிவெடுத்து (முதலீடு செய்வதா, விற்றுவிட்டு வெளியில் வந்து விடுவதா ) செயலாற்றும் ஆற்றலும் உள்ளவர்கள் பொதுவாக எத்தகைய சந்தையிலும் எதிர்நீச்சல் போட்டுவிடுவார்கள்.

ஆனால் பெரும்பான்மையான மக்கள் சந்தையின் சுழற்சியில் சிக்குண்டு தவிப்பவர்களே. பலரது நட்டமே, ஒருவரது இலாபமாக மாறுகிறது. இதுவே பங்குச்சந்தையின் தத்துவம். பங்குச் சந்தையில் பொதுவாக 'வெற்றி தோல்வி' (WinLose), தோல்வி வெற்றி (LoseWin) என்ற செயல்நிலைகளுக்கு வாய்ப்புகள் அதிகம் உண்டே தவிர, 'வெற்றி வெற்றி' (Win Win) என்ற சூழலுக்கான வாய்ப்புகள் இல்லை என்றே கூறலாம்.

மேற்கூறிய அத்தனை விடயங்களும் பங்குச் சந்தையில் ஈடுபட விரும்புபவரை அறிவுறுத்தி அறிவூட்டும் செயல்நிலையே. எனவே பங்குச்சந்தை் வணிகத்தில் ஈடுபடுவதற்கு முன்பாக அது குறித்த அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

> “பெரும்பான்மையான மக்கள் சந்தையின் சுழற்சியில் சிக்குண்டு தவிப்பவர்களே. பலரது நட்டமே, ஒருவரது இலாபமாக மாறுகிறது. இதுவே பங்குச்சந்தையின் தத்துவம். பங்குச் சந்தையில் பொதுவாக 'வெற்றி தோல்வி' (WinLose), தோல்வி வெற்றி (LoseWin) என்ற செயல்நிலைகளுக்கு வாய்ப்புகள் அதிகம் உண்டே தவிர, 'வெற்றி வெற்றி' (WinWin) என்ற சூழலுக்கான வாய்ப்புகள் இல்லை என்றே கூறலாம்”

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| கத்தரி | 60 | 70 | 60 | 60 | 60 |
| முள்ளங்கி | 60 | 50 | 30 | 60 | 30 |
| மரவள்ளி | 50 | 40 | 40 | 40 | 30 |
| பயிற்றை | 60 | 120 | 80 | 100 | 80 |
| பாகல் | 120 | 200 | 100 | 120 | 100 |
| க.கிழங்கு | 60 | 60 | 60 | 80 | 40 |
| பெ.வெங்காயம் | 100 | 140 | 120 | 100 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 150 | 100 | 120 | 100 |
| பூசணி | 40 | 50 | 50 | 50 | 40 |
| தக்காளி | 30 | 50 | 25 | 40 | 30 |
| வாழைக்காய் | 60 | 70 | 70 | 60 | 60 |
| கீரை | 30 | 30 | 30 | 10 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 30 | 20 |
| ப.மிளகாய் | 70 | 120 | 50 | 60 | 60 |
| புடோல் | 60 | 70 | 70 | 80 | 50 |
| கோவா | 60 | 70 | 70 | 50 | 40 |
| வெண்டி | 60 | 100 | 100 | 120 | 80 |
| போஞ்சி | 120 | 150 | 100 | 120 | 100 |
| லீக்ஸ் | 160 | 200 | 160 | 160 | 160 |
| தேங்காய் | 75 | 80 | 90 | 100 | 80 |
| உ.கிழங்கு | 70 | 70 | 75 | 80 | 60 |
| தேசிக்காய் | 80 | 50 | 40 | 60 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 35 | 20 | 15 |
| கறிமிளகாய் | 120 | 180 | 160 | 100 | 120 |
| கரட் | 120 | 140 | 80 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 600 | - | 600 | 400 | 300 |

## குருதி விருத்திக்கு பேரீச்சம்பழம்...!

பேரீச்சம்பழத்துக்கு, சித்த மருத்துவத்தில் சிறப்பான இடம் உண்டு. பேரீச்சம்பழம், பித்தத்தைப் போக்கும் தாகத்தைத் தணிக்கும். நாள்பட்ட மலச்சிக்கலையும் தீர்க்கும். பேரீச்சம்பழத்தில் ஈயம், இரும்புச் சத்துக்கள் அதிகம். வளரும் குழந்தைகளுக்கும் இளம்பெண்களுக்கும் மிகவும் நல்லது. கர்ப்பிணிப் பெண்கள் எடுத்துக் கொள்வதால், இரும்புச்சத்தை எளிதாகப் பெறலாம். பேறுகாலப் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் கோளாறுகளுக்கு நல்லதோர் இயற்கை மருந்து.

குருதி அழுத்தம் உள்ளவர்கள் தொடர்ந்து சாப்பிடுவதன் மூலம், குருதிக்குழாய்கள் வலுப்பெற்று, குருதி அழுத்தம் சீராகும். அனீமியா என்ற குருதிச்சோகை பாதிப்பு உள்ளவர்கள், பேரீச்சம்பழத்தைச் சாப்பிட்டு வந்தால், விரைவில் குணம் பெறலாம். மேலும் உடலில் குருதி குறைந்தவர்களுக்கு, குருதி விருத்தி செய்ய உதவுகிறது. உடல் மெலிந்தவர்கள் பேரீச்சம்பழத்தை உண்பதால், நல்ல பொலிவான தேகம் பெறலாம். மாரடைப்பு உள்ளவர்களுக்கு, பேரீச்சம்பழம் மிகவும் நல்லது. இதயத் தசை வலுப்பெற உதவும்.




ஏற்கெனவே பருமனான தேகம் உடையவர்கள் மற்றும் நீண்ட நாள் சமிபாட்டுப் பிரச்சினை உள்ளவர்கள், முடிந்தவரை தவிர்ப்பது நல்லது. ஏனெனில், இது உடலை இளைக்க விடாது.

சக்கரை வியாதி இருப்பவர்களுக்கு, சிறந்த அருமருந்தாக இருக்கிறது. சக்கரை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மிகவும் பலவீனமடைந்து சோர்வாகக் காணப்படுவார்கள். இவர்கள் தினமும் 4 பேரீச்சம்பழம் சாப்பிட்டுவர, புத்துணர்ச்சி பெறுவது நிச்சயம்.

தினமும் பேரீச்சம்பழத்தை அரைத்து, பாலுடன் கலந்து அருந்தலாம். தேனில் ஊறவைத்து, தினமும் காலை வெறும் வயிற்றில் மற்றும் இரவு உணவுக்குப் பிறகு என 48 நாள்கள் தொடர்ந்து உண்டு வந்தால், உடல் நல்ல வலிமையும் பொலிவும் பெறும்.

பேரீச்சை மரத்தின் காயும் பழமும் உணவாகப் பயன்படுகின்றன. இந்த மரத்திலிருந்து செய்யப்படும் பாய்க்கு, ஈச்சமரப் பாய் என்று பெயர். ஈச்சமரப் பாயில் தூங்கினால், வாத நோய்கள் வராது.

வயிற்றுப்புண் வராமல் தடுக்கும். பேரீச்சம் காய், சிறந்த உமிழ் நீர் பெருக்கியாகவும், பசியைத் தூண்டும் பொருளாகவும் பயன்படுகிறது. பேரீச்சை மரத்தின் குருத்து கப நோய்களையும் தீர்க்கும்



## இது புதுசு

பெண்களுக்கான கழுத்து மாலை வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 900 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 900 | 1000 | 1000 | 900 |
| நண்டு | 550 | 500 | 500 | 300 |
| கணவாய் | 600 | 800 | 800 | 1000 |
| பாரை | 600 | 650 | 700 | 800 |
| சுறா | 500 | 700 | 800 | 800 |
| சீலா | 400 | 450 | 500 | 600 |
| விளை | 500 | 450 | 500 | 600 |
| முரல் | 400 | 400 | 450 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 400 | 500 |
| கிளாக்கன் | 800 | 400 | 400 | – |
| ஓரா | 350 | 300 | 500 | – |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 250 | 300 | 400 | – |
| சூடை | 100 | 180 | 160 | 200 |
| ஒட்டி | 200 | 200 | 300 | – |
| திருக்கை | 350 | 300 | 500 | 400 |
| மதனம் | 200 | 250 | 400 | 350 |
| கொய் | 150 | 100 | 100 | 100 |
| பாலை | 150 | 300 | 500 | – |
| வாளை | 100 | 350 | 400 | 400 |

# பாதங்களை பராமரியுங்கள்



எமது பாதங்கள் அன்றாடம் எம்மிடம் படும்பாடு சொல்லிமாளாது. ஒவ்வொரு பாதமும் 26 எலும்புகளைக் கொண்டது. வாழ்நாளில் உலகத்தினை ஆறு முறை சுற்றி வரும் அளவு கூட நடந்து விடுகின்றோம். ஆனால் அதற்கு நாம் கொடுக்கும் கவனம்தான் மிகக் குறைவு. பாதங்களுக்கான சில பாதுகாப்பு முறைகளை இங்கு பார்ப்போம்.

பாத விரல்களின் நடுவில் பூஞ்சை பாதிப்பு ஏற்படுவது சர்வ சாதாரணமாகக் காணப்படும் ஒன்று. அரிப்பு, வலி என்ற தொந்தரவுகள் இருக்கும். இது எளிதில் பரவக் கூடியது என்பதால் ஜிம், நீச்சல் குளம் உள்ளிட்ட இடங்களில் வெறுங்காலோடு நடப்பவர்கள் எளிதில் பாதிக்கப்படுவர். தோல் உரிதல் போன்ற பாதிப்புகளும் ஏற்படலாம். இதற்கான மருந்துகள் கடைகளில் கிடைக்கும். இருப்பினும் சரும மருத்துவரின் அறிவுரை பெறுதல் சிறப்பு.

இறுக்கமான காலணிகளை அணிவதன் காரணமாக கட்டைவிரல் பக்கத்தில் வலி, கட்டி போன்ற பாதிப்பும் இருக்கும். நடக்கும் பொழுது கட்டை விரல் வலிக்கும். ஐஸ் ஒத்தடம் உடனடி நிவாரணம் தரும். பொதுவில் காலணியியை சரியாக அணிவதே வரும் முன் தீர்வாக அமையும். ஆனால் சற்றே வளைந்த கட்டை விரலை சரி செய்ய மருத்துவ உதவி அவசியம் தேவைப்படும்.

நகம் தசை மடிப்பினுள்ளாக வளர ஆரம்பித்தால் அது தாங்க முடியாத வலியைத்தரும். முறையில்லாத, இறுக்கமான சப்பாத்துக்களை அணிவதே இதற்கு முதல் காரணம். பரம்பரையும் இதற்கு காரணமாக அமையும். வீக்கம், சிவப்பு, வலி, கசிவு என பாதிப்பு இருக்கும்.

- கால்களை நன்கு கழுவி சுத்தமாக ஈரமின்றி வைக்க வேண்டும்.
- நகங்களை சீராய் நேராய் வெட்ட வேண்டும். பாதிப்பு அதிகமானால் மருத்துவ சிகிச்சை அவசியம் பெற வேண்டும்.
- சிலருக்கு காலையில் எழுந்தவுடன் காலை கீழே வைக்க முடியாத அளவு காலில் வலி இருக்கும். அதிக நிறை மற்றும் சில காணங்களை குறிப்பிட்டாலும் இன்னமும் இதற்கான குறிப்பிட்ட காரணத்தை கூற முடியவில்லை. அதிகம் ஓடுபவர்களுக்கும் இந்த பாதிப்பு ஏற்படுகின்றதாம். காலுக்கு ஓய்வு கொடுப்பதும், ஐஸ் ஒத்தடம் கொடுப்பதும், மருத்துவ ஆலோசனையுடன் வலி நிவாரண மாத்திரைகளை எடுத்துக் கொள்வதும் முன்னேற்றம் தரும். உடற்பயிற்சி செய்யும் முன்பும், பின்பும் கால்களுக்கும், பாதத்துக்கும் ஸ்டிரெச் பயிற்சி கொடுங்கள்.

காலில் நீர் கோர்த்த கொப்பளங்கள் நாம் சாதாரணமாய் பார்க்கும் ஒன்று. அதிக நேரம் நடப்பவர்கள், சரியில்லாத சப்பாத்து அணிபவர்கள் அதிகம் வியர்த்த கால்களை உடையவர்களுக்கு இந்த நீர் கொப்பளங்கள் ஏற்படும். இது பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது. இந்த கொப்பளங்களை அப்படியே ஆறி வற்ற விடுவதே நல்லது. ஆனரல் அடிக்கடி இப்படி கொப்பளங்கள் ஏற்பட்டால் மருத்துவரை அணுகவும்.

கால் ஆணி எனப்படுபவை மிக தடித்த சரும வெளிப்பாடு. இது காலப் போக்கில் அதிக வலி கொடுக்கும். இறுக்கமான காலணியாலும் பாதிப்பு ஏற்படும். இதற்காக பிரத்யேக பிளாஸ்டர்கள் கிடைக்கின்றன. இதனை பயன்படுத்துவது நல்ல பலனை கொடுக்கும். இது போன்ற பாதிப்புகளுக்கு கவனமும் மருத்துவ சிகிச்சையும் உங்களுக்கு நல்ல தீர்வு கொடுக்கும்.

உங்களால் கடற்கரைக்குச் செல்ல முடியும் என்றால் அங்கு சென்று காலணிகள், சாக்ஸ், இல்லாமல் முடிந்த வரை நன்கு நடங்கள். காலுக்கும், பாதத்திற்கும் இது சிறந்த பயிற்சி. விரல்களை மடக்கி நீட்டுங்கள்.

பாதத்தின் வளைவில் நீங்களே சிறிது மசாஜ் செய்யுங்கள். பாதத்தின் கீழ் சிறிய பந்தை வைத்து நாற்காலியில் அமர்ந்தபடி பந்தை உருட்டுங்கள். பழைய, தேய்ந்த செருப்பை உடனடியாக மாற்றுங்கள். குதிகால் உயரமான சப்பாத்துக்களை கண்டிப்பாய் தவிருங்கள்.

# இந்தியா – இலங்கை இன்று பலப்பரீட்சை

Sri Lanka Cricket

முத்தரப்பு ரி-20 தொடரில், இன்று நடைபெறும் ஆட்டத்தில் இலங்கை - இந்திய அணிகள் மோதவுள்ளன.
இலங்கை - இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு ரி-20 தொடர் இன்று ஆரம்பமாகிறது. இலங்கையின் 70ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்தத் தொடர் நடத்தப்படுகிறது. கொழும்பு பிரேமதாஸ மைதானத்தில் இன்று இரவு 7 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.
இந்திய அணி ரோகித் சர்மா தலைமையிலும், இலங்கை அணி சந்திமல் தலைமையிலும் களமிறங்குகின்றன.

(ம)

# நண்பர்கள் கழக வீராங்கனை சிவானுஜா இரு சாதனைகள்




யாழ்ப்பாணம், மார்ச் 6
நல்லூர் பிரதேச செயலக கிராமசேவகர்பிரிவுகளுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நண்பர்கள் விளையாட்டுக்கழகத்தின் வீராங்கனை சிவானுஜா இரண்டு புதிய சாதனைகளைப் பதிவுசெய்தார்.
பெண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் 2013 ஆம் ஆண்டு அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.டயானா 6.97 மீற்றர் தூரத்துக்கு எறிந்து நிலைநாட்டிய சாதனையை நடப்பு வருடத்தில் 7.24 மீற்றர் தூரத்துக்கு எறிந்து புதிய சாதனை படைத்தார் சிவானுஜா.
பெண்களுக்கான தட்டு எறிதல் போட்டியில் கடந்த வருடம் 25.35 மீற்றர் தூரத்துக்கு எறிந்து நிலைநாட்டிய தனது சாதனையை இந்த வருடத்தில் 25.90 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தானே முறியடித்தார்.

(ம-23)

# வோர்ணர் – குயின்டன் கடும் வாக்குவாதங்கள்


ஆஸ்திரேலிய அணியின் வீரர் வோர்ணருக்கும் தென்னாபிரிக்க அணியின் வீரர் குயின்டன் டி ஹொக்குக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஆட்டத்தின் நான்காம் நாளான நேற்றுமுன்தினம் மாலைநேர தேனீர் இடைவேளையின் போது வீரர்கள் தத்தமது அறைகளுக்குத் திரும்பிய போதே இவ்வாறு வாக்குவாதம் ஏற்பட்டது. சக வீரர்கள் இருவரையும் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தனர். அது தொடர்பான ஒளிப்படங்களும் காணொலிகளும் வெளியிடப்பட்டுள்ளன. (ம)






# படுதோல்வியில் தென்னாபிரிக்கா

## சொந்த மண்ணில் சுருண்ட சோகம்



ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி படுதோல்வியடைந்தது.
கடந்த முதலாம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பித்தது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி சகல இலக்குகளையும் இழந்து 351 ஓட்டங்களைப் பெற்றது. மிச்செல் மார்ஷ் 96 ஓட்டங்களையும், ஸ்ரீவ் சிமித் 56 ஓட்டங்களையும், வோர்ணர் 51 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் மகாராஜ் 5 இலக்குகளையும், பிளன்டர் 3 இலக்குகளையும், ரபாடா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 172 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. வில்லியர்ஸ் ஆட்டமிழக்காமல் 71 ஓட்டங்களையும், மார்க்ரம் 32 ஓட்டங்களையும், குயின்டன் டி ஹொக் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் ஸ்ராக் 5 இலக்குகளையும், லையன் 3 இலக்குகளையும், ஹசில்வூட், கம்மின்ஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
179 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி, 227 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. பான்குரொப்ட் 53 ஓட்டங்களையும், சிமித் 38 ஓட்டங்களையும், ஷோன் மார்ஷ் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் மகாராஜ் 4 இலக்குகளையும், மோர்கல் 3 இலக்குகளையும், ரபாடா 2 இலக்குகளையும், எல்கர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
தென்னாபிரிக்காவுக்கு இலக்காக 417 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. அந்த அணி 298 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து 118 ஓட்டங்களால் வெற்றிபெற்றது ஆஸ்திரேலிய அணி. அதிகபட்சமாக மார்க்ரம் 143 ஓட்டங்களையும், குயின்டன் டி ஹொக் 83 ஓட்டங்களையும், பேர்ண் 36 ஓட்டங்களையும் பெற்றனர். இந்த மூவரையும் தவிர வேறு எவ்ரும் இரட்டை இலக்கத்தில் ஓட்டங்களைப் பெறவில்லை.
42 ஓட்டங்களைப் பெற்று, 9 இலக்குகளை வீழ்த்திய ஸ்ராக் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

(ம)

# வடமராட்சி கல்விவலய சதுரங்க முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 6
வடமாரட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயது, 20 வயதுப்பிரிவு இருபாலாருக்குமான சதுரங்கத் தொடரில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு. பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் அண்மையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன.
17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி முதலாம் இடம், நெல்லியடி மத்திய கல்லூரி இரண்டாம் இடம், குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மூன்றாம் இடம்.
17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி முதலாம் இடம், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை இரண்டாம் இடம், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மூன்றாம் இடம்.
20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி முதலாம் இடம், நெல்லியடி மத்திய கல்லூரி இரண்டாம் இடம், உடுப்பிட்டி அமெரிகன் மிசன் கல்லூரி மூன்றாம் இடம்.
20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை முதலாம் இடம், உடுப்பிட்டிமகளிர் கல்லூரி இரண்டாம் இடம், வடஇந்து மகளிர் கல்லூரி மூன்றாம் இடம்.


(ம-23)



# நாதன் லையனுக்குத் தண்டம் விதிக்க வாய்ப்பு

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில், ஆஸ்திரேலிய அணியின் சுழல்பந்து வீச்சாளர் நாதன் லையன், வில்லியர்ஸ் மீது பந்தை வீசியமைக்காக அவருக்குத் தண்டம் விதிக்கப்பட வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது.
நேற்று முடிவுக்கு வந்த டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்ஸில் ஓட்டமெதையும் பெறாமல் வில்லியர்ஸ் ஆட்டமிழந்தார். எதிர்முனையில் இருந்த மார்க்ரம் பந்தைத் தடுத்தபோது ஓட்டமொன்றை எடுப்பதற்காக வில்லியர்ஸ் களத்துக்கு வெளியே சென்றார். அப்பொழுது பந்து, பந்துவீச்சாளர் லையனின் கைகளுக்கு வந்தது. வில்லியர்ஸ் மீண்டும் களத்துக்குள் திரும்புவதற்குள் லையன் அவரை ரண் அவுட் செய்தார். அதைத் தொடர்ந்து பந்தை வில்லியர்ஸ் மீது போட்டுவிட்டுச் சென்றார். பன்னாட்டு கிரிக்கெட் சபையின் விதிமுறைகளின் அடிப்படையி இது குற்றமாகும். மைதான நடுவரும் லையன் செய்தமை குற்றமே என்று தெரிவித்துள்ளார். இதனால் லையனுக்கு தண்டம் விதிக்கப்பட வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது.

(ம)



## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 6
தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் வி.கழகம்நடத்தும்அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
(ம23)



## கிளி. ம.வித்தி. அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 6
கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி அபார வெற்றிபெற்றது.
இராமநாதபுரம் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணியை எதிர்த்து இராமநாதபுரம் மகா வித்தியாலய அணி மோதியது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இராமநாதபுரம் மகா வித்தியாலய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மகா வித்தியாலய அணி 27 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பிரனீத் 35 ஓட்டங்களையும், மனோஜெயன் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் யதுசன் 3 இலக்குகளையும், பிரவீன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இராமநாதபுரம் மகா வித்தியாலய அணி 8.3 பந்துப் பரிமாற்றங்களில் வெறும் 22 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. இதையடுத்து 143 ஓட்டங்களால் வெற்றிபெற்றது கிளிநொச்சி மகா வித்தியாலய அணி.
பந்துவீச்சில் சாரணியன், பிரனீத் ஆகியோர் தலா 3 இலக்குகளையும், பிரகாஸ் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
(ம-23)

## தெல்லிப்பழை பிரதேச செயலகம் வலைப்பந்தாட்டத்தின் இறுதியில்



யாழ்ப்பாணம், மார்ச் 6
யாழ்ப்பாண மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்பட்டுவரும் பிரதேச செயலக அணிகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலக அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 18:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-422)

## சென்.அன்ரனிஸ் யங்ஹென்றிஸ் வெற்றிபெற்றன

யாழ்ப்பாணம், மார்ச் 6
தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் பெரியவிளான் சென். அன்ரனிஸ், இளவாலை யங்ஹென்றிஸ் அணிகள் வெற்றிபெற்றன.
நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பெரியவிளான் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:2 என்ற கோல் கணக்கில் பெரியவிளான் சென். அன்ரனிஸ் அணி வெற்றி பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு பாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது. 12:1 என்ற கோல் கணக்கில் யங்ஹென்றிஸ் அணி வெற்றி பெற்றது.
(ம-23)

## கலாநிதி அணி மகுடம் சூடியது



யாழ்ப்பாணம், மார்ச் 6
கரைநகர் பிரதேச செயலக விளையாட்டு விழாவில் ஒட்டுமொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் கலாநிதி விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது. அந்த அணி 122 புள்ளிகளைப் பெற்றது.
அம்பாள் விளையாட்டுக் கழம் 68 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், தோப்புக்காடு விளையாட்டுக் கழகம் 58 புள்ளிகளைப்பெற்று மூன்றாம் இடத்தையும், ஒளிச்சுடர் விளையாட்டுக் கழகம் 30 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தையும், சலஞ்சேர்ஸ் விளையாட்டுக் கழகம் 17 புள்ளிகளைப் பெற்று ஐந்தாவது இடத்தையும் பெற்றன.
(ம-23)

## சங்கானை பிரதேச செயலகம் இறுதிக்குத் தகுதி



யாழ்ப்பாணம், மார்ச் 6
யாழ்ப்பாண மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்பட்டுவரும் பிரதேச செயலக அணிகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத்தில் சங்கானை பிரதேச செயலக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் சங்கானை பிரதேச செயலக அணியை எதிர்த்து சாவகச்சேரி பிரதேச செயலக அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய சங்கானை பிரதேச செயலக அணி 22:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதிபெற்றது. (ம-422)

## சைக்கிள் ஓட்டத்தில் வவு. வீரர் முதலிடம்

வடக்கு மகாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் மாவட்டங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட ஆண்களுக்கான 105 கிலோ மீற்றர் சைக்கிள் ஓட்டப் போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த பி.பிரணவதாஸ் முதலாம் இடத்தைப் பிடித்தார். வவுனியா மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த அனுசன் இரண்டாம் இடத்தையும், முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த நிதர்சன் மூன்றாம் இடத்தையும் பிடித்தனர்.
(ம-23)

# இந்தியாவுக்கு எதிராக தகுந்த பாடம் கற்றுள்ளோம் வேகப்பந்து வீச்சுக்கான ஆடுகளங்கள் வேண்டாம்

## பிளாசிஸ் புலம்பல்



"வேகப்பந்துவீச்சுக்குச் சாதகமான ஆடுகளங்களை இனிக் கேட்கப்போவதில்லை. இந்தியாவுக்கு எதிராகச் சிறந்த பாடத்தைக் கற்றுக்கொண்டோம்" என்று தெரிவித்தார் தென்னாபிரிக்க அணியின் தலைவர் பிளாசிஸ். இந்திய அணி அண்மையில் தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் செய்து விளையாடியது. இந்தத் தொடரில் தமக்கு வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமான ஆடுகளங்களே வேண்டும் என்று தென்னாபிரிக்கா கேட்டுக் கொண்டது. இதன்படி வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமான ஆடுகளங்களே அமைக்கப்பட்டன. ஆனால் வழக்கம்போல் அல்லாமல் மிகச் சிறப்பாக தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர்களை எதிர்கொண்டது இந்தியா. இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர்களான பும்ரா, புவனேஸ்வர்குமார் இருவரும் மிகச் சிறப்பான பந்துவீச்சுப் பெறுதியை வெளிப்படுத்தினர். தமது திட்டம் தமக்கு எதிராகத் திரும்பியமை அடுத்தே பிளாசிஸ் இவ்வாறு தெரிவித்தார். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் தொடர்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ம)

# லெய்ப்டிக் – டொட்மொன்ட் ஆட்டம் சமநிலையில் முடிவு



ஜேர்மனியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற லெய்ப்டிக் - டொட்மொன்ட் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங் களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றதை அடுத்தே ஆட்டம் சமநிலையானது. (ம)


**அலுவலக தளபாடம் தேவை**

தனியார் நிறுவனம் ஒன்றுக்கு நல்ல பாவனையில் உள்ள வகுப்பறை கதிரை, மேசை மற்றும் வேறு தளபாடங்களும் தேவை. உரியவர்கள் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு - 077 340 0950

**விஸ்டம்**

தொழில் நுட்பக் கல்லூரி

இல 63 சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

A/L 2018 **தொழில் நுட்பப் பிரிவு**

இறுதிப் பரீட்சையை மையமாகக் கொண்ட விசேட வினாத்தாள் வகுப்புக்கள்

- பொறியியல் தொழில் நுட்பம்
- உயிர் முறைமைகள் தொழில் நுட்பம்
- தொழில் நுட்பத்திற்கான விஞ்ஞானம்
- ICT
- விவசாய விஞ்ஞானம்
- புவியியல்
- கணிதம் (7)
- தொடர்பாடலும் ஊடகக்கல்வியும்

A/L அனைத்துப் பிரிவு மாணவர்களும் பங்குபற்றலாம்

ஆரம்பம்: 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 தொடர்புக்கு 077 248 7774

**SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE**

O/L எழுதிய மாணவர், பல்கலைக்கழக, உயர்கல்வி மற்றும் பட்டதாரிகள், அரச, தனியார் அலுவலர்கள் இணையமுடியும்!

முதல்நாள் வகுப்பு இலவசம் – 10.03.2018

1. காலை 08–10 3.மதியம் 01–03
2. காலை 10–12 4.மாலை 03–05

ஒவ்வொரு பிரிவிலும் 20 பேர் மட்டும்! ஏதாவதொரு பிரிவில் இணையமுடியும்.

அனைவருக்குமான அறிமுக வகுப்பு காலை 08.00 மணிக்கு.

SAAMSON Experts in English Training

403, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோயிலடி) யாழ்நகர், 021 320 3313 077 1570 486

**A/L 2018 DAYCLASS**

புவியியல் - N.BABU

(அலகு ரீதியிலான மீட்டலும் பரீட்சைகளும் நடைபெறுகின்றன)

DMI - யாழ்.நகர்

C.C.A - சுன்னாகம்

ஆட்ஸ் அக்கடமி, புத்தூர்.

தொடர்பு - 077 936 5087

**ஆசிரியர் தேவை**

- அழகுக்கலை (Facial)
- தையல்கலை (Sewing)
- சிகை அலங்காரம் (Hairstyle)
- ஐசிங் (icing)



போன்ற பாடங்களுக்கு தகுதி உடைய ஆசிரியர்கள் 08.03.2018 வியாழக்கிழமை நேரில் சமூகம் தரவும்.

இடம் - உதயன் அலுவலகம், நெல்லியடி.

நேரம் - காலை 8.00 மணி

மொரட்டுவ, ரஜரட்ட, ஊவாவெல்ஸ மற்றும் பல்கலைக்கழக அனுமதிக்கான **பொது உளச்சார்பு பரீட்சைக்கான** (Aptitude Test) தயார்படுத்தல் வகுப்பு 08.03.2018 (வியாழன் 10.30 P.M)

**கோலாசிற்றி** 234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 077 843 5224

அறிமுகம் - Rs 250/=

**சிக்கன் பிரியாணி**

ப்றைட் சிக்கன் - றைஸ் & பைட்ஸ்

Fried Chicken - Rice & Bites

யாழ் பாடியில் 49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

021 222 6868, 077 736 0353, 075 987 5800 (C/58237) (13,17)


# அத்லெட்ரிகோ மட்ரிட் பார்சாவிடம் வீழ்ந்தது



ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பார்சிலோனா அணி அபார வெற்றிபெற்றது.

பார்சிலோனாவை எதிர்த்து அத்லெட்ரிகோ மட்ரிட் மோதியது. இரண்டும் பலம் வாய்ந்த அணிகள் என்பதால் ஆட்டத்தில் பெரியளவில் எதிர்பார்ப்புக்கள் இருந்தன. முதல் 25 நிமிடங்கள் வரையில் எந்த அணியாலும் கோல் எதுவும் பதிவுசெய்யப்படவில்லை. 26ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் நட்சத்திர வீரர் மெஸ்ஸி. 1:0 என்று பார்சிலோனாவின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியில் மாற்றங்கள் ஏற்படவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பார்சிலோனா அணி. (ம)

# மெஸ்ஸி 600 கோல்கள்



பன்னாட்டு கால்பந்தாட்ட அரங்கில் தனது 600ஆவது கோலைப் பதிவுசெய்தார் ஆர்ஜென்ரீனா அணியின் தலைவரும், பார்சிலோனா கழகத்தின் நட்சத்திர வீரருமான மெஸ்ஸி.

லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் அத்லெட்ரிகோ மட்ரிட்டை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பார்சிலோனா. மெஸ்ஸியே அந்தக் கோலைப் பதிவு செய்தார். இந்தக் கோல் பன்னாட்டு கால்பந்தாட்ட அரங்கில் மெஸ்ஸியின் 600ஆவது கோலாக அமைந்தது. அவர், பார்சிலோனாவுக் கான 539 கோல்களையும், ஆர்ஜென்ரீனாவுக் காக 61 கோல்களையும் பதிவுசெய்துள்ளார். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.